# யோகராணி கொழும்புக்குப் போகிறாள்




JPL
C3635

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகராணி கொழும்புக்குப் போகிறாள்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
16-3-1995
யாழ்ப்பாணம்

சோ. ராமேஸ்வரன்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
PUBLIC LIBRARY
JAFFNA.
111416
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

வெளியீடு:

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
கொழும்பு 2 – பானலுவ, பாதுக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN-955-610-097-0

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன வெளியீடு இல. 75
State Printing Corporation Publication No. 75

யோகராணி கொழும்புக்குப் போகிறாள் (நாவல்)
சோ. ராமேஸ்வரன்
முதலாவது பதிப்பு – செப்டம்பர் 1992
அட்டைப்படம் – ஒகஸ்ரீன் மொறாயஸ்
ஆசிரியரின் புகைப்படம் – அக்மி ஸ்ருடியோ, வெள்ளவத்தை
அச்சிட்டு வெளியிட்டோர் – அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், கொழும்பு 2, மற்றும் பாணலுவ, பாதுக்க.

Yogarani Columbukku Pokiral (Novel)
S. Rameswaran
First Edition — September, 1992.
Cover - Augustine Morais
Author's Photograph - Acme Studio, Wellawatte
Lithographed & Published by
State Printing Corporation
Colombo 2 and Panaluwa, Padukka.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

# ஆசிரியர் உரை

1969 ஆம் ஆண்டில் எழுத்துத்துறையில் புகுந்த நான் எண்பதாம் ஆண்டு களின் போது எண்ணற்ற நாவல்களை எழுதினேன். அவற்றில் ஒரு நாவல் தான் "யோகராணி கொழும்புக்குப் போகிறாள்". இந்நாவல் "மித்திரன்" தினசரியில் 1985 ஆம் ஆண்டில் தொடராக வெளியிடப்பட்டபோது பலரினதும் பாராட்டைப் பெற்றது. இதை ஏழு வருடங்கள் கழித்து மெருகூட்டி இப்போது உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

புத்தக வடிவில் வெளியிடப்படும் எனது முதலாவது நாவல் இதுவாகும். இதனைப் பிரசுரிப்பதற்கு அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் முன்வந்ததையிட்டு நான் அத்தாபனத்திற்கு பாராட்டுத் தெரிவிக்கும் அதேவேளை நன்றியும் கூறுகிறேன். இதுபோன்று இத்தாபனம் தமிழ் ஆக்கங்களை அச்சிட்டு வெளியிட வேண்டும் என எழுத்தாளர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னை எழுத்துலகிற்கு அறிமுகம் செய்து, வளர்த்து, பட்டை தீட்டிய "வீரகேசரி" வெளியீட்டு ஆசிரியர் திரு. பொன். ராஜகோபால் அவர்கள் இந்நாவல் குறித்து என்னுடன் பல தடவைகள் கலந்துரையாடி நாவலின் மெருகூட்டலுக்கு உறுதுணையாக இருந்தார். அவருக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

3/8 'ஐ' அடுக்கு,
அண்டர்சன் தொடர்மாடி,
கொழும்பு 5.

சோ. ராமேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

111416

## (1)

தபால்காரன் மணியடிக்கவே யோகராணியின் யோசனை இடைநடுவில் அறுந்தது. நிலத்தில் புதைந்திருந்த பார்வை உயர்ந்து வெளியே படர்ந்த போது தபால்காரன் முன்படலையை அரைவாசி திறந்து வைத்தபடி சுவாரஷ்யமாக அவளைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

''ஹா . . . . . லெட்டர்'' என உற்சாகமாகக் கூவியவள் தபால்காரனை நோக்கி துள்ளிக் குதித்தபடி ஓடினாள்.

''தங்கச்சி உனக்குத்தான் கடுதாசி'' என்ற தபால்காரன் தபாலை மெல்ல ஒப்படைத்து விட்டு ''நான் வாறன், முருகா'' என்றபடி சைக்கிள் 'பெடலை' மெல்ல மிதித்தான்.

கடித உறையை மேலோட்டமாகப் பார்த்தாள். அவள் பெயரும், முகவரியும் 'டைப்' செய்யப்பட்டிருந்தன. திடீரென இன்ப அலை நெஞ்சில் மோதுவது போன்ற உணர்ச்சி அவளுள் மேலோங்கியது. அவசரத்துடனும், ஆர்வத்துடனும் உறையைப் பிரித்தாள்.

கடிதத்திற்கு பார்வை பாய்ந்தது.

''உங்களை எழுதுவினைஞர் வேலைக்குத் தேர்ந்தெடுப்பதில் நாம் மகிழ்ச்சி கொள்கிறோம். எதிர்வரும் முதலாம் திகதி முதல் வேலைக்கு சமூகம் அளிக்கவும்.''

ஆங்கிலத்தில், சுருக்கமாக நாலு வரிகள் 'டைப்' செய்யப்பட்டிருந்தன. கீழே 'மனேஜிங் டைரக்டர்' என்று ஒருவரின் கையெழுத்து சிலந்தி வலையை நினைவூட்டியது.

யோகராணியினால் ஆனந்தத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவள் சின்ன இதயம் சந்தோஷ மிகுதியால் வெடித்து சிதறிவிடுமாப் போல் குதியாட்டம் போட்டது. உடல் முழுவதும் சந்தோஷம் தங்கு தடையின்றி ஓடி அவளைப் பரவசப்படுத்தியது. அந்தப் பரசவத்தை அவளால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

''அம்மா, எனக்கு வேலை கிடைச்சு விட்டுது'' எனக் கூவிக் கொண்டு சமையலறையை நோக்கி ஓடினாள்.

சோற்றுக் கஞ்சியை வடித்துக் கொண்டிருந்த மங்களம், மகள் கத்திக் கொண்டு வந்ததை சரிவர விளங்கிக் கொள்ளாமல் என்னவோ ஏதோவென்று பயந்துவிட்டாள். ''என்ன நடந்து விட்டுது'' எனத் துடிப்புடன் கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா எனக்கு வேலை கிடைச்சு விட்டுது. இனி என்ன, எங்கட கஷ்டமெல்லாம் தீர்ந்து விட்டுது. முதலாம் திகதிக்கிடையில் கொழும்புக்கு போக வேணும்" என்று உற்சாகத்துடன் கூறினாள்.

"கொழும்புக்கோ" என அதிர்ச்சியுடன் வினவிய தாயின் முகத்தில் கவலையும், பயமும் ஏக நேரத்தில் பரவின.

"ஏனம்மா பயப்படுகிறியள்? கொழும்புக்குத் தானே?"

"யோகம், இரண்டு வருஷத்திற்கு முந்தின கொழும்பு இப்ப இல்ல. கொழும்பு இப்ப மாறிப் போச்சுது. அங்கு நீ தனியாக இருக்கிறது பயங்கரம். வேலைக்கெண்டு அங்கை போகாதை" – தாயின் குரலில் வருத்தம் தோய்ந்திருந்தது.

"அப்படித்தான் எல்லாரும் சொல்லுவினம். ஆனால், பூரணம் அக்கா, தும்பளையில இருக்கிற திலகம் அக்கா ...... மற்றது ...... சிவனேஸ்வரி எல்லாரும் இரண்டு மூண்டு மாசத்திற்கு முந்தித்தானே வேலை கிடைச்சு கொழும்புக்கு போய் இருக்கினம்? அவையள் எல்லாம் சுகமாகத்தானே இருக்கினம்? "

"அதுகள் சுகமாகத்தான் இருக்குதுகள். ஆனால், அதுகளுண்ட தேப்பன், தாய்மார் இங்கை வயித்தில நெருப்பைக் கட்டிக் கொண்டு அவதிப்படுற சங்கதி எனக்கெல்லோ தெரியும். நீயும் அங்கை போனால் படுக்கையில் கிடக்கிற கொப்பரும், நானும் என்ன பாடுபடுவம் என்டு உனக்கு தெரியும் தானே? நீ கட்டாயம் வேலைக்கு போக வேணுமோ? "

தாயின் பேச்சு-அதில் மறைந்திருந்த உண்மை-யோகராணியின் உற்சாகத்தைத் தணித்தது. களை கட்டியிருந்த முகத்தில் ஏமாற்றம் வியாபித்தது. கொஞ்சம் கொஞ்சமாக ஏமாற்றம் மறைந்து சோகம் குடி கொள்ளவே தலை குனிந்தாள். கால் பெருவிரலினால் நிலத்தில் எழுந்தமான கோலம் போட்டாள்.

இதயம் ஈரமாகியது.

மூத்தவள் என்ற அந்ததஸ்துக்குரியவள் யோகராணி. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி எய்தியபின் நிதி நிலைமை காரணமாக ஆர்வம், ஆசை, திறமை, முன்னேற்றம் யாவற்றையும் மூட்டை கட்டி மனதுக்குள் அடக்கி வைத்துவிட்டு வீட்டிலேயே முடங்கிக் கிடக்கும் ஒரு பிறவி அவள்.

யோகராணிக்கு அடுத்தவள்-வயதில் இரண்டு வயது குறைந்தவள்-சுசிலா. 'ஏ எல்' படிக்கிறாள். படிப்பில் கெட்டிக்காரி. மிகவும் துடிப்பானவள். வாய்க்காரி என்ற பட்டத்தை இளைஞர்களிடையே பெற்றவள்.

கடைக்குட்டி மோகன் பத்தாம் வகுப்பில் படிக்கிறான். முன் கோபத்திற்கு அர்த்தம் கண்டு பிடிக்க அகராதியை திருப்பத் தேவையில்லை. அவனிடம் அதை அறியலாம். புரட்சிகர எண்ணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவன். மார்க்ஸீய புத்தகங்களில் மூழ்குவதில் மனம் மகிழ்பவன். மேடைகளில் முழங்கவும் பின் நிற்கமாட்டான். துணிச் சலுக்கு பெயர் போனவன்.

யோகராணி மெல்லிய தோற்றம் கொண்டவள். ஒல்லியான இடையும், தட்டைமான நெஞ்சும், நீண்ட முகமும், நடு வகிடு வைத்த இரட்டைப் பின்னலும், பொது நிறமும் "பெட்டை பரவா யில்லை" என்று கூறவைக்கும் அளவுக்கு வைத்திருந்தது. அவளின் உருவத்தின் சிறப்பு அம்சம் 'குறு குறு' விழிகள்தான்.

வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த போதும், குடும்பத்தின் அத்தியா வசியத்தின் நிமித்தம் வேலை ஒன்றைத் தேடவேண்டும் என்ற அவசியம் அவளுள் சில மாதங்களாக வேரூன்றி இருந்தது. ஓரிரு வேளை சாப்பாட்டை தியாகம் செய்ய வேண்டிய நிலை எற்பட்ட போது – தந்தையின் வருத்தத்திற்கு மருந்து வாங்க காசில்லாமல் தவித்தபோது-வேலை தேடும் அவசியம் கிளை பரப்பியது.

தினசரிகளில் வரும் விளம்பரங்களைப் பார்த்து பொருத்தமான வேலைகளுக்கு விண்ணப்பித்தாள். ஒரு சில இடங்களில் இருந்து 'இன்டர்வியூக்கு' வருமாறு கடிதமும் வந்தது. நிதி போதாமை, நாட்டு நிலைமை, கொழும்புக்கு போக துணை இல்லாமை போன்ற இன்ன பிற காரணங்களால் எந்தவொரு 'இன்டர்வியூக்கும்' கொழு ம்புக்கு போகச் சந்தர்ப்பம் கிட்டவில்லை. தலை விதியை நொந்தது தான் மிச்சம்.

உள்ளூரில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில், பனம் பொருள் அபிவிருத்திச் சபையில், யாழ்ப்பாணம் ஐக்கிய சங்கத்தில் ஒரு வேலையைப் பெற முயற்சித்தாள். யார் யாரையோ சிபார்சுக்கு அணுகினாள். ஆனால், பணமும், நேரமும், அலைச்சலும் தான் விரயமாகின. அவள் கனவு நிறைவேறவில்லை.

அமைச்சர் ஒருவரின் தூரத்து உறவுக்காரர் ஒருவர் அவள் அப்பாவுக்கு தெரிந்தவர். அந்தப் "பெரியவர்" பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்த்து விடுவதாகக் கூறி ஆயிரம் ரூபாவை கைமாத்தாகப் பெற்றார். அத்துடன் அந்த மனுஷன் ஊர் பக்கமே தலைகாட்டவில்லை. அவர் ஊரில் பலரிடம் 'கைமாத்தாக' ஆயிரக் கணக்கில் வசூலித்துக் கொண்டு கனடாவுக்கோ, அவுஸ்திரேலியாவு க்கோ பயணமாகி விட்டதாக ஊருக்குள் ஒரு 'குசுகுசு' அடிப்பட்டது.

அந்த ஏமாற்றுக்காரனால் யோகராணி ஒரு வாரமாக பட்டினி கிடந்தாள்.

யோகராணி மனதைத் தளரவிடவில்லை. வேலைக்கு விண்ணப் பித்துக் கொண்டே இருந்தாள். அவள் முயற்சி வீண் போகவில்லை. கொழும்பில் இருந்த கம்பனியொன்றுக்கு விண்ணப்பித்த போது அதன் யாழ்ப்பாணக் கிளையில் 'இன்டர்வியூ' நடந்தது. அது அவளுக்கு வசதியாகி விட்டது. சில ரூபாய்களைச் செலவளித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரது துணையுமின்றி 'இன்டர்வியூவுக்கு' போய்விட்டு வந்தாள். 'இன்டர்வியூ' செய்த மூவரில் இருவர் அவளை தேர்ந்தெடுப்போம் என்ற சாரப்பட அவளுடன் பேசியதனால் துளியளவு நம்பிக்கையுடன் வீடு திரும்பினாள். நம்பிக்கை பலனை அளித்து விட்டது.

சந்தர்ப்பம் அரவணைத்துள்ளது. அதை உதறித் தள்ள முடியாது. அப்படியே உதறித் தள்ளினால் ...... குடும்பத்தின் அத்திவாரம் ஆட்டம் கண்டு, முழுவதும் சிதைந்து அவள் தலைமேல் பொறிந்து விடும். அதை தாங்கும் சக்தி அவளிடம் கொஞ்சம், கொஞ்சமாக வெளியேறிக் கொண்டு வருகிறது. எனவே, இவ் விதமான ஒரு நிலையை மேலும் அவளால் வரவேற்க முடியாது.

எல்லாவற்றையும் எண்ண, எண்ண யோகராணிக்கு வேதனை தொண்டையை அடைத்தது. கூடவே தாய் மீது சினம் பொங்கியது.

"அம்மா, அப்படியெண்டால் என்னை என்ன செய்யச் சொல்லுறியள்?" என சினத்துடன் வெடித்தாள்.

தாய் சில வினாடிகள் மகளின் முகத்தை வாஞ்சையுடன் நோக்கினாள். அவள் கண்களை ஒரு திவலை மறைத்திருந்தது.

"யோகம், எங்கடை குடும்ப நிலைஉனக்குத்தெரியும் தானே?"

யோகராணி இடைமறித்தாள். "தெரிஞ்சு கொண்டும் வேலைக்கு போக வேண்டாம் எண்டு சதிர் ஆடப் பாக்கிறீங்களே" எனச் சூடாகக் கத்தினாள்.

"பொறு யோகம், சொல்லுறதைக் கேளு. கொப்பர் இரண்டு வருஷமாகப் படுக்கையில் கிடக்கிறார். அவருக்கு ஒண்டுமே செய்ய முடியாத நிலை. அது எங்கட கர்ம வினை ........அவர் கொஞ்சம், கொஞ்சமாகச் சேர்த்த காசெல்லாம் குடும்ப செலவுக்கும், சுசிலா, மோகன்டை படிப்புக்கெண்டும் சிலவழிஞ்சு போச்சுது. இனி நீ உழைச்சால் தான் நாலு காசு தேறும். சுசிலா, மோகன் இரண்டும் படிச்சு ஒரு மனுஷராகலாம். அதுகள் படிச்சு ஒரு வேலையை எடுத்து இந்த குடும்ப பாரத்தை ஏற்றால்தான் உன்ர கலியாணத்தைப் பற்றிக்கூட யோசிக்கலாம் ..............."

தமது குடும்ப நிலையின் அவலத்தை தாய் தெட்டத்தெளிவாக உணர்த்திய போது யோகராணியின் வேதனை பன்மடங்காகியது. தகப்பன் பாரிசவாதம் வந்து கமத்தை விட்ட பின்னர் அவளது குடும்பம் ஒவ்வொரு நாளையும் கழிப்பதற்கு பட்டபாடு அவளுக்குத் தெரியும்.

தகப்பனின் மருந்துக்கென்று எவ்வளவு செலவளிந்திருக்கும்? சுசிலா, மோகனின் 'டியூஷனுக்கென்று' எவ்வளவு செலவளிந்திருக்கும்? இவை தவிர நாளாந்தச் செலவுகளுக்கு எவ்வளவு செலவளிந்திருக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது கலியாணத்திற்கென்று வங்கியில் போட்டிருந்த பதினையாயிரம் ரூபா இரண்டு வருடங்களில் கரைந்து விட்டது. போதாக்குறைக்கு இரண்டு பவுண் சங்கிலியும், அரைப்பவுண் காதணிகளும் வட்டிக்கடையில் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

யோகராணி வேலை செய்தால்தான் அக்குடும்பம் ஓரளவு நிமிரக்கூடிய நிலையை அடைய முடியும். அந்த உண்மை தெரிந்திருந்தும் மகளின் எதிர்காலத்தில் அசகு, பிசகாக ஏதாவது நடந்து விடக்கூடாது என்ற ஆற்றாமையினால், பாசத் துடிப்பினால் யோகராணி கொழும்புக்கு வேலையின் நிமித்தம் செல்வதற்கு மங்களம் தயக்கம் தெரிவித்தாள். அவளது தயக்கத்திலும் நியாயம் இருக்கத்தான் செய்தது. அந்த தயக்கத்தை வெளிக்காட்டிய போதும், உள்ளூர அணைய முற்படும் குடும்ப விளக்கை எரிய வைக்கத் துடிக்கும் மகளின் துணிச்சலுக்கு தடை போடுவது தவறான செயல் என்ற உண்மை புலப்பட்டது. சாதக, பாதகங்களை அலசியவள் ஒரு முடிவுக்கு வந்தாள்.

"யோகம், எல்லாத்தையும் கூட்டிக் கழிச்சால் நீ வேலைக்கு போற முடிவில நான் குறுக்க நிண்டால் நாளைக்கு எனக்கு பழிச் சொல் வரலாம். என்றபடியால் நீ வேலைக்குப் போறதில எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், மனசுக்குள்ள. தான் ஏதோ ஒரு பயம் வாட்டிக் கொண்டு இருக்கிறது. புதிய இடம், புதிய சூழ்நிலை......... நீ எப்படித்தான் சரிக்கட்டப் போறியோ?"

"அம்மா, ஒண்டுக்குமே பயப்படாதீங்க. எல்லாம் கடவுள் விட்ட வழி எண்டு இருங்க. எனக்கு ஒண்டுமே நடக்காது".

யோகராணியின் குரலில் தொனித்த உறுதி மங்களத்தின் ஆறுதலற்ற மனதுக்கு ஒத்தடம் கொடுத்தது.

"ஊம்" எனப்பெருமூச்செறிந்தவள், "ஏழைகளுக்கு கடவுள் விட்ட வழிதான். அப்பனே பிள்ளையாரப்பா" என ஈரமான குரலில் முனகினாள்.

## (2)

கொளுத்தும் வெயில்.

பருத்தித்துறை டவுன் வெறிச்சோடிக் கிடந்தது. ஓரிருவரின் நடமாட்டம் அத்தி பூத்தாற் போல தென்பட்டது.

நெல்லியடியில் இருக்கும் சந்திராவின் வீட்டுக்கு போவதற்காக யோகராணி கடையொன்றின் நிழலில் பஸ்ஸை எதிர்நோக்கிக் காத்திருந்தாள். வெயிலின் அகோரம் முழு உடலையும் தணலாக்க முற்பட்டது.

சந்திரா, அவளின் வகுப்புத் தோழி. பரம இரகசியங்களைப் பரிமாறிக் கொள்ளுமளவுக்கு நட்புறவு இருவருக்குமிடையே பரிணமித்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைமணி நேரமாகக் காத்திருந்தும் பஸ்சைக் காணவில்லை. சலிப்பும், கசப்பும் மனதினுள் ஊடுருவின.

'சே! எப்பத்தான் எங்கட பஸ் சேவை சீர்திருந்தப் போகிறதோ தெரியவில்ல' என்று அலுத்தவள் எண்ணிக்கையில் அடங்காத தடவை தன் தலைவிதியை நொந்தாள்.

பஸ் வருகிறதா என மீண்டும் ஒரு தடவை நோட்டம் விட்டாள். ஒன்றையுமே காணவில்லை. புழுதியைக் கிளப்பிக் கொண்டு ஆட்டு மந்தைக் கூட்டம் ஒன்று வரவே ஆத்திரம் கட்டை மீற முயன்றது. வெகு சிரமத்துடன் உணர்ச்சியை அடக்கினாள்.

பேச்சுத் துணைக்கு யாராவது ஒருவர் இருந்தாலாவது கால் கடுக்க நிற்பதையிட்டு சினம் கொள்ளமாட்டாள்.

நேரம் தன்பாட்டில் முன்னேறியது.

பஸ் இனியும் வரும் என்ற நம்பிக்கை மனதை விட்டகன்றது. திரும்பி வீட்டுக்குப் போவோம் என முடிவு எடுத்துக் கொண்டிருக்கும் போது திடீரென எழுந்த சைக்கிள் 'பிரேக்கின்' ஒலி அவளை திடுக்கிட வைத்தது.

சைக்கிள் ஓட்டியை கோபத்துடன் நோக்கியவளுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

புன்முறுவலை உதிர்த்த வண்ணம் மனோகரன் கீழே காலூன்றியபடி சைக்கிளில் அமர்ந்திருந்தான்.

''ஓ! நீங்களா? நான் பயந்து விட்டன்'' என யோகராணி வியப்பு மாறாத நிலையில் கனிவுடன் கூறினாள்.

''நானே தான்'' என்ற மனோகரன் பற்கள் தெரிய விஷமமாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் தெரிந்த கவர்ச்சி அவள் மனதை அலைபாய வைத்தது.

சந்திராவின் தமையன் தான் மனோகரன். 'ஏ எல்' படித்து விட்டு 'வாஸிட்டி அட்மிஷன்' கிடைக்காமல் போகவே இருபத்தி மூன்று வயதாகியும் வேலை வெட்டியின்றி அலைகிறான். உள்ளூரில் வேலை கிடைக்காவிட்டாலும் வெளியூரிலாவது கிடைக்காதா என்பதில் நம்பிக்கை வைத்து முயற்சி செய்பவன்.

வசீகரத்தோற்றம் கொண்டவன். அடர்ந்த மீசையும், தாடியும் அவனைப் புரட்சி வாதியாக தோற்றமளிக்க வைத்தாலும் அவனுக்கும், அதற்கும் சம்பந்தமில்லை.

மனோகரனுடன் யோகராணிக்கு நெருங்கிய பழக்கம் இருக்கிறது. சந்திராவை சந்திக்கப் போகும் நாட்களில் எல்லாம் மனோகரனுடன் அளவளாவத் தவற மாட்டாள். மனோகரனின் புத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்மை, தெளிவான பேச்சு, அரசியல் ஞானம் போன்றவற்றில் யோகராணி பெருமதிப்பு வைத்திருந்தாள்.

"மனோ, உங்கட வீட்டுக்குப் போறதுக்குத்தான் நிக்கிறன். அரை மணி நேரமாக பஸ்ஸைக் காணவில்லை" என அங்கலாயித்தவள், கை லேஞ்சியினால் நெற்றியில் அரும்பி இருந்த வியர்வையைத் தொடைத்தாள்.

"இந்த நேரத்தில பஸ் எடுக்கிறது கொஞ்சம் கஷ்டம். டவுனே காய்ஞ்சு போச்சுது. ஆர் இப்ப பஸ் விடப் போறான்? பஸ்சிலை போறதை விட சைக்கிள்ல சுகமாக போய்விடலாம். நீர் 'ஓம்' என்டு சொன்னால் சைக்கிள்ல டபிள் ஏத்துறன்" என்றவன் வேடிக்கையாக அவளை நோக்கினான்.

யோகராணியிடமிருந்து கபடமற்ற சிரிப்பு ஒன்று சத்தமின்றி வெளிப்பட்டது, நாணத்தின் ரேகைகள் கன்னங்களை அரவணைத்தன.

"அதுக்கு வேறை ஆரையும் பாருங்கோ" - துடுக்குடன் கூறினாள்.

"நீர் இருக்கக்கிலை நான் ஏன் வேறை ஆரையும் பார்க்க வேணும்?"— பட்டென்று கேட்டவன் அவளை சுவாரஷ்யத்துடன் அலசினான்.

அவனை மடக்கும் விதத்தில் பதில் அளிக்க வார்த்தைகளை கோர்க்க முற்பட்டும் முடியாமல் திணறினாள்.

அரை நிமிட மௌனம் அங்கு ஆட்சி புரிந்தது.யோகராணியின் தர்மசங்கட நிலை அவனுக்கு சிரிப்பை வரவழைத்தது. சிரித்தபடியே, "மெய்யே ஒரு விஷயம் கேள்விப்பட்டன். உண்மையோ?" என மொட்டையாகக் கேட்டான்.

என்ன விஷயம் என அவள் விழிகளால் வினா எழுப்பினாள்.

"உமக்கு கொழும்பில வேலை கிடைச்சிருக்குதாமே?"

"ஓ! அதுக்கிடையிலஇந்த 'நியூஸ்' உங்களுக்கு கிடைச்சு விட்டுதோ?"

"சந்திரா தான் சொன்னது .....அங்கை போக உத்தேசமோ?"

"ஓமோம்."

"பயமில்லையோ?"

"என்ன பயம்?"

"பேந்தும் ஒரு கலவரம் வருமாம்."

"வந்தால் என்னவாம்?"

"வெட்டுவாங்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வெட்டட்டுமே, நான் செத்தால் ஆருக்கு கவலை?''

''எனக்கு இல்லையோ?''

கலகலவென சிரித்த யோகராணி ''மனோ, நீங்க இப்படி கதைக்கிறது எனக்குப் பிடிக்கயில்ல'' என மென்மையுடன் கூறினாள்.

மனோகரனின் முகம் சுருங்கியது.

''அப்ப நான் வாறன்.'' மனோகரன் அகன்றான்.

மனோகரனின் மனதை புண்படுத்தி விட்டேனே என்ற கவலை யோகராணியைச் சில வினாடிகள் வரை வாட்டியது.

பஸ்சில் ஏறிய பின் கவலை உருகி விட்டது.

## (3)

சரியாகக் கணக்கிட்டால் மூன்றரை வருடங்களுக்கு முன் கொழும்பில் ஒரு கல்யாணம் நடந்தது. யோகராணியின் ஒன்றுவிட்ட அண்ணன் பாலசுப்பிரமணியத்திற்கு நடந்த கல்யாணம் அது. அக் கல்யாணத்திற்கு யோகராணி தகப்பனுடன் சென்றிருந்தாள். கல்யாணம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அமர்க்களப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தின் போதே யோகராணிக்கு கொழும்பைச் சுற்றிப் பார்க்கக் கூடியதாக இருந்தது. தகப்பன் பதினைந்து வருஷங்களுக்கு முன் மருதானையில் ஒரு பலசரக்குக் கடையில் வேலை செய்திருந்தபடியால் கொழும்பின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருந்தார்.

ஓய்வு கிடைத்த போதெல்லாம் தெகிவளை மிருகக்காட்சிசாலை, 'கோல் பேஸ்' கடற்கரை, நூதனசாலை என்று யோகராணி போய்வந்தாள். லிபர்ட்டி தியேட்டரில் ஒரு ஆங்கிலப்படமும் பார்த்து மகிழ்ந்தாள்.

இறுதி நாள் மாலை வரை கொழும்பின் உன்மத்தங்களைப் பார்த்து அதிசயித்தவள், அன்றிரவு மனதை கொழும்பில் பறி கொடுத்து விட்டு மெயில் ரயிலில் ஊருக்குப் பயணம் கட்டினாள்.

இந்த ஒரு வார உல்லாச வாழ்க்கை யோகராணியின் பட்டிக்காட்டு உள்ளத்தில் பசுமையை வளர்த்தது. குறுகிய வட்டத்துக்குள், மட்டுப்படுத்தப்பட்ட ஆசைகளுடன் வாழ்ந்தவளுக்கு கொழும்பின் நாகரீகம் மீண்டும் 'வா வா' என வரவேற்பு வழங்கியது. என்றாவது ஒரு நாள் கொழும்புக்கு சென்று வேலை பார்க்க வேண்டும் என்ற ஆசை உள்ளத்தில் துளிர் விட்டது. நாளடைவில் அந்த ஆசை வேரூன்றியது.

ஆனால், அதன் பின் கொழும்பில் நடந்த ''அந்த'' கலவர சம்பவங்கள்-இருண்ட நாட்கள் - அவளது ஆசைக்கு சாவு மணி அடித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பனும் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் சரியவே கொழும்புக்குப் போகும் எண்ணத்தை மறந்தாள். தகப்பன் குணம் பெறவில்லை. படுத்த படுக்கையானார். அடுப்படியில் பூனை உறங்கிற நிலைமை ஏற்பட்டது.

குடும்பத்தின் முழுப்பாரத்தையும் யோகராணியே சுமக்க வேண்டிய நிலை தோன்றிய போது பாலைவனத்துக்குப் போய் உழைக்கவும் தயாரானாள். எனினும், அவள் உள்ளத்தினுள் முடங்கிப் போன ஆசை நிறைவேறுமாப் போல கொழும்பிலேயே வேலை கிடைத்து விட்டது.

கொழும்பில் புதிய அத்தியாயம் ஒன்றை அவள் ஆரம்பிக்கப் போகிறாள்.

வாழ்க்கையின் இளமைக் காலத்தையும், நடுத்தர வயதுக் காலத்தையும் கடும் உழைப்பில் செலவளித்த செல்லையா பாரிச வாதம் பீடிக்கும் வரை தனது குடும்பத்தை ஆரோக்கிய நிலையில் வைத்திருக்கத் தவறவில்லை. பாரிச வாதம் வந்து படுக்கையில் வீழ்ந்த பின் குடும்பத்தைக் கவனிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார். ஏமாற்றம், வேதனை, விரக்தி ஆகியன வாழ்க்கையின் முக்கால்வாசிப் பகுதியையும் ஆக்கிரமிக்கவே நடைப் பிணமாக வாழலானார்.

குடும்பத்தில் ஒதுக்கப்பட்ட நிலையில் - சாப்பிடுவதும் உறங்குவதுமாக விளங்கிய செல்லையா, யோகராணிக்கு வேலை கிடைத்ததை அறிந்ததில் இருந்து புத்துணர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார். யோகராணி கொழும்புக்கு போவதற்கான ஆயத்தங்கள் செய்தபோது அவை பற்றியெல்லாம் கேட்டு அறிந்து கொண்டார். குடும்பத்தின் விடி விளக்காக அவள் திகழப் போகிறாள் என்பதையிட்டு அவர் மன மகிழ்ந்தார்.

கல்யாணத்திற்கென கழுத்து நீட்டத் தயாராக இருக்கும் வயதுள்ள தனது மகள் குடும்பத்தின் குனிவை நிமிரச் செய்வதற்காக வேலைக்குச் செல்ல வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டாளே என்ற ஆற்றாமை அவர் நெஞ்சில் வெடிப்புக்களை ஏற்படுத்துவது வழமை. ஆனால், கடந்த சில நாட்களாக அந்த துயர எண்ணம் அவர் மனதை விட்டு அகன்றொழிந்தது. அடிக்கடி மகளைக் கூப்பிட்டு கொழும்பில் காரிய கருமங்களை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதையிட்டு புத்திமதி சொன்னார்.

வெகுளித்தனத்தை மனதில் அடர்த்தியாக அடக்கி வைத்திருந்த போதும் வாழ்க்கையின் அடி நுனியைத் துலாம்பரமாக பிரித்தறியக் கூடிய ஆற்றலை யோகராணி பெற்றிருந்தாள். தந்தையின் புத்திமதிகள் அவளுக்கு அர்த்தமற்றதாக விளங்கிய போதும் தந்தையின் மனம் நோகக்கூடாது என்ற எண்ணத்தில் ஆவலுடன் செவிமடுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிள்ளை, எங்க தங்குவதாக உத்தேசம்'' என செல்லையா காலையில் கேட்டார்.

'''அதைப் பற்றித்தான் இன்னும் முடிவெடுக்க இல்ல. மணியம் அண்ணனோட தங்கலாம், அல்லது சந்திராவின்ர அக்கா வீட்டில தங்கலாம்.''

''மணியத்தோட தங்க இடமிருக்குதோ? அது மட்டுமட்டான 'அனெக்ஸ்' எண்டு தானே சொன்னவன்? நீ அங்கை இருந்தால் அவையளுக்கு இடைஞ்சல். அது சரிப்பட்டு வராது...... சந்திராவின்ர அக்கா எங்கை இருக்கிறாவாம்?''

''தெகிவளையில ஒரு இரண்டு அறை வீட்டில.''

''வீட்டில புருஷனை தவிர வேறை ஆரும் இருக்கினமோ?''

''இல்லையாம்.''

''அப்ப உனக்கு எண்டு ஒரு அறை ஒதுக்குவினமாமோ?''

''அது தெரியாது, சந்திராவிட்ட போய் கதைச்சால் தான் எல்லாம் தெரியும்.''

''அப்ப போயிட்டு வாவன்.''

''சமைச்சுப் போட்டு மத்தியானம் போலபோயிட்டு வாறன்.''

சந்திராவின் வீட்டுக்கு போவதற்காக பருத்தித்துறை டவுனில் நின்ற வேளையில் தான் அவள் எதிர்பாராத விதமாக மனோகரனைச் சந்தித்தாள்.

## (4)

களைப்பு. சோர்வு - இரண்டுமே கெட்டியாகப் பிடிக்கப்பட்ட நிலையில் - வியர்வையினால மேல் சட்டை தெப்பமாக நனைந்திருந்த நிலையில் - சந்திராவின் வீட்டில் காலடி எடுத்து வைத்தாள் யோகராணி.

பஸ்சின் சனநெரிசலும், வெயிலின் அகோரமும் களைப்பினை அவளுள் நுளைத்திருந்தன. குறுகிய தூரத்தைக் கடக்க பஸ் எடுத்தகால அவகாசம் சோர்வினை ஏற்படுத்தி இருந்தது.

கொழும்பில் வேலை செய்யும் நாட்களில் காலையிலும், மாலையிலும் இவ்விதமான அனுபவத்தைப் பெறவேண்டும் என்ற எண்ணம் மனதினுள் எட்டிப் பார்த்த போதெல்லாம் மெல்லிய வேதனை ஆட்கொண்டது. தன்னைப் போல எத்தனையோ பெண்கள் எப்படித்தான் இந்த கசப்பான அனுபவத்தினை தாங்கிக் கொள்கிறார்களோ என வியந்தாள்.

ஈரத்தலையைத் துவட்டிக் கொண்டு சந்திரா பாத்ரூமில் இருந்து வெளியேறி தன்னை நோக்கி வருவதை யோகராணி அவதானித்தாள். விலையுயர்ந்த 'நைட்டி' யொன்று சந்திராவின் மேனியை அலங்கரித்திருந்தது. சோப்பின் நறுமணம் யோகராணியின் மூக்கினுள் நுழைந்து பசுமை உணர்வைத் தோற்றுவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சரியம் குத்திட்ட விழிகளுடன் நிற்கும் தோழியைக் கண்டு சந்திரா புன்முறுவல் பூத்தாள். ஆச்சரியத்தை அகற்றி விட்டு யோகராணி பதிலுக்கு புன்முறுவலை வெளியிட்டாள்.

''வாரும் . . . . வாரும், என்ன வெட்கப்பட்டு அங்கை நிற்கி றீர்? கனநாளைக்குப் பிறகு இந்தப் பக்கம் வாறீர்? என்ன புதினம்?'' என சந்திரா கேள்விகளை அடுக்கியபடி, மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

''முந்தியைப் போல இங்கை வரமுடியுமோ?'' என யோகராணி இழுத்தாள்.

''உண்மைதான். ஊருக்குள்ளை கரைச்சல் மெத்திப் போச்சுது'' என்றபடி யோகராணியின் கையைப் பற்றியபடி விறாந்தைக்கு கூட் டிச் சென்றாள். நாற்காலியொன்றில் அவளை இருத்தினாள்.

''யோகம் கொஞ்சம் இரும். உடுப்பை மாத்திப்போட்டு விட்டு வாறன்'' என்றபடி சந்திரா உள்ளே விரைந்தாள்.

யோகராணி வீட்டினுள் திருட்டுப் பார்வை ஒன்றைப் படரவிட் டாள். நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்த 'ஹோலை' அவள் கண் கள் அலசின. முன்னர் பலமுறை ஹோலின் கவர்ச்சியை ரசித்தி ருந்த போதும் மீண்டும் ஒரு முறை பார்த்து பரவசப்பட்டாள்.

'குஷன்' போட்ட 'ஸெட்டி' களும்.......... கண்ணாடி 'ஷோ கேஸ'ும்'.... இயற்கைக் காட்சிகளை அடக்கியபடி சுவரில் தொங்கிய ஓவியங்களும்.........இருபத்தியேழு அங்குல டி. வியும்.......'ரூ இன் வன்' கசட் ரேடியோவும்....... ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து பெருமூச்செறிந்தாள்.

இல்லாமை, இயலாமை நிலைமைகள், தனது—தன் குடும்பத் தின் சொத்தாக விளங்குவதை நினைத்து மனம் கலங்கினாள்.

'எங்கட வீட்டு ஹோலில என்ன இருக்குது? ஒரு ஆன கதிரை கூட இருக்குதோ? எல்லாமே உடைந்த, கிழிந்த கதிரைகள் தான். ஷோ கேஸ்?..... அதை நினைச்சுக் கூட பார்க்க முடியாத நிலையில விளங்குகிறம். ஹோால் சுவரில இருக்கிற ஊத்தை! எப்பத்தான் வெள்ளை அடிக்கப் போறோமோ?'

உள்ளத்தினுள் புகுந்திருந்த வேதனை பன்மடங்காகியது. வேலைக்கு போய் உழைத்து நாலு காசை சேமித்து வீட்டின் நிலையை உயர்த்த வேண்டும் என்ற உத்வேகம் உழன்று கொண்டிருக்கும் மனதினுள் புகுந்தது.

சந்திராவின் தந்தை விட்டுச் சென்ற சேமிப்பு அவர்களை வசதியாக வாழ வைத்தது. அந்த சேமிப்பு அவளின் அக்கா சுபத்தி ராவை பெரிய குடும்பத்தில் கரைசேர்த்தது. சுபத்திராவின் கண வன் ராஜரட்னம் ஒரு என்ஜினியர். மாதச் சம்பளம் கணிசம். தந்தையின் சொத்தும் எஞ்சி இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணம் முடித்த பின் சுபத்திரா கணவருடன் கொழும்புக்குச் சென்று விட்டாள். ஆயிரத்து எழுநூறு ரூபாய் வாடகை கொடுத்து பல வசதிகளுடன் வாழ்கிறாள்.

சந்திராவின் திருமணத்தைப் பொறுத்தளவில் விதி அவளுடன் சதிராடியது. பல இடங்களில் அவளுக்கு கலியாணம் பேசினார்கள். அழகு, அறிவு, அந்தஸ்து, பணம் யாவும் இருந்தும் ஒரு சம்பந்தமும் சரிவரவில்லை. சாதகப் பொருத்தமின்மை கலியாணத்தை ஒத்தி வைத்தது.

'சந்திராவின்ர ஓலை குற்றப்பட்டது. ஏழிலை செவ்வாயாம்' என்று ஊரவர்கள் 'குசுகுசு'ப்பதை கூட யோகராணி காதாரக் கேட்டிருக்கிறாள்.

வாழ்க்கையின் உயர்மட்ட நிலையில் விளங்கும் சந்திராவே திருமணத்தை எட்டிப் பிடிக்க முடியாத நிலையில் திகழும் போது, வாழ்க்கையின் அடிமட்டத்தில் விளங்கும் தனது திருமணத்தைப் பற்றி எண்ணிப்பார்க்க முடியுமா என யோகராணி தன்னுள் தவறாது கேட்பதுண்டு. அந்த எண்ணம் மீண்டும்—சந்திராவின் வீட்டில் எழுந்து அவளின் சிந்தனா சக்தியை எங்கேயெல்லாமோ இழுத்துச் சென்றது.

''என்ன பலத்த யோசனை?''

தோழியின் குரல் யோகராணியின் சிந்தனையைக் குழப்பியது.

சிந்தனாவுலகில் இருந்து வெளிப்பட்டு சுயநினைவுக்குத் திரும்பியவள், தேவதை போல் நிற்கும் சந்திராவைக் கண்டு, அகல விரிந்த கண்களைக் குறுக்க முடியாமல் திணறினாள்.

பலவித வர்ணக் கலவைகளை அள்ளி எடுத்து தெளித்தாற் போன்று விளங்கிய 'மெக்ஸி' சந்திராவின் அழகை மெருகூட்டி இருந்தது. அந்த அழகு யோகராணியை சொக்க வைத்து விட்டது.

''என்ன ஒரு மாதிரி பார்க்கிறீர்?'' எனக் கேட்ட சந்திரா அவள் முன்பாக அமர்ந்தாள்.

''ஒன்றுமில்லை.''

''இந்த 'மெக்ஸி' நல்லதோ?''

''வடிவாக இருக்குது.''

''துபாயில இருக்கிற 'மயில்' அங்கிள் அனுப்பினவர்.''

''எனக்கு குயில் அங்கிள் அனுப்புவார்'' என்ற யோகராணி 'கடகட' வென நகைத்தாள். அவள் கபடமற்ற சிரிப்பில் சந்திராவும் கலந்து கொண்டாள்.

தாழ்வுணர்ச்சியில் இருந்து விடுபட முயலும் போதெல்லாம் இப்படியான ஜோக்குகளைக் கூறிச் சமாளிப்பது யோகராணியின் வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் புதினங்களை அலசுவதில் அரைமணியைக் கழித்தார்கள். அதன் பின் ஒரு சில நிமிட நேர மௌனம் நிலவியது. அதை யோகராணி தனக்குச் சாதகமாக்கினாள்.

கொழும்பில் - சுபத்திராவின் வீட்டில்-ஓர் அறைதேட மட்டும் தற்காலிகமாக தான் தங்கலாமா என தோழியிடம் வினவினாள்.

"ஓ யெஸ் தங்கலாம். அதற்கு என்ன ஆட்சேபணை?"

''உம்மட அக்கா விரும்புவாவோ தெரியாது.''

''அவவும் என்னைப் போலத்தான். அதைப் பற்றி நீர் கவலைப்படாதையும்.''

''உண்மை தானே?''

''ஓமோம் . . . . . யோகம், இப்ப இரண்டு மூண்டு நாளா உம்மைப் பற்றித்தான் யோசிச்சுக் கொண்டிருந்தன்''.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

''என்னைப் பற்றியோ?''

''ஓம், இந்த சின்ன வயசில கொழும்பின்ட நிறம் கூட தெரியாத நிலையில நீர் வேலைக்கெண்டு போகப் போறீரே எண்டு நினைச்சு, நினைச்சு கவலைப்பட்டன். நீர் அங்கை என்ன பாடுபடப் போறீரோ தெரியவில்லை.''

யோகராணியின் கண் ஓரங்களில் கசிவு ஏற்பட்டது.

"ஏதோ ஒரு குருட்டுத் தனத்தில வேலை கிடைச்சிருக்குது. இந்த வேலைக்காக கொழும்புக்கு போகாமல் இருக்கலாம். ஆனால் எங்கட குடும்ப நிலைதானே உமக்கு தெரியும்? மனசை தைரியமாக வைச்சுக் கொண்டு இருக்கிறன். கொஞ்ச நாளைக்குள்ள கொழும்பு பழக்கமாகி விட்டால் பிறகு கஷ்டம் இருக்காது . . . . . சந்திரா, வாழ்க்கை ஒரு பட்டு மெத்தை இல்லை. அது முள்ளும் கல்லும் நிறைந்த ஒரு பற்றை.''

சந்திராவின் புருவங்கள் வில்லாக வளைந்து நிமிர்ந்தன.

"ஏதேது வாழ்க்கையின்ர தத்துவத்தை கரைச்சுக் குடிச்சிருக்கிறீர் போல."

"இல்ல இப்படி கதைச்சு மனசை தைரியப்படுத்திறன்.''

"யோகம், நீர் அக்காவின்ர வீட்டில இருக்கப் போறதுக்கு முந்தி நான் ஒரு உண்மையைச் சொல்ல வேணும்.".

"என்ன?''

"எங்கட அத்தானை உமக்குத் தெரியுமோ?''

''சுபா அக்கான்ட ஹஸ்பண்ட் ராஜரட்னம் தானே?''

"ஓமோம் . . . யோகம், அவர் ஒரு மோசமான பேர்வழி . . .''

"அப்படியென்டால் . . . . ?"

363SC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர் ஒரு பொம்பளை கள்ளன். அது அவர்ட்ட 'வீக்னஸ்'. என்டபடியால் அவரோட பழகக்கிலை கொஞ்சம் கவனமாக இரும். நீர் அங்கை கொஞ்ச நாளைக்குத்தானே இருக்கப் போறீர்? அந்தக் கொஞ்ச நாளைக்குள்ள ஏதாவது நடக்கலாம்."

யோகராணி இரு தடவைகள் ராஜரட்னத்தைக் கண்டிருக்கிறாள்.

முதல் தடவை மண மேடையில். இரண்டாவது தடவை அவள் சந்திராவை சந்திக்கச் சென்றபோது.

அச்சமயத்தில் ராஜரட்னம் பார்த்த பார்வை யோகராணியின் மனதில் இன்னும் நன்கு பதிந்திருந்தது.

அந்த ஒரேயொரு பார்வையின் மூலம் அவள் அவனை ஓரளவு எடை போட்டு விட்டாள்.

இப்பொழுது சந்திரா உண்மையைக் கக்கிய போது தனது அனுமானம் சரியென்றே யோகராணிக்குப் பட்டது.

அந்த உண்மையயிட்டு அவள் ஆச்சரியமோ, பதட்டமோ அடையவில்லை. மாறாக அமைதியான குரலில் பேச்சைத் தொடர்ந்தாள்:

"சந்திரா, என்னை எவரும் பலாத்காரமாக அடைய முடியாது. அப்படி அடைய முற்பட்டால் அது அவன்ர சாவில தான் முடியும்."

"ஆண்மையின்ர பலம் பெண்மையை அழித்து விடும் என்டதை மனசில வைச்சிரும்."

சரளமாக, உறுதியாகப் பேசிவந்த யோகராணி இதைக் கேட்டு சற்று சலனமடைந்தாள்.

## (5)

அடர்ந்த ஒரு காடு. ஒரே இருள்மயம். வானத்தில் கண் சிமிட்டிக் கொண்டிருந்த நட்சத்திரங்களின் மெல்லிய ஒளி காட்டு மரங்களினூடாக ஊடுருவி நிலத்தில் தெறித்திருந்தது.

அந்த வெளிச்சத்தை மட்டும் துணையாக வைத்துக் கொண்டு யோகராணி நடைபயின்றாள். வழியில் தென்படும் மரங்களில், செடிகளில், கொடிகளில் முட்டியது பாதி; முட்டாதது பாதியாக நடந்தாள்.

எங்கு, என், எதற்குப் போகிறோம் என்ற எவ்வித இலக்குமின்றி நடந்தாள்.

திடீரென 'யாரோ' தன்னைப் பின் தொடர்ந்து வரும் உணர்வைப் பெற்றாள். அச்ச உணர்வுடன் திரும்பிப் பார்த்தாள். தூரத்தில் சந்திராவின் அத்தான் ராஜரட்னம் தன்னைப் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து வருவதை அவதானித்தாள். நெஞ்சு 'திக்' கென்றது. மனம் 'பதை பதைத்தது'.

அவர் என்ன நோக்கத்திற்காக தன்னைப் பின் தொடர்கிறார் என்பதை புரிந்து கொள்ள அவளுக்கு அவகாசம் கிடைக்கவில்லை.

நடையை விரைவுபடுத்தினாள். ராஜரட்ணம் தன் நடை வேகத்தைத் துரிதப்படுத்தினார்.

திரும்பிப் பார்த்தாள். அவர் அவளை நெருங்கிக் கொண்டிருந்தார். இருவருக்கும் இடையில் பத்தடி வித்தியாசம்.

இனியும் நடந்தால் ராஜரட்ணம் அவளைப் பிடித்து விடுவார். அவரிடமிருந்து தப்புவதென்றால் ஓடுவது உசிதமானது.

யோகராணி மேலும் யோசிக்கவில்லை. கால்களை எட்ட வைத்து ஓடத் தொடங்கினாள். வினாடிகள் கரைய ஓட்ட வேகம் அதிகரித்தது. ஓடினாள்.........ஓடினாள்......அவளுக்கு மூச்சிரைத்தது. நூறு மீட்டர் தூரமளவில் ஓடிய பின் திரும்பிப் பார்த்தாள்.

ராஜரட்ணம் அவளைத் தொடர்ந்து ஓடி வந்து கொண்டிருந்தார். அவர் அவளை நெருங்கி விட்டார். இதோ ............ இதோ .............

அவள் மீண்டும் ஓட எத்தனித்தபோது ராஜரட்ணம் அவளின் கையைப் பிடித்து விட்டார். இறுக்கமான பிடி. தப்ப முடியவில்லை.

அடுத்த கணம் 'அம்மா' என்று வீரிட்டாள்.

கைகளையும், கால்களையும் உதறினாள். கை 'எங்கேயோ' மோதி வலித்தது,

அவளுக்கு விழிப்பு ஏற்பட்டது.

இது வரை தன்னை நெருங்கி வந்த ஆபத்து கனவு ரூபத்திலேயே வந்தது என்ற உண்மை உறுத்தியபோதுதான் மனம் அமைதி அடைந்தது. எனினும், இதயத்தின் படபடப்பு அடங்கவில்லை. பயத்தினால் தேகம் நடுங்குவது நிற்கவில்லை.

பார்வையைச் சுழல விட்டாள்.

அருகில் சுசிலா படுத்திருந்தாள். சற்று அப்பால், மோகன் சுருண்டு கிடந்தான்.

வீட்டிலேயே படுத்திருந்தாள். என்ற உண்மை புலப்பட்டது.

தொண்டை வரண்டிருந்தது. தாகம் ஏற்பட்டது.

எழுந்தாள். சுசிலாவைக் கடந்து சென்று அவள் பின்னால் மேசை மீதிருந்த கூசா நீரை எடுத்துப் பருகினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர் நீர் தொண்டை வழியே உள்ளே சென்றபோது இதயம் குளிர்ந்தது.

நீரைக் குடித்து முடித்தவுடன் நெற்றியில் வியர்வை துளிர் விட்டது. கையினால் நெற்றியைத் துடைத்துவிட்டு பாயில் சரிந்தாள்.

ராஜரட்னத்தின் முகம் நெஞ்சில் நிழலாடியது. காலையில் சந்திரா கூறியவை மனதினுள் எட்டிப் பார்த்தன.

வெறும் கனவே தன்னை இவ்வளவு தூரத்துக்கு ஆட்டிப்படைத்ததென்றால் உண்மையாகவே இப்படியான ஒரு நிலை ஏற்பட்டால்..........? அதை எதிர்த்து தன்னால் சமாளிக்க முடியுமா? இவ்விதமான எத்தனையோ ஆபத்திற்கு எதிராக எதிர்நீச்சலடிக்க வேண்டிவரும். தன்னந்தனியாக இதை நிறைவேற்ற முடியுமா ?

பலவிதமான கேள்விகள் பல ரூபங்களில் முளைத்தன.

பேசாமல் கொழும்புக்கு வேலைக்காக போவதை விட்டு விடுவோமா? விட்டு விடலாம். ஆனால் .........

வாழ்க்கையில் பிரச்சினைகள் மலிவு. ஒவ்வொரு பிரச்சினையையும் சமாளிக்க இன்னொரு பிரச்சினை தோன்றும். எனவே, ஒவ்வொன்றையும் எதிர்நோக்கி அதனைச் சமாளிக்க பழக வேண்டும். வேலைக்கு போகாமல் இருந்தால் வேறு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். எனவே, பிரச்சினைகள் எவ்வழியில் தோன்றினாலும் அவற்றை எதிர்நோக்கி, களைய மனதைத் திடப்படுத்துவது தான் சிறந்தது.

யோகராணியின் தெளிவற்ற மனம் ஒரு நிலைக்குத் திரும்பியது.

கொழும்புக்கு போயே தீருவது.

## (6)

**வா**ளியில் ஊறவைத்திருந்த சகல உடுப்புக்களையும் தோய்த்து அலம்பிய பின் அவற்றை ஒவ்வொன்றாகக் கொடியில் காயப் போட்ட வண்ணம் யோகராணி சுறுசுறுப்பாக இயங்கினாள். அவள் எண்ணமெல்லாம் கொழும்பிலேயே முற்று முழுதாக படிந்திருந்தது.

இன்னும் நான்கு நாட்களுக்குள் ஊரை விட்டு வெளியேற வேண்டும் என்பதை காலையில் கலண்டரில் திகதியைக் கிழித்த போது உணர்ந்தாள். அந்நேரம் தொடக்கம் அவள் மனம் ஒரு நிலையில் விளங்கவில்லை. கொழும்பு வாழ்க்கையைப் பற்றியே சதா சிந்தித்தாள். கொழும்பில் - அந்த நாகரீக உலகில் – புதிய வாழ்க்கையை மேற்கொள்ளப் போகிறோமே என நினைத்த போதெல்லாம் உடம்பு காரணமின்றி புல்லரித்தது. சில வருடங்களுக்கு முன் கொழும்பில் கண்ட காட்சிகள், மாறி மாறி அவள் மனத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரையை வலம் வந்தன. அப்போதெல்லாம் அவளை அறியாமலேயே இதழ்களில் புன்னகை அரும்பின.

யோகராணியின் எண்ணம் திடீரென கலைந்தது. காலடியில் நிழல் உருவம் ஒன்று தென்படவே தலையை உயர்த்தினாள்.

தயக்கத்தை முகத்தில் தாராளமாகப் பரப்பியபடி சுசிலா நின்றாள்.

சுசிலாவுக்கு வயது பதினேழு. வயதை மீறிய தோற்றம். செழுமையான உடலமைப்பு. அளவான உயரமும், பொதுவான நிறமும், நேர்த்தியான முகவெட்டும் அவளை ஒரு சாதாரண அழகியாக திகழ வைத்தது. யோகராணியும், சுசிலாவும் ஒன்றாகச் சென்றால் இளமைக் கண்கள் சுசிலாவையே மொய்க்கும்.

"அக்கா . . . ."

"ஊம் . . . "

"இன்டைக்கிடையில டியூஷன் ஃபீஸ் கட்ட வேணும். இல்லாவிட்டால் மாஸ்டர் ஏசுவார். பேந்து பெடியன்கள் எல்லாம் கூக் காட்டுவாங்க."

யோகராணிக்கு தொண்டையில் ஏதோ சிக்கிக்கொண்ட மாதிரி இருந்தது.

"டியூஷன் ஃபீஸ் எவ்வளவு?"

"ஐம்பது ரூபாய்."

"நான் கொழும்புக்கு போகமுந்தி தந்தால் போதாதோ?"

"இல்லையக்கா, இன்டைக்கே வேணும்."'

யோகராணியின் கண்களில் ஒரு வேதனை படர்ந்தது. உணர்ச்சியற்ற பார்வையோடு தங்கையை நோக்கினாள்.

"சரி. டியூஷனுக்குப் போறதுக்குள்ளை காசைத் தாறன். நீ போ" யோகராணியின் குரல் உடைந்து ஒலித்தது.

சுசிலா அகலவில்லை. தமக்கையின் முகத்தைப் பரிதாபத்துடன் நோக்கினாள்.

"அக்கா, சொரி அக்கா."

"பரவாயில்லை."

அதிருப்தியுடன் சுசிலா அகன்றாள்.

கொழும்புக்கு போகும் போது சேலைக்குப் பொருத்தமான 'பிளவுஸ்' தைப்பதற்கு துணி வாங்கவென வைத்திருந்த ஐம்பது ரூபாய் சுசிலாவின் டியூஷன் கட்டணத் தேவையை ஈடு செய்யப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறதே என்று நினைத்தபோது தமது இயலாமை குறித்து யோகராணிக்கு வேதனையாகவும், வெட்கமாகவும் இருந்தது.

'சே! என்றைக்குத் தான் எங்கட குடும்ப நிலை மாறப் போகிற தோ' என அலுத்தாள்.

## (7)

தலையிடி என்று சாக்குக் கூறிய மங்களம் காலையிலேயே படுக்கையில் சாய்ந்து விட்டாள். இப்படியான வேளைகளில் மாலை வரை சுருண்டு படுப்பதும், பட்டினி கிடப்பதும் அவள் வழக்கம். இடையிடையே பித்துப் பிடித்தவள் போல் அரற்றுவாள்.

இந்த வியாதிக்கு மருந்து எடுப்பதற்கு யோகராணி பலமுறை தாயைப் பலவந்தப்படுத்தியும மகளின் வேண்டுகோளை மங்களம் தட்டிக் கழித்து விட்டாள்.

'பிள்ளை, ஆசுபத்திரியில நிறைய மருந்து எழுதித் தருவாங்க. அதையெல்லாம் வாங்குவதற்கு எங்களிட்ட காசு இருக்கிறதோ?' என்று கேட்டு மகளை சமாதானப்படுத்தி அனுப்பி விடுவாள்.

தாய் கூறுவதில் உண்மை புதைந்திருப்பதால் யோகராணியும் தாயை வற்புறுத்துவதில்லை. தாய் அவதிப்படும் வேளைகளில் இரக்கத்துடன் அவளைப்பார்த்து ஆறுதல் வார்த்தைகள் கூறி தேற்றுவாள். வேலைப்பளு அதிகரித்திருக்கும் சில வேளைகளில் அவள் மீது எரிந்தும் விழுவாள்.

ஒரு மாதமாக தலை காட்டாத வியாதி காலையில் மங்களத் தைப் பற்றி விட்டது. விடியற் காலையிலேயே யோகராணி அதைப் புரிந்து விட்டாள். அதன்பின் அவளே குடும்பத் தலைவி பொறுப்பை ஏற்றாள்.

காலைச் சமையலை முடித்து விட்டு, மதியச் சமையலில் மும் முரமாக ஈடுபட்டாள்.

மோகன் பள்ளிக் கூடத்திற்குப் போயிருந்தான். சுசிலா வழமை போல் 'டியூஷனுக்கு' போய்விட்டாள். இன்னும் மூன்று மாதங்களில் 'ஏ. எல்' சோதனை நடக்கவிருந்தது. அதனால் 'டியூஷன்' என்று அலைக்கலைந்தாள்.

காலையில் எழுந்த நேரம் தொடக்கம் யோகராணி பம்பர மாகச் சுழன்றாள். சமையலுடன் இடையிடையே தாய், தந்தை யைக் கவனிப்பது, சுசிலாவுக்கு தலைமயிர் வாரி விடுவது, உடுப்புக் களை தோய்ப்பது என்று ஒரு நீண்ட பட்டியலைப் பொறுமையுடன் நிறைவேற்றினாள்.

கலட்டியில் இருக்கும் சின்னத்துரை மாமாவின் வீட்டுக்கு இன்று போக வேண்டும் என்று ஏற்கனவே எண்ணி இருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், தற்போது தலை மீதிருக்கும் சுமையை இறக்கி விட்டு போக முடியாத நிலையில் விளங்குகிறாள்.

சுசிலா மாலையில் தான் 'டியூஷன்' முடிந்து வருவாள். அவளிடம் வீட்டைக் கவனிக்கும் பொறுப்பை கையளித்து விட்டு போகலாம். ஆனால், மாலை வேளையில் யோகராணி எங்கும் போக விரும்பவில்லை. ஊர் இருக்கும் நிலையில் மாலை நான்கு மணிக்குப் பின் நடமாட்டம் அரிதாகவே தென்பட்டது. ஆபத்தை விலைக்கு வாங்க அவள் தயாராக இருக்கவில்லை. எதற்கும் சுசிலா வந்த பின் இது பற்றி முடிவெடுப்போம் என எண்ணியிருந்தாள்.

இன்னும் நான்கு நாட்களுக்குள் அவள் கொழும்புக்குப் புறப் பட வேண்டும். தனியாக அவளால் பிரயாணத்தை மேற் கொள்ள முடியாது. கொழும்பின் நிறத்தை அவள் இன்னும் புரிந்து கொள் ளவில்லை. சின்னத்துரை மாமா தனது 'பென்ஷன்' விஷயமாக இன்னும் ஓரிரு நாட்களில் கொழும்புக்குப் போகவிருப்பதாக கேள் விப்பட்டிருந்தாள். எனவே, அவருடன் போவதே நல்லது என நினைத்திருந்தாள்.

அது பற்றி அவருடன் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டும். அப்பொழுது தான் சகல ஒழுங்குகளையும் செய்ய முடியும். ஆனால் அதற்கு காலையிலேயே தடைவிழுந்து விட்டது.

இந்நேரம் பார்த்து தாய் படுக்கையில் சரிந்து விட்டதை நினைத்து உள்ளூர எரிச்சல்பட்ட போதும், தாயின் நிலையை எண்ணி மனதைச் சமாதானப்படுத்தி பொறுமையுடன் செயல்பட்டாள்.

மறுநாள் சின்னத்துரை மாமாவை சந்திப்போம் என முடிவு எடுத்தாள்.

கறிகளுக்குத் தேவையான தேங்காய் பாலை பிழிந்து விட்டு உலையில் அரிசி போடப் போன போது முன்படலை திறந்து மூடும் சத்தம் கேட்டது.

அசுவாரஷ்யத்துடன் பார்வையை வெளியே விசிறினாள். தலையைத் தொங்க போட்டபடி நாகராஜா முன்னேறி வந்தான்.

நாகராஜா அவளுக்கு அத்தான் முறை. சொந்த மாமனின் மகன் அல்ல அவன். சற்றுத் தூரத்து உறவு. இருவரும் ஒரே வகுப்பில் படித்தவர்கள்.

'ஓ எல்' பரீட்சையில் சித்தி எய்திய நாகராஜா எம். பி. யின் அனுசரணையுடன் உள்ளூரில் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்தான், இப்போது சங்கம் நடத்தும் பெற்றோல் நிலையத்தில் மனேஜராகப் பணிபுரிகிறான்.

வேலை கிடைத்த புதிதில் அங்கு பணிபுரிந்த, சற்று தாழ்ந்த சாதிப் பெண் ஒருத்தியை திருமணம் செய்தான். திருமண வாழ்க்கை இரண்டு வருடங்களே நீடித்தது. அவன் மனைவி - சுகந்தி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'யாரோ' ஒருவனுடன் தொடர்பு கொண்டு, பின் நாகராஜாவுக்கு சொல்லாமல் கொள்ளாமல் ஊரை விட்டே சென்று விட்டாள். இன்று வரை அவள் பற்றிய சிலமன் எதுவுமே நாகராஜாவுக்குத் தெரியாது.

அதன் பின் நாகராஜாவுக்கு தோதான பெண்ணை பெற்ற ஊரவர்கள் அவன் வீட்டுக்கு படை எடுத்தனர். சீதனம், 'டொனேஷன்', நகை, நட்டு என்று அவனுக்கு ஆசை வார்த்தைகள் கூறி அவனை தமது மாப்பிள்ளையாக்க பலரும் முயற்சித்த போதும் நாகராஜா எதற்குமே மசியவில்லை.

'இனி நான் கலியாணம் முடிக்கப் போறதில்லை'- வெட்டு ஒன்று; துண்டு இரண்டு என்று ஒரு வரியில் பதில் கூறி எல்லோரையும் விரட்டி விட்டான். இதனால் கோபம் கொண்ட ஒரு சிலர் அவனைப் பற்றி இல்லாத பொல்லாத கதையொன்றை கட்டி விட்டனர்.

'நாகராஜா ஒரு கையாலாகாதவன்; அவனுக்கும் பொம்ப ளைக்கும் எட்டாம் பொருத்தம்'- இந்தக் கட்டுக்கதை ஊரெல்லாம் பரவியது. பலர் அவனை ஏளனமாக பார்த்தனர். சிலர் அவனைக் கேலி செய்தனர். எதனையும் சட்டை செய்து கவலைப்படும் நிலையில் அவன் விளங்கவில்லை. ஊரவர்களின் பேச்சை ஒரு காதால் கேட்டு மறு காதால் விட்டான்.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் யோகராணியைச் சந்திக்க நாகராஜா அவள் வீட்டுக்குச் செல்வான். எந்த நேரத்தில் அவன் வருவான் என்பதை அனுமானிக்க முடியாது. காலை, இரவு என்று எந்நேரத்திலும் அவனை எதிர்பார்க்கலாம்.

ஆரம்பத்தில் அவனது வரவை செல்லையா விரும்பவில்லை. ஆனால், மங்களம் மனம் மகிழ அவனுக்கு வரவேற்பளித்தாள்.

ஒரு நாள் செல்லையாவினால் பொறுக்க முடியவில்லை. நாகராஜா வீட்டை விட்டு வெளியேறிய பின் மங்களத்தைக் கூப் பிட்டு தனது எண்ணத்தை கடும் வார்த்தைகளின் மூலம் பிரதி பலித்தார்.

"பெடியனுக்கு யோகத்தில விருப்பம் போலத் தெரியுது. அவளின்ர விருப்பத்தைக் கேட்டுவிட்டு கட்டி வைப்பம்" என மங்களம் அமைதியாகக் கூறினாள்.

"உனக்கு என்ன விசரோ? அவனைப் பற்றி ஊரில எதேதோ கதை உலாவுதே" என்று செல்லையா மனைவி மீது எரிந்து விழுந்தார்.

"மெய்யே, உங்கடை தம்பியைப் பற்றியும் ஊரில உப்புடித்தானே கதைச்சவையல்? இப்ப அவருக்கு பிள்ளை,குட்டி இல்லையோ?" என மங்களம் கேலி தொனிக்கக் கடுகடுப்பாய் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

மனைவியின் வார்த்தைகளால் செல்லையா சில வினாடி நேரம் வாயடைத்துப் போனார். பின் அமைதியாகப் பேசினார்:

"மங்களம், நாகராஜாவை யோகத்திற்கு கட்டி வைக்க உனக்கு விருப்பமோ?"

"ஊம், நல்ல பொடியன். ஏதோ போதாத காலம் பெஞ்சாதிக்காரி ஆரோடையோ ஓடி விட்டாள்."

"அவனுக்கு யோகத்தில விருப்பமோ?"

"அப்படி போலத்தான் தெரியுது. இல்லாவிட்டால் காலம் கெட்ட வேளையிலயும் அவளைச் சந்திக்க வருவானோ?"

"அப்ப யோகத்துக்கு?"

"அதைத்தான் என்னால தெரிஞ்சு கொள்ள முடியவில்ல. நானும் சாடைமாடையாக அவளிட்ட கேட்டுப் பார்த்தன். பிடி கொடுக்காமல் கதைக்கிறாள்."

"அவளின்ர நோக்கத்தை அறியாமல் நாங்க முடிவு கட்டுறது சரியில்ல."

"ஓ! அது சரிதான். எப்பவாவது ஒரு நாளைக்கு உண்மை வெளிச்சத்துக்கு வந்துதானே தீரும்?"

இச்சம்பவத்தின் பின் நாகராஜா வீட்டுக்கு வரும் போதெல்லாம் செல்லையா முகம் சுளிக்கவில்லை.

யோகராணி பள்ளிக்கூட நாட்களில் இருந்தே நாகராஜாவுடன் அந்நியோன்யமாகப் பழகி வருகிறாள். படிக்கும் நாட்களில் 'நோட்சை' பரிமாறுவாள். பாடங்களில் சந்தேகம் கேட்பாள்.

சுகந்தியை கரம் பற்றிய பின் நாகராஜாவின் வரவு குறைந்திருந்தது. ஒரு தடவை மட்டுமே சுகந்தியுடன் வீட்டுக்கு வந்திருந்தான்.

சுகந்தி ஊரை விட்டு ஓடிய பின் வீட்டுக்கு வருவதை அடியோடு நிறுத்தி விட்டான். யோகராணியை நேருக்கு நேர் சந்திக்கவே வெட்கப்பட்டான்.

ஒரு சமயம் வீதியில் நாகராஜாவை யோகராணி சந்தித்தாள். அவனை வீட்டுக்கு வரும்படி யோகராணி அழைப்பு விடுத்தாள். தட்டிக் கழிக்க முற்பட்டவனை வலுக்கட்டாயமாக கூட்டி வந்தாள்.

நாகராஜாவின் நிலைக்கு அவள் வருத்தப்பட்டாள். நொந்து போன அவன் மனதிற்கு ஆறுதலான வார்த்தைகள் மூலம் ஒத்தடம் கொடுத்தாள்.

இதன் பின் நாகராஜா முன்னரைப் போல் யோகராணியின் வீட்டுக்கு வரத்தொடங்கினான். இருவருக்கும் இடையிலான பழக்கம், நெருக்கம், புரிந்துணர்வு அதிகரித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருக்கும் ஒரே வயது என்ற போதிலும் யோகராணி அவனை 'அத்தான்' என்றே அழைப்பாள்.

நாகராஜா ஒல்லியான தோற்றமானவன். கரடு முரடான தலைமயிர். கண்கள் உட்குழிந்து, கன்னங்கள் இடிந்து காச நோயாளி போல் திகழ்ந்தான். சதா சிகரெட் புகைப்பதனால் இதழ்கள் கறுப்பேறி இருந்தன.

அவனது உருவத்தில் உள்ள விசேஷ அம்சம் எடுப்பான மூக்காகும்.

'உங்கட மூக்கை வைத்தே ஒரு கவிதை இயற்ற வேணும்' என்று சொல்லி யோகராணி அவனை அடிக்கடி கேலி செய்வாள்.

நாகராஜா நேரே குசினிக்கு வந்தான். தொண்டையை செருமினான்.

''சமையல் போல. எனக்கும் சாப்பாடு இருக்குதோ?'' எனக் கேட்டுச் சிரித்தான்.

''ஓ! ஓ!! இருக்குது. உங்களுக்கு இல்லாத சாப்பாடோ?''

''உப்பெல்லாம் சரியாக போட்டீரா?''

அசடு வழியுமாப் போல சிரித்த யோகராணி பதில் கூறவில்லை.

நாகராஜாவின் பார்வை நாலா புறமும் சுழன்றது.

''மாமியின்ர சிலமனைக் காணயில்ல. எங்க ஆள்?''

''சுகமில்லை என்டு படுத்துக் கிடக்கிறா.''

''அப்ப சமையல் உம்மடபாடு போல'' என்று கேட்டு மீண்டும் சிரித்தான்.

அச்சிரிப்பின் ஆழம் அவளுள் நாணத்தை ஏற்படுத்தி விட்டது. தலை குனிந்தாள்.

''மெய்யே, உமக்கு கொழும்பில வேலை கிடைச்சுட்டுதாம்.''

''ஓ!''

''கொழும்புக்கு போறதெண்டு முடிவு எடுத்திட்டீரோ?''

''ஓ! போகாமல் என்ன செய்யுறது? நாலு நாளைக்குள்ல போக வேணும்.''

நாகராஜாவின் முகத்தில் இருந்த மலர்ச்சி திடீரென அகன்றது. அதில் சோகம் படிந்தது.

''அப்படியெண்டால் இனி நான் உம்மைப் பார்க்க முடியாது.''

நாகராஜாவின் குரலில் துன்பத்தின் வாடை இழையோடியதை உணர யோகராணி தவறவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (8)

மனம் பொறுக்கவில்லை. மனதை மாற்றினாள். மாற்றிய போது மனம் துடித்தது.

சின்னத்துரை மாமாவின் வீட்டுக்கு மறுநாள் போவதென முடிவெடுத்திருந்தாள். ஆனால், மனம் அந்த அரை நாளுக்காகப் பொறுக்கவில்லை. எனவே, மனதை மாற்றினாள். மாற்றிய சில நிமிடங்களுக்குள்ளே மனம் அங்கு போகத் துடித்தது.

நல்ல வேளை மங்களம் தலையை உயர்த்தினாள். பாயைச் சுருட்டினாள். அலுப்புடன் இரு தடவைகள் கொட்டாவி விட்டவள், குசினிக்குச் சென்று நீரைக் கொதிக்க வைத்து தேநீர் தயாரித்தாள். அதே நேரம், சுசிலாவும் 'டியூசன்' முடிந்து வீடு திரும்பினாள். வீட்டைப் பார்க்க தாய் இருக்கிறாள். அவளுக்கு துணையாக சுசிலா விளங்குகிறாள். கொழும்புப் பயணம் பற்றி சின்னத்துரை மாமாவுடன் கலந்துரையாடுவதற்கு இனி தடையில்லை என்று நினைத்த போது தான் யோகராணி நேரத்தைப் பார்த்தாள். நாலரையை மணி நெருங்கிக் கொண்டிருந்தது. இருட்டுவதற்கு நேரம் இருக்கிறது. அதற்குள் போய் திரும்பி விடலாம்.

தாயிடம் கூறிவிட்டு நடையை விரைவாக்கி கலட்டியை நோக்கிச் சென்றாள்.

வழியில் அவளுக்கு தெரிந்த பலர் வழிமறித்து குசலம் விசாரித்தனர். அவளது வேலை, கொழும்புப் பயணம் பற்றி அளவளாவினர். பொதுவாக கொழும்புக்கு அவள் போற முடிவையிட்டு அதிருப்தி தெரிவித்தனர்.

"ஏதோ அங்கை கவனமாக இரு" என்று பலரும் கூறவே உற்சாகத்தை மனதினுள் நிரம்ப தேக்கி வைத்திருந்த யோகராணி அதனை கொஞ்சம் கொஞ்சமாக இழப்பது போன்ற உணர்வை பெற்றாள். எனினும், ஏற்கனவே திடப்படுத்திய மனதினை இனியும் பஞ்சாக்க அவள் விரும்பவில்லை. மனதை வைரமாக்கினாள்.

'ஊர் ஆட்கள் வாழவும் விடாயினம், சாகவும் விடாயினம்' என்ற வார்த்தைகளைத் தான் மனம் அடிக்கடி முணு முணுத்தது.

சில நிமிடங்களுக்குள் சின்னத்துரையின் வீட்டை அடைந்தாள். நல்ல வேளை மனுஷன் வீட்டில் இருந்தார். வந்ததும் வராதது மாக நின்ற நிலையிலே, தான் வந்த காரணத்தை யோகராணி ஒப்புவித்தாள்.

"அதற்கென்ன கூட்டிக்கொண்டு போறன். எப்ப போவம்?" எனக் கேட்டார் சின்னத்துரை.

"முதலாம் திகதி வேலைக்கு நிக்க வேணும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்ப முப்பதாம் திகதி போவம். உனக்கு இஷ்டம் தானே?''

''ஓமோம்.''

''அங்கை எங்க நிற்க உத்தேசம்?''

''என்ர சிநேகிதின்ர அக்கா தெகிவளையில இருக்கிறா. அங்க தான்.''

''தெகிவளையோ? அந்த இடம் கொஞ்சம் தொந்தரவான இடம்.''

''கொஞ்ச நாளைக்குத்தான் அங்கை இருப்பன். நல்ல இடத்தில அறை கிடைச்ச பிறகு மாறி விடுவன்.''

''அது நல்ல யோசனை.''

''அப்ப நான் போயிட்டு வாறன்.''

''ஓ! ஓ!! நீ போயிட்டு வா, நான் எல்லா ஒழுங்குகளையும் கவனிக்கிறன்.''

கொழும்பு அத்தியாயத்தின் ஆரம்பமே வெற்றியாக அமைந்ததில் யோகராணிக்கு மகிழ்ச்சி. மனம் நிறைந்த மகிழ்வுடன் வீடு நோக்கி விரைந்தாள்.

ஆனால், அந்த மகிழ்ச்சி சொற்ப நேரத்துக்குள் சுவடு தெரியாமல் மறைந்து விட்டது. வீட்டை அடைந்த போது வீட்டில் இருந்து வெளிப்பட்ட குரல்கள் அசாதாரணமாகத் தென்பட்டன.

யோகராணிக்கு என்ன, ஏதுவென்று புரியவில்லை. நடக்கக் கூடாதது நடந்து விட்டது என்ற உணர்வு மட்டும் மனதினுள் நுழைந்தது.

வீட்டினுள் தயக்கத்துடன் பிரவேசித்தாள். தாய் தலைவிரி கோலமாய் நிலத்தில் கிடந்தாள். யோகராணியைக் கண்டவள் ''யோகம்'' என ஒப்பாரி வைத்தாள்.

''என்னம்மா? என்ன நடந்தது'' என அலறியபடி தாயிடம் விரைந்து சென்றாள்.

''நான் என்னத்தைச் சொல்ல. உன்ர கொப்பருக்கு ..... கொப்பருக்கு ...'' மங்களத்தினால் வார்த்தைகளை அடுக்க முடியவில்லை. கேவிக் கேவி அழுதாள்.

''அப்பாவுக்கு என்ன?''

யோகராணி ஒரு கணத்தையும் வீணாக்கவில்லை. தகப்பன் கிடந்த அறைக்குப் பாய்ந்தாள்.

படுக்கையில் செல்லையா நாராகக் கிடந்தார். நெஞ்சு பலமாக மேல் எழுந்து, சரிந்தது. மூச்சுக்கள் சிரமத்துடன் வெளிப் பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகராணியின் இதயம் விறைத்தது. இரத்த நாளங்கள் அடைத்தன.

"அக்கா, அப்பாவுக்கு இருந்தாப் போல வருத்தம் கூடி விட்டுது. உடன ஆசுபத்திரிக்கு கொண்டு போகவேணும் எண்டு மாசிலாமணி பரியாரி சொல்லிப் போட்டுப் போறார். மோகன் கார் பிடிக்கப் போயிட்டான்" என்று அங்கு வந்த சுசிலா 'பட பட'வென பொரிந்து தள்ளினாள்.

"நான் போகக்கிலை நல்லாத்தானே இருந்தார்?"

"ஓமோம், நீ போய் கொஞ்ச நேரத்தில 'யோகம், யோகம்' எண்டு முனகினார். பிறகு பேச்சு மூச்சற்று விட்டார். உடன போய் மாசிலாமணி பரியாரியைக் கூட்டி வந்தம். பரியாரியார் நாடியைப் பிடிச்சுப் பார்த்து விட்டு ஆசுபத்திரிக்கு கூட்டிக் கொண்டு போகச் சொல்லி விட்டார்."

"மோகன் போய் கன நேரமோ?"

"இப்பத்தான் போனவன். இன்னும் பத்து நிமிஷத்துக் குள்ளை வந்து விடுவான்."

இதற்குள் அண்டை அயலவர்கள் அங்கு கூடினார்கள்.

கண்களை மூடிய செல்லையா மீண்டும் திறக்கவில்லை.

கார் வந்தது. அவரை தூக்கிச் சென்று ஏற்றினார்கள். கார் விரைந்தது. ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்கள். மூன்று பிள்ளைகள் அவரை சூழ நிற்க அவர் இவ்வுலகை விட்டே ஏகினார்.

மண்ணுலக மக்கள் மூவரின் ஒப்பாரிகளும் ஆஸ்பத்திரியின் அன்றாட சோகங்களில் பெரும் பங்கினை வகித்தன.

## (9)

அழுகைகள், ஒப்பாரிகள் மூன்று நாட்களின் பின் அடங்கின.

அவை அடங்கிய போது ஊரவர்கள், உற்றார்கள், உறவினர்கள் அகன்றனர்.

பைத்தியம் பிடிக்கும் நிலைக்கு மங்களம் தள்ளப்பட் டாள். சதா அரற்றியபடியே கிடந்தாள்.

அவர்களின் துக்கங்களில் பங்கெடுக்க வந்தவர்கள் யோக ராணியையே பரிதாபத்துடன் நோக்கினர். 'இனி யோகம் தான் குடும்பப் பொறுப்பை முழுமையாக ஏற்க வேணும்' என்று ஊரவர் கள் குசுகுசுத்தனர்.

யோகராணியினால் அந்த அதிர்ச்சியை தாங்க முடியவில்லை. திடுதிடுப்பென தந்தை கண்களை நிரந்தரமாக மூடி தன் மீது குடும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பை சுமத்துவார் என யோகராணி துளியளவேனும் எண்ணி இருக்கவில்லை. செல்லையா வாழ்க்கையின் அந்திமக் காலத்தை நடைப்பிணம் போல் நடத்திச் சென்றாலும் குடும்பத் தலைமைத்துவத்தில் மறைமுக பங்கினை வகித்தார். இனி யோகராணிதான் முற்றுமுழுதாக அந்த கடின பணியை மேற் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

"பிள்ளை, இனி என்ன செய்யுறது" என மங்களம் மகளைக் காணும் போதெல்லாம் அரற்றினாள்.

"அம்மா, பேசாமல் இருங்கோ. நான் எல்லாத்தையும் பார்த்துக் கொள்ளுறன்" என்று தாய்க்கு ஆறுதல் கூறிய போதும், யோகராணியிடம் குடும்பத்தை வழி நடத்துவதற்கான தைரியம் இருக்கவில்லை. குடும்ப வருவாய் இன்மையே அவளுள் அதைரி யத்தை அளவுக்கு மீறி நுழைத்திருந்தது.

தந்தை விட்டுச் சென்ற பணி அவளுக்காகக் காத்திருந்தது. குடும்பத்தின் வயிற்றுப் பசியைப் போக்க வேண்டும். தம்பி, தங்கையின் மேல் படிப்புக்கு வழி வகுக்க வேண்டும். அவள் ஒருத்தி தான் இவற்றை நிறைவேற்ற வேண்டும்.

இனியும் விற்கவோ, அடகு வைக்கவோ தங்கமோ, வெள் ளியோ அவர்களிடம் இல்லை. அந்தளவு தாழ்வான ஒரு நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டு விட்டார்கள்.

இந்த இழிநிலையில் இருந்து விடுபடுவதென்றால், குடும்பம் நிமிர்ந்து நடைபோடுவதென்றால் கொழும்புக்குச் சென்று வேலை பார்க்க வேண்டும். ஆனால், யோகராணி இருக்கும் நிலையில் ஊரை விட்டு போக முடியுமா?

வேதனையின் உச்ச நிலையில் உழன்று தவிக்கும் விதவைத் தாய் ஒரு பக்கம். வாழ்க்கையின் இம்மை வறுமையைச் சரிவர உணர முடியாத நிலையில் விளங்கும் சகோதரர்கள் இன்னொரு பக்கம். இவர்களை தனியே விட்டுப் போகலாமா?

தந்தை இறந்து ஒரு மாதத்திற்குள் ஊரை விட்டுச் செல்வதை சமூகம் ஏற்றுக் கொள்ளுமா?

யோகராணி நிதானமாக யோசித்தாள்.

ஆற்றல், அறிவு அரிதாகவே விளங்கும் மங்களம் குடும்பத்தை வழி நடத்தமாட்டாளா? ஊரில் எத்தனையோ விதவைகள் எவ்வித குறையுமின்றி குடும்பத்தை எப்படியோ வழிநடத்தும் போது மங்களத்துக்கு மட்டும் இந்த பொறுப்பை என் ஏற்க முடியாது? வயது, அனுபவம் ஆகியன மங்களத்தின் செயற்பாட்டுக்கு நிச்சயம் உறுதுணைபுரியும்.

சுசிலா பக்குவப்பட்டவள். மனதினாலும் பக்குவமடைந்தவள் என்பதை பல சந்தர்ப்பங்களில் நிரூபித்துக் காட்டியிருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் செயற்பாட்டுக்கு சுசிலா உறுதுணைபுரிவாள். தள்ளாடும் குடும்பப் படகுக்கு துடுக்காக செயற்படுவாள்.

மோகன் தான் கேள்விக்குறி. அவன் செயற்பாடுகளில் பூரணத்துவம் இல்லை. குழந்தைத் தனம் மிகைந்துள்ளது. காரிய கருமங்களை நிறைவேற்றுவதில் அசட்டை காட்டுபவன். அவன் வயது அப்படி. உடம்பு முறுக்கேறி உள்ள அளவிற்கு மனம் முறுக்கேறவில்லை. ஆனால், காலப்போக்கில் அவன் செய்கைகளில் மாற்றத்தை எதிர்பார்க்கலாம்.

இவ்வாறாக சிந்தித்து, பல கேள்விகளை உருவாக்கி, அழித்த படி யோகராணி உழன்றாள். எவ்வித முடிவும் எடுக்க முடியாமல் தவித்தாள்.

ஹோலின் ஒரு மூலையில் நாடியில் கைகளை ஊன்றிய வண்ணம் ஒரு மணிக்கு மேல் கிடந்த யோகராணியின் முன்பாக இரு கால்கள் தெரிந்தன. தலையை உயர்த்தினாள். மோகன் கைகளைப் பிசைந்தபடி நின்றான்.

கடந்த சில தினங்களாக அழுதழுது அவன் கன்னங்கள் வீங்கியிருந்தன. கண்கள் சிவப்பேறியிருந்தன.

தகப்பனின் சடலம் வீட்டை விட்டு வெளியேறும் போது அவன் வைத்த ஒப்பாரி யோகராணியின் மனதையே கசக்கிப் பிழிந்து விட்டது. "அப்பா, இந்த பரதேசிகளையும் உங்களோட கூட்டிக் கொண்டு போங்கோ. இஞ்சை இருந்து நாங்க ஒவ்வொரு நாளும் சாகவேணும்" என அலறிய போது யோகராணி ஓடிப்போய் அவன் வாயைத் தன் கைகளால் பொத்தி விட்டாள்.

"நாங்கள் வாழணும்டா, வாழ்ந்து காட்டணும்டா, ஏண்டா சாக வேணும்" என யோகராணி ஆவேசம் வந்தவள் போல் கத்தினாள்.

வந்திருந்த பலருக்கு அது ஒரு வேடிக்கை விநோத செயல் போல் பட்டு விட்டது. இருவரையும் இளக்காரமாக நோக்கி புன்முறுவல் பூத்து விட்டுச் சென்றனர்.

'செல்லையர் செத்தார்; அவர்ட்ட குடும்பமும் செத்தது' என்று 'யாரோ' மெல்லிய குரலில் கூறியதைக் கூட யோகராணியின் காது உள் வாங்கி விட்டது.

அன்றைய தினமே அக்கூக்குரல்களின், ஒப்பாரிகளின் மத்தியில் அழுகையை அடக்கியபடி அவள் உள்ளூர ஆணையிட்டாள். 'என்ர குடும்பத்தை நான் வழிநடத்தி உன்னத நிலைக்கு கொண்டு வருவன். நான் எக்கேடு கெட்டாலும் அதைப்பற்றிச் சிந்திக்கப் போறதில்லை.' இந்த ஒரு முடிவை அவள் ஆர்ப்பரித்திருந்த மனம் உறுதியாக எடுத்தது.

PUBLIC LIBRARY
JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் முன்னால் நிற்கும் அந்த பதினைந்து வயது இளைஞனை– மோகனை– யோகராணி நோக்கி "என்ன மோகன், என்ன வேணும்" என்று அன்புடன் வினவினாள்.

மோகன் உடனடியாகப் பதில் கூறவில்லை. தமக்கையையும், நிலத்தையும் மாறி மாறிப் பார்த்தான். அவன் போக்கு யோக ராணிக்கு விசித்திரத்தை வரவழைத்தது.

"சொல்லு மோகன்."

"அக்கா, நான் படிப்பை விடலாம் என்டு நினைக்கிறன்."

யோகராணிக்கு 'திக்' கென்றிருந்தது.

"படிப்பை விட்டுட்டு என்ன செய்யப் போறாய்?"

"வேலை செய்யப் போறன்."

"என்ன வேலை?"

"ஏதாவது வேலை."

"ஏதாவது என்றால்?"

"எடுபிடி வேலை, அல்லது கூலி வேலை."

யோகராணியின் மனம் குமைந்தது. வேதனை நெஞ்சை அமுக்கியது.

வற்றிப் போயிருந்த கண்களில் திவலைகள் தளும்பின. தன்னை அடக்க முடியாமல் விசித்தாள்.

மோகனின் கண்களும் ஈரமாகின. தமக்கையை நேருக்கு நேர் பார்க்க மனம் மேலும் கரைந்தது. தலையைக் குனிந்தான்.

யோகராணி எழுந்தாள். கண்களைத் துடைத்தாள்.

தம்பியின் பொறுப்புணச்சி, தியாக உணர்வு ஆகியவற்றை நினைத்தபோது .......... அவனைப் பற்றி அவள் கொண்டிருந்த தப்பபிப்பிராயம் களைவதை நினைத்த போது....... குடும்பத்தை வழிநடத்த இன்னொரு ஜீவனும் இருக்கிறதே என்று நினைத்த போது ... மன வலிமை மேலும் அதிகரிக்கும் உணர்ச்சியை வெகுவாகப் பெற்றாள்.

அந்தக் கணமே அவள் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தாள். 'எப்பாடுபட்டும் கொழும்புக்கு போயே தீருவன்.'

"மோகன், நீ சின்னப்பொடியன். வாழ்க்கையின்ர நுனியை இன்னும் நீ எட்டிப் பிடிக்கவில்லை. இப்ப நீ படி. படிச்சு பெரிய ஆளான பிறகு வேலை செய்து இந்தக் குடும்பத்தை நடத்து. அதுவரைக்கும் நான் குடும்பத்தை நடத்துறன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா, அப்ப நீ கொழும்புக்கு போறதெண்டு முடிவு எடுத்திட்டியோ?''

"ஓமோம், நான் உழைத்து காசை அனுப்புறன். நீயும், அக்காவும் படியுங்க. நீங்க நல்லா படிப்பீங்க என்ற நம்பிக்கையில தான் நான் கொழும்புக்கு போறன்''.

"அக்கா, உன்ர தலையெழுத்து, நீ உழைத்து எங்களை படிப்பிக்க வேண்டுமென்று இருக்குது. அக்கா நீ போ. இன்னும் கொஞ்ச வருஷத்துக்குள்ள நான் உழைத்து சோறு போடுறன்''.

"நீ சோறு போடக்க முந்தி எனக்கு வேறு ஒருத்தர் சோறு போடுவார்,'' என்ற யோகராணி 'கடகட' வென நகைத்தாள்.

வேதனையை ஒத்தி போட்டுவிட்டு மோகனும் சிரித்தான்.

## (10)

**ஊர்** உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது.

அரற்றியபடி பாயில் உழன்றாள் மங்களம்.

குப்பி விளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் பாடத்தை கிரகித்தபடி இருந்தாள் சுசிலா. தூக்கத்தில் தன்னை மறந்திருந்தான் மோகன்.

பௌர்ணமி ஒளியை நோக்கியபடி சிந்தனைக் குதிரையில் யோகராணி வலம் வந்தாள். சமீப நாட்களாக யோசனை தான் அவள் மனோநிலையைப் பாதித்து வருகிறது சின்ன விஷயத்தையிட்டு கூட கடுமையாக யோசிக்க வேண்டி இருந்தது.

நாகராஜா வந்தான்.

"என்ன பலத்த யோசனை'' என்று கனிவாகக் கேட்டான்.

"எத்தனையோ விஷயங்களைப் பற்றி யோசிக்கிறன். அப்பா செத்து போயிட்டார். அதால கனக்க பிரச்சினைகள் வந்துட்டுது. எதிர்காலமே சூனியமாகிவிட்டது போல இருக்குது.''

"பிரச்சினைகள்? ஏழைகளின்ர வாழ்க்கையில பிரச்சினைகளுக்கு குறைவில்லை. அதையெல்லாம் நினைக்காமல் இனி நடக்க வேண்டியதைப் பார்க்கவேணும்.''

யோகராணி ஒன்றும் கூறவில்லை.

"யோகம், கொழும்புக்கு போறதைப் பற்றி என்ன முடிவு எடுத்திருக்கிறீர்?''

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

"அதையும் பற்றி யோசிச்சனான். போகலாம் என்றிருக்கிறன். நான் போகாவிட்டால் மோகன் படிப்பை விட்டுட்டு கூலி வேலைக்கு போகப் போகிறானாம்.''

"இந்த சின்ன வயசிலையும் பொறுப்புணர்ச்சி இருக்குது போல.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓமோம் ... அத்தான், வேலைக்கு முதலாம் திகதி வரச்சொல்லி கடிதம் அனுப்பினவை. இப்ப நாள் கடந்து போயிட்டு. இனி போனால் வேலை தருவினமோ? வேறை யாரையும் எடுத்திட்டினமோ என்டு தெரியயில்ல.''

''எதுக்கும் அங்கை போனால் உண்மையை அறியலாம் தானே?''

''ஓமோம்.''

''நீர் கெதியில போனால் நல்லது. இந்த வேலையை விட்டூரெண்டால் இனி எப்ப வேலை கிடைக்குமோ தெரியாது. இஞ்ச ஒரு வேலை கிடைச்சால் இங்கேயே இருக்கலாம். ஆனால், போற போக்கை பார்த்தால் இருக்கிறவனுக்கே போய்விடும் போலை இருக்குது.''

யோகராணி பதில் கூறவில்லை. ஒரு சில வினாடி மௌனத்தின் பின் நாகராஜாவை தீர்க்கமாக நோக்கினாள்.

''அத்தான், அப்படியெண்டால் நாளைக்கு நாங்க இரண்டு பேரும் கொழும்புக்கு போவமா?''

இவ்விதமான ஒரு அழைப்பினை நாகராஜா சற்றேனும் எதிர்பார்க்கவில்லை. திக்கு முக்காடி விட்டான். சில நிமிடங்கள் வரை பதில் கூறத் தெரியாமல் தடுமாறினான்.

## (11)

இருளை இரு கூறுகளாக்கியபடி ரயில் விரைந்தது.

யோகராணியின் இதயத்தில் புதுவித உணர்வலைகள் நெளிந்து வளைந்தன. அவற்றில் கிடைத்த சுகானுபவம் அவள் சுய நிலையை மறக்க வைத்தது.

யோகராணியின் உடலுடன் ஒட்டினாற்போல நாகராஜா அமர்ந்திருந்தான். தூக்கக் கலக்கத்தில் தன்னை மறந்த நிலையில் அவள் மீது சரிந்தான். நாகராஜாவின் தலை கவிழ்ந்தது. அவன் கன்னங்கள், அவள் கன்னங்களுடன் உராய்ந்த போதெல்லாம் அவளுள் பரவசம் கிளர்ந்தெழுந்தது. படிப்படியாக உணர்வலைகள் ஊட்டம் பெற்றன.

எல்லாமே சில நிமிடங்கள் தான். ரயிலின் 'கடகட' ஒலி தன் இதயத்தைத் தட்டி, 'யோகராணி நீ தவறை இழைக்கிறாய்' எனக் குற்றஞ் சாட்டுவது போன்ற உணர்வை ஏற்படுத்தவே அவள் புலன் கள் விழிப்படைந்தன. ஊட்டம் பெற்ற உணர்வலைகள் எல்லையை மீற முன் உணர்ச்சிகளை அடக்கி நிதான நிலைக்கு திரும்பினாள்.

தன் மனச்சாட்சியை நிறையக் கடிந்தாள். 'சே! ட்ரெயின்ல இப்படி இருந்துட்டனே! ஆரும் கண்டிருந்தால் என்ன நினைச்சிருப் பினம்? தேப்பன் செத்து பத்து நாளைக்குள்ல மேள் சுதிபண்ணு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றாள் என்டு ஊருக்குள்ளை கதை அடிபடப் போகுது. நான் ஏன் இப்படி நடந்தேனோ?' என மனம் நொந்தவள் சேலைத் தொங் கலை எடுத்து முழு உடலையும் போர்த்தினாள். நெஞ்சினுள் பதை பதைப்பு எட்டிப் பார்த்தது.

இக்கட்டான நிலையிலிருந்து மீள நடவடிக்கை எடுத்தாள்.

சரிந்து கிடந்த நாகராஜாவின் தலையைக் கைகொடுத்து உயர்த்தி பின் ஆசனத்துடன் சேர்த்து நிமிர்த்தி வைத்தாள். அதன் பின்பே ஆறுதலாக மூச்சு விட முடிந்தது.

ரயில் தன்பாட்டில் இருளைக் கிழித்துக் கொண்டு முன்னே றியது.

நேரம் பத்தைத் தாண்டிவிட்டது. பலரும் தூங்கி வழிந்தனர். யோகராணிக்கு தூக்கம் வரவில்லை. யோசனை உறக்கத்திற்கு முட்டுக் கட்டை போட்டது.

யோகராணியையும், நாகராஜாவையும் வழியனுப்ப மோகன் கொடிகாமம் ஸ்டேஷன் வரை வந்திருந்தான்.

ஸ்டேஷனை விட்டு ரயில் செல்லும் வரை மோகன் நின்ற இடத்தி லேயே சிலை போல் நின்றான். யோகராணியுடன் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அவன் முகத்தில் பலவித உணர்ச்சிகள் பரம்பிக் கிடந்தன.

''டேய் மோகன், எப்படியும் படிச்சு சோதனையை 'பாஸ்' பண்ணு. அப்பத்தான் 'ஏ. எல்' வகுப்பில சேரலாம். நீ 'பாஸ்' செய் வாய் என்ற நம்பிக்கை எனக்கிருக்குது'' என்று யோகராணி கூறிய போது ஏகாந்தப் பார்வையை வெளியிட்டபடி நின்றான். வாய் திறந்து ஒன்றுமே கூறவில்லை.

ரயில் வந்து நின்றது.

''மோகன், நான் போயிற்று வாறன். அம்மாவை கவனமாகப் பார்த்துக்கொள். அக்கா வாய்க்காரி. தேவையில்லாமல் கண்ட ஆட் களோடையும் சண்டை பிடிப்பாள், நீ தான் அவளையும் பார்க்க வேணும்.''

மோகன் மௌனத்தைத் தொடர்ந்தான்.

''நான் வாறன்.''

தலையை மட்டும் அசைத்தான்.

யோகராணி ரயில் ஏறினாள். நாகராஜா அவளைத் தொடர்ந் தான். இருவருக்கும் அருகருகாக அமர்ந்திருக்க ஆசனங்கள் கிடைத் தன. யாழ்ப்பாணத்தில் நடந்த 'ஏதோ' அசம்பாவிதத்தினால் ரயில் வெறிச்சோடி இருந்தது. அது இவர்களுக்கு வசதியாகி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகராஜாவுக்கு அருகில் அமர்ந்திருந்த யோகராணியை கூச்சம் வெகுவாகப் பாதித்தது. ஒரு மணி நேரமாக அந்தரத்தில் பயணம் செய்வது போல இருந்தது. எவ்வளவு தான் அவனுடன் அன்னி யோன்யமாகப் பழகி இருந்த போதிலும் யோகராணி ஒரு போதும் நாகராஜாவுக்கு அருகில் இவ்வளவு நெருக்கமாக அமர்ந்திருக்க வில்லை. இந்த அனுபவம் அவளுக்குப் புதியது. அவள் நிலையைக் குழப்பிவிட்டது.

நாகராஜா வழமை போல் சரளமாகப் பேசிய போதெல்லாம் ஒற்றைச் சொல்லிலேயே தன் பேச்சை முடித்தாள். 'ஊம், ஊம்' என தலையசைத்தாள்.

கொஞ்சம், கொஞ்சமாக கூச்சம் விலகி சகஜ நிலைக்குத் திரும்பும்போது அவன் தூங்கி விட்டான்.

## (12)

ரயில் ஒரு குலுக்கலுடன் நின்றது.

நாகராஜாவின் தலை மீண்டும் அவளது கன்னத்திற்கு வந்தது, முன்னர் மாதிரியே தலையை நிமிர்த்தி விட்டாள்.

தனது செயலை யாரும் கவனித்தார்களா என்ற சந்தேகம் தலைதூக்கவே பார்வையைச் சுழல விட்டாள். முன் ஆசனத்தின் மூலையில் அமர்ந்திருந்த ஒரு பொடிப்பயல் அவளது செயலை கண் இமைக்காமல் பார்த்தான். குற்ற உணர்வு இதயத்தை ஒரு முறை சுரண்டியது. அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் கண்களை மூடினாள்.

யோகராணிக்கு நாகராஜாவுடன் கடந்த பத்து வருடங்களா கப் பழக்கம் இருக்கிறது. அவனுடன் மனம் விட்டுப் பழகி இருக்கி றாள், தனது இரகசியங்களை எல்லாம் அவனுடன் பகிர்ந்திருக்கி றாள். அதே வேளை, அவனும் தனது மனதைத் திறந்த நிலை யிலேயே வைத்திருந்தான். தனது மனைவி பற்றி...... அவளின் நடத்தை பற்றி நாகராஜா, யோகராணியிடம் பிரஸ்தாபித்திருக்கி றான்.

மனைவி இன்றி நாகராஜா தனித்து பரதேசி போல வாழ் வதை அறிந்து யோகராணி மனம் கலங்கி இருக்கிறாள். அவனுக்கு புத்திமதிகளையும் வழங்கி இருக்கிறாள்.

''அத்தான், சுகந்தி தானே உங்களை விட்டுட்டு போயிட்டா? இனியாவது ஒரு நல்ல பொம்பிளையைக் கலியாணம் கட்டி வாழ்க் கையை அனுபவிங்க'' என்று ஒரு முறை அன்பு வேண்டுகோள் ஒன்றை விடுத்தாள்.

''நல்ல பொம்பிளை? இந்த ஊரில உம்மைக் தவிர ஒரு நல்ல பொம்பிளை இல்லை'' என அவன் அவசரத்துடன், ஆனால், உறுதியாக, நிதானமாகக் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகராஜாவின் வார்த்தைகள் யோகராணியின் இதயத்தில் குளிர்மையை ஏற்படுத்தின.

தனது உள்ளத்தில் புதைந்திருக்கும் ஓர் உண்மையை - யோகராணி மீதுள்ள விருப்பத்தினை - நாகராஜா முதற் தடவையாக மறைமுகமாக வெளிப்படுத்தினான். இவ்வாறு கூறி விட்டு யோகராணியை அர்த்தபுஷ்டியுடன் பார்த்த பார் வையில் காதல் மலிந்து கிடந்தது.

நாகராஜாவின் உள்ளக் கதவுகள் திறக்கப்பட்ட போதும் தன் உள்ளத்தில் தேங்கி கிடக்கும் எண்ணத்தை - நாகராஜா மீதுள்ள காதலை - உடனடியாக வெளிப்படுத்துவதை யோகராணி தவிர்த்தாள். அச்சமயத்தில் முடமான நிலையில் குடும்பம் உழன்று தவித்ததினால் உணர்ச்சியின் வெளிப்பாட்டி னைக் கட்டுப்படுத்தவே விரும்பினாள். பிறிதொரு சந்தர்ப்பத்தில்-குடும்பத்தின் செழிப்பினை உணரும் போது - உள்ளத்தில் மறைந்துள்ள உண்மையை வெளிப்படுத்தலாம் என முடிவு செய்திருந்தாள்.

''அத்தான், நீங்கள் நினைக்கிற மாதிரி நான் நல்ல பொம்பளை இல்லை'' என விரக்திப் புன்னகையுடன் பதில் அளித்தாள்.

நாகராஜா கனைத்தான்.

''யோகம் . . . '' என உற்சாகத்துடன் கூவியவன் நிறுத்தினான். இதழ்கள் துடித்தன. பேச்சு வெளிவரவில்லை.

அவன் என்ன கூற எத்தனிக்கிறான் என்பதை அறிய அவள் ஆர்வம் காட்டினாள். ஆனால் அவன் மௌனம் ஆர்வத்தை சிதைத்து விட்டது.

அன்றைய தினம் இரவு நாகராஜாவின் எண்ணம் யோகராணியின் தூக்கத்தை வெகு தூரத்துக்கு விரட்டியது. மனதினில் அடிக்கடி அவன் முகமே நர்த்தனம் புரிந்தது. அதை அழிக்க முற்பட்ட போதெல்லாம் தோல்வியே தழுவியது.

நாகராஜா மீது யோகராணிக்கு எப்போது காதல் பிறந்தது?

சுகந்தியை நாகராஜா கரம்பற்ற முன்னரே, யோகராணி தனது மனதில் காதலை வளர்த்திருந்தாள். ஆனால், அது ஊமைக் காதலாகவே கடைசி வரை நீடித்தது. ஒருவருக்குமே - ஏன் நாகராஜாவுக்கே யோகராணி தன்னைக் காதலிக்கும் விடயம் தெரிந்திருக்கவில்லை.

நாகராஜா தன்னை காதலிக்கிறானா, இல்லையா என்பதை அறியாமல் தனது காதலை வெளியிடக்கூடாது என்று யோகராணி எண்ணி இருந்தாள். அவளது எண்ணத்தை செயலுருப்படுத்த சந்தர்ப்பமே கிட்டவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகராஜா சுகந்தியைக் கரம் பற்றினான். அச் செய்தி எட்டியபோது அவள் அடைந்த அதிர்ச்சி, ஆச்சரியம், வேதனை, ஏமாற்றம் .... வாழ்க்கையில் இது போன்ற ஏமாற்றத்திற்கு என்றுமே அவள் முகம் கொடுத்திருக்கவில்லை சில மாதங்கள் வரை வேதனையில் உழன்றாள். குடும்பத்தவருக்குத் தெரியாமல் அரைப்பட்டினியும், முழுப்பட்டினியுமாக கிடந்தாள். மனம் வலிமை இழந்தது. உடல் மெலிவை அரவணைத்தது.

மனப்புண் ஆற பல மாதங்கள் எடுத்தன.

கொஞ்சம் கொஞ்சமாக நாகராஜா மீதிருந்த காதலை மறக்கத் தொடங்கினாள். அச்சமயத்தில் தான் நாகராஜாவை விட்டு சுகந்தி சென்றாள். நாகராஜாவின் வாழ்க்கையில் வெற்றிடம் ஏற்படவே அவன் மீது ஏற்கனவே இருந்த காதல் யோகராணி யின் நெஞ்சில் மீண்டும் முளைவிட்டது. இந்த வெற்றிடத்தை தானே நிரப்புவதா, இல்லையா என்பதையிட்டு அவள் பல நாட்களாக மனப்போராட்டம் நடத்தினாள். இறுதியில் அவனைக் கைபிடிப்பதென முடிவு செய்தாள். இம் முடிவினை வெளிப் படுத்தாமல் நாகராஜாவுடன் முன்னரைப் போல அத்தான் என்ற தோரணையில் பழகினாள்.

துணையை இழந்து, ஊரவர்களின் வீணான பழிச் சொல்லுக்கு ஆளாகி, அவமானச் சின்னத்தை நெஞ்சினில் சுமந்த நாகராஜாவுக்கு யோகராணியின் அன்புப் பேச்சு, புத்திமதிகள் .... வாழ்க்கையின் பசுமையை உணர வைத்தன. ஆரமபத்தில் 'மச்சாள்' என்ற தோரணையில் பழகியவன், மாதங்கள் மறைந்த போது தனது மனதை அவளிடம் பறிகொடுத்தான்.

ஏற்கனவே - சுகந்தியை காதலிக்கும முன் - யோகராணியுடன் பேசி, பழகி இருந்தபோதும் இம்முறை யோகராணி அவன் மனதுக்கு கொடுத்த ஒத்தடங்களால் அவள்மீது கவரப்பட்டான். அவள் நினைவாகவே வாடினான். ஆனாலும, ஏற்கனவே திருமணமான தன்னை — திருமண வாழ்க்கைக்கு லாயக்கற்றவன் என்ற வதந்தியைச் செவியுற்ற நிலையில்-யோகராணி ஏற்றுக்கொள் வாளா என்ற ஐயம் நாகராஜாவுக்கு ஏறபடுவதனால் தனது காதலை மூடி மறைத்தே வந்தான். எனினும், சில சந்தர்ப்பங்களில் தன் எண்ணங்களை மறைமுகமாகப் பிரதிபலித்தான். அவன் எண்ணத்தை யோகராணி புரிந்தும் - அதற்கு வரவேற்பு கொடுக்கக்கூடிய நிலையில் மனதை வெற்றிடமாக வைத்திருந்தும்- குடும்பத்தின் அவல நிலையின் நிமித்தம் மனதை ஊமையாக் கினாள்.

## (13)

ரயில் புறப்பட்டது.

குடும்பத்தின் சகல உறுப்பினர்களையும் சுற்றி யோகராணியின் நினைவு மேய்ந்தது. காலையில் நடந்து மனதுக்குள் அடைக்கலம் புகுந்தவை படிப்படியாக வெளியேறின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யோகம், என்னவோ நீ நல்லபடியாக போய் உழைச்சு காசு அனுப்பினால் போதும். உடம்பை கவனிச்சுக் கொள். இப்பவே எலும்பும் தோலுமாக இருக்கிறாய். இனி எப்படிப் போகப் போறியோ'' - காலையில் கிணற்றடியில் யோகராணியின் முதுகைத் தேய்த்தபடி மங்களம் கூறினாள்.

அவளே தொடர்ந்தாள் :

''எங்களுக்கு காசு அனுப்ப வேணும் என்டதற்காக அரைப்பட்டினி கிடக்காதை. நல்லா சாப்பிட்டு மிச்சத்தை அனுப்பு. நாங்க இஞ்ச சரிக்கட்டுறம். நீ அனுப்புற காசில கொஞ்சத்தை மிச்சப்படுத்தி அப்பம், வடை சுட்டு விற்கலாம் என்டு நினைக்கிறன். அப்பத்தான் நாலு காசாவது தேறும்.''

''அம்மா, நீங்க ஒரு வருத்தக்காரி. பேந்து அப்பம், வடை சுடுகிறதுக்காக நெருப்புக்குள்ல வெந்தால் வருத்தம் கூடி விடும். நீங்க ஒன்டுமே செய்யாதீங்க. நான் தேவையான அளவு காசு அனுப்புறன்'' என யோகராணி கடிந்தாள்.

''நீ கஷ்டப்பட்டு உழைச்சு அனுப்ப, நாங்க கைகட்டிக் கொண்டு சொகுசாக வாழுகிறதோ? ஊரில இருக்கிறதுகள் என்ன கதைக்கும்?''

''அம்மா, ஊரில இருக்குறதுகளை பற்றி ஒண்டும் நினைக்காதையுங்கோ. அதுகள் எங்களை வாழவும் விடாதுகள்; சாகவும் விடாதுகள்.''

மங்களம் என்ன நினைத்தாளோ அதன் பின் அது பற்றி மேலும் பிரஸ்தாபிக்கவில்லை.

கிணற்றடியில் இருந்து வெளியேறி அறைக்கு வந்து தலைமயிர் வாரிக் கொண்டிருந்த போது சுசிலா வந்தாள். யோகராணி கூறாமலேயே அவளது தலைமயிரை பின்னத் தொடங்கினாள். கண்ணாடியில் பார்த்த போது சுசிலாவின் முகத்தில் ஒரு தவிப்பு குடியிருப்பதை யோகராணி அவதானித்தாள்.

''அக்கா.............''

''ஊம்.''

''உன்னோட ஒரு விஷயத்தை வெளிப்படையாக பேசணும்.''

''என்ன?''

''நான் டியூட்டரிக்கு போறதை விட்டு விடலாம் என்டு நினைக்கிறன்.''

''ஏனாம்?''

36350 c



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்கட குடும்பம் இருக்கிற நிலையில டியூட்டரி படிப்பு தேவையா? பேசாமல் பள்ளிக்கூடத்திலேயே நல்லா படிச்சால் டியூட்டரி பக்கமே எட்டிப் பார்க்கத் தேவையில்லை.''

பொறுப்புணர்ச்சியுடன் சுசிலா பேசிய போது யோகராணி நெகிழ்ந்து போனாள். பேச்சு தற்காலிகமாக முற்றுப் புள்ளி பெற்றது.

''அக்கா, என்ன சொல்லுகிறாய்? போகாமல் விடட்டோ.''

''இன்னும் கொஞ்ச நாளைக்குத் தானே டியூட்டரி? பேந்து நீ சோதனையில 'பாஸ்' என்டால் ஏன் டியூட்டரி பக்கம் போக வேணும்?''-யோகராணி சிந்தனையோடு, நிதானமாகவே கேட்டாள்.

சுசிலா அதற்குப் பதில் கூற முற்பட்டபொழுது நாகராஜா வெளிவாசலில் நிற்பது தெரியவே யோகராணி அங்கிருந்து அகன்று விட்டாள்.

## (14)

ரயில் நின்றது.

பத்து நிமிடங்களாக நகரவில்லை. யன்னல்கள் யாவும் மூடப் பட்டிருந்ததினால் அகோரமாக இருந்தது. யோகராணிக்கு வியர்த் தது. கைலேஞ்சியினால் முகத்தில் விசிறினாள்.

நாகராஜா கண் விழித்தான். அங்கும் இங்கும் பார்த்தான். பின் யோகராணியை நோக்கினான். அவள் நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பி இருப்பதைக் கண்டவன் 'ஷட்டரை' மேலே தூக்கி விட்டான்.

நிமிஷங்கள் நகர்ந்தன.

''என்ன ஸ்டேஷன்'' எனக் கேட்டபடி சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தான். பின் கலைந்திருந்த தலைமயிரை கைவிரல்களால் கோதினான்.

''மாகோ போலத் தெரியுது'' – முன்னால் கிழவன் பதிலளித் தார்.

''ஏனாம் இவ்வளவு நேரம் நிக்குது?''

''ட்ரெயின் குரஸிங்கோ தெரியவில்ல.''

'ஆவ்' என நாகராஜா கொட்டாவி விட்டான்.

யோகராணியை மீண்டும் நோக்கினான்.

''நித்திரை கொண்டீரோ?''

''இல்ல.''

''நான் நல்லா நித்திரை கொண்டன். கனவு கூட கண்டன்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகராணி மென்முறுவல் பூத்தாள்.

''கனவில் உம்மையும் கண்டேன்.''

விழிகளால் என்ன கண்டீங்க எனக் கேட்டாள்.

''நீரும், நானும்..... ...'' என இழுத்து பேச்சை நிறுத்தியவன், நமுட்டு சிரிப்பொன்றை சாவகாசமாக உதிரவிட்டான்.

யோகராணியின் முகத்தை நாணம் போர்த்தி விட்டது. புன்னகையைப் படர விட்டு மறுபக்கம் திரும்பினாள்.

''வெட்கம் வந்துட்டுதோ?'' உதட்டில் சுழியோடிய சிரிப்போடு கேட்டான்.

யோகராணி திரும்பினாள். ''அத்தான், எல்லாரும் எங்களைத் தான் பார்க்கினம். கொஞ்சம் சும்மா இருங்களேன்'' என அன்புடன் கடிந்தாள்.

நாகராஜா பற்கள் தெரியச் சிரித்தான்.

மேலும் பதினைந்து நிமிடங்கள் கரைந்தன, ரயில் அசைய வில்லை.

''எத்தனை மணி?'' நாகராஜா முன்னால் கிழவரிடம் கேட்டான்.

அவர் கையை உயர்த்த முற்பட்டபோது ரயிலில் இருந்த 'லைட்' கள் அணைந்தன. இருள் எல்லோரையும் கவ்விப் பிடித்தது.

பிலேசம் யோகராணியைத் தொற்றியது. நெஞ்சு படபடத்தது.

''யோகம், பயப்படாதையும், நான் இருக்கிறன்'' என்ற நாகராஜா அவள் கரத்தைப் பற்றினான்.

யோகராணியின் அடிமனம் ஒரு கணம் அதிர்ந்தது. முழு உடலும் நடுங்கியது. கை விரல்கள் குளிர்மை பெற்றன.

## (15)

வழி வழியே நாகராஜா தொண தொணத்துக் கொண்டு வந்தான்.

''எப்பத் தான் யாழ்தேவி ரயில் சரிவர ஓடப் போகுதோ தெரியவில்ல. இதால சனங்களுக்கு எவ்வளவு கஷ்டம்'' என சினத்துடன் கூறியபடி நடந்தான்.

யோகராணி ஒன்றுமே கூறவில்லை. நள்ளிரவில், இக்கட்டான ஒரு சூழ்நிலையில் தூக்கத்தை ஒத்தி வைத்து விட்டு நடக்க வேண்டுமே என்று தன் தலைவிதியை நொந்தபடி நடந்தாள்.

''யோகம், இது எங்கட கஷ்ட காலம். நடப்பம். கொஞ்சத் தூரம் தான் இருக்குது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகோ ஸ்டேஷனில் நின்ற ரயில் அதன் பின் அசையவில்லை. ஒருமணி நேரத்தின் பின் என்ஜினில் கோளாறு என்றும் கொழும் பில் இருந்து என்ஜின் கொண்டு வரப்பட்ட பின்னரே ரயில் நகரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. என்ஜின் வந்து ரயில் புறப்பட எப்படி யும் காலை ஆறு மணியாகும் என்று 'யாரோ' ஒரு புத்திசாலி கூறிவிட்டுச் சென்றான்.

அதுவரை ரயிலில் அமர்ந்திருக்க நாகராஜா விரும்பவில்லை. அவனுடன் ஒன்றாகப் படித்த சந்திரசேகரம் மாகோவில் ஆசிரிய ராக கடமை புரிகிறான். அவன் ஸ்டேஷனுக்கு அருகில் ஒரு வீட்டில் தனியாக தங்கியிருக்கிறான். அவனது வீட்டில் இரவைக் கழித்து விட்டு காலையில் ரயில் ஏற விரும்பினான்.

தனது விருப்பத்தை யோகராணியிடம் வெளியிட்டபோது "அதற்கென்ன போவம்" என்றாள் அவள்.

இருவரும் தமது உடைமைகளை தூக்கிக் கொண்டு ரயிலை விட்டு இறங்கினார்கள். ஸ்டேஷனில் இருந்து கால் மைல் தூரத் தில் சந்திரசேகரத்தின் வீடு இருந்தது.

நாகராஜா வீட்டை சுலபமாகக் கண்டு பிடித்தான். முன்கதவில் தட்டினான். நீண்ட நேரம் தட்டிய பின்னர் கதவு திறபட்டது. கதவை சந்திரசேகரம் தான் திறந்தான். அவனின் வாயிலிருந்து வெளிப்பட்ட சாராய நாற்றம் யோகராணியின் மூக்கினுள் புகுந்தது. வயிற்றைப் பிரட்டியது.

"டேய் நாகராஜா, என்ன இந்த நட்ட நடு ராத்திரியில" என சந்திரசேகரம் வெறிக்குரலில் வினவினான்.

நாகராஜா வந்த காரணத்தைச் சுருக்கமாகச் சொன்னான்.

"இங்க தங்க வேணுமா? தங்கினால் போச்சு. உனக்கு இல்லாத இடமோ?" என்ற சந்திரசேகரம், யோகராணி மீது அநாக ரிகமான பார்வையொன்றை வீசினான்.

"மச்சான், ஆர் பெட்டை?"

"என்ர மச்சாள்."

"இவளையோ நீ கட்டப்போகிறாய்?"

யோகராணிக்கு 'திக்' கென்றிருந்தது. நாகராஜாவின் முகம் இறுகிவிட்டது.

"மடையா! பொத்தடா வாயை." சினத்துடன் வெடித்தான். "இது என்ர மச்சாள். அவ்வளவுதான். வேலைக்காக கொழும்புக்கு போகுது. சும்மா துணைக்கு வந்தன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''துணைக்கு என்டு இப்ப சொல்லுவாய். பிறகு நிரந்தர துணையாக்கிவிடுவாய்'' என்று கேலியுடன் கூறிய சந்திரசேகரம் அட்டகாசமாகச் சிரித்தான்.

நாகராஜா ஒன்றுமே கூறவில்லை. சம்பாஷணையை வளர்க்க விரும்பாமல் மெல்லிய சிரிப்பொன்றை வெளியிட்டு ''மச்சான் ஆளைவிடு. எனக்கு நித்திரை வருகுது. கொஞ்சம் படுக்க வேணும். நாரி எல்லாம் நோவுது'' என்றபடி பலத்த கொட்டாவி ஒன்றை விட்டான்.

''எனக்கும் நித்திரை வருது. பின்னேரம் தொடக்கம் ஒரே குடி. இப்ப அரை மணித்தியாலத்திற்கு முந்தித் தான் படுத்தனான் ....... மெய்யே, மச்சான் உன்ர மச்சாளின்ர பெயர் என்ன?''

''யோகராணி.''

''சா! நல்ல பெயர். யோகத்திற்கு ராணி. கட்டுறவன் பாடு யோகம் தான்'' என்ற சந்திரசேகரம் ஹாஸ்யம் மிக்க பார்வை யொன்றை யோகராணியை நோக்கி படரவிட்டான்.

அவன் செய்கை யோகராணிக்கு எரிச்சலை வரவழைத்தது. லேசாகச் சீற்றம் ஏற்பட்டது. எனினும், தன் உணர்ச்சிகளை அடக் கியபடி தலைகுனிந்தாள்.

சந்திரசேகரம் என்ன நினைத்தானோ அதன் பின் அங்கிருந்து அகன்றான். ''மச்சான், முன் அறையில இரண்டு கட்டில் இருக்குது. போய்ப் படுங்க. காலமை என்னை எழுப்பி விடுங்கோ. தேத்தண்ணி ஊத்தித் தாறன்'' என்றவன் தள்ளாடியபடி நடந்து சென்று மறைந்தான்.

''குடிகார மட்டை! குடிச்சுக் குடிச்சு குட்டிச் சுவராகிறான்'' என நாகராஜா ஏசினான்.

யோகராணியின் இதயம் தவியாய் தவித்தது.

இருள், தனிமை, சந்தர்ப்ப சூழ்நிலை இந்த மூன்றும் அவள் மனதினுள் அதைரியத்தைத் தாராளமாக வரவழைத்திருந்தன.

ரயில் இருளில் மூழ்கியபோது அவள் கரத்தைப் பற்றிய நாகராஜா இனி என்ன மாதிரி நடப்பான்?

அவன் தன் கரத்தைப் பற்றிய போது யோகராணியின் முழு உடலும் சிலிர்த்தது. அவனின் செய்கை, அவளுள் அச்ச உணர்வைத் தோற்றுவித்தது. மெல்ல அவன் பிடியிலிருந்து தன் கரத்தை விடுவிக்க முயன்றாள். அவன் பிடியை விடவில்லை.

''அத்தான், பிளீஸ் கையை விடுங்க'' என்று லேசான சீற் றத்துடன் கூறிய போதே அவன் பிடியை விட்டான்.

சில நிமிஷங்கள் கழிந்த பின் நாகராஜா அவளுடன் பேசினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யோகம், என்னை மன்னிச்சிடும்.''

''என்னத்துக்கு?''

''உம்மட கையை பிடிச்சதுக்கு.''

''நான் அதை எப்பவோ மறந்துட்டன். இனி அப்படி நடக்க மாட்டீங்க என நம்புறன்.''

நாகராஜா புன்னகைத் தானே தவிர பதில் ஒன்றும் கூற வில்லை.

சந்திரசேகரத்தின் வீட்டில் நாகராஜா சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திவிடுவானோ என்ற அச்சம் யோகராணியின் மனதினுள் பயப்பிராந்தியை ஏற்படுத்தி இருந்தது. ஆனால், நாகராஜா தான் கண்ணியமானவன், உத்தமன் என்பதை நிரூபித்துவிட்டான். இதன் மூலம் அவளின் உள்ளத்தினுள் அவனுக்கான இடம் மேலும் விஸ்தாரமடைந்தது.

சந்திரசேகரம் தன் அறைக்குள் புகுந்தவுடன் நாகராஜா யோகராணியை நோக்கினான். அவள் பார்வையில் தெரிந்த கலக்கத்தை அவன் அவதானித்து விட்டான்.

''யோகம், நீர் உள்ளுக்கு போய் படும். நான் இந்தக் கதிரையில படுக்கிறன். இன்னும் கொஞ்ச நேரத்துக்குள்ளை விடிஞ்சு விடும் தானே'' என்றபடி ஹோலில் இருந்த நாற்காலியொன்றில் நாகராஜா அமர்ந்தான்.

யோகராணி முதலில் தென்பட்ட அறைக்குச் சென்றாள். நேரத்தைப் பார்த்தாள். ஒரு மணி. நான்கு மணி நேரம் தூங்கலாம் என்று நினைத்த வண்ணம் சூட்கேஸைத் திறந்து ஷோர்ட்டியை எடுத்தாள்.

சேலையைக் களைந்துவிட்டு, ஷோர்ட்டியை அணிய முற் பட்ட போது உள்ளே நாகராஜா வந்தான். அவன் வரவை யோகராணி சற்றேனும் எதிர்பார்க்கவில்லை. அதனால் ஏற்பட்ட பதைபதைப்பில் ஷோர்ட்டியை கைநழுவ விட்டாள்.

''ஓ! ஐ ஆம் வெரி சொறி. நீர் உடுப்பு மாத்துவீர் என்று நினைக்கவில்லை. ஏலுமென்டால் என்ர சூட்கேசை திறந்து சிகரெட் பக்கெட்டை எடுத்துத் தாரும்'' என்ற நாகராஜா வந்த வேகத்தில் அறையை விட்டு வெளியேறினான்.

ஒரு சில கணத்துக்குள் நடந்த அந் நிகழ்ச்சியினால் யோக ராணியை வெட்கமும், அச்சமும் நன்கு பீடித்துவிட்டன. அவள் இதயம் பல தடவைகள் சிலிர்த் தெழுந்தன. சில வினாடிகள் வரை ஒன்றுமே செய்யத் தோன்றாமல் பிரமை பிடித்த நிலையில் திகழ்ந்தாள்.

படிப்படியாக நிதான நிலைக்கு திரும்ப முற்பட்டபோதே தன் நிலையை உணர்ந்தாள். உடனடியாக கீழே நழுவிய ஷோர்ட்டியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து அவசரம் அவசரமாக அணிந்தாள். அதன் பின்னர் அவள் சகஜநிலைக்குத் திரும்ப நெடுநேரம் எடுத்தது. ஏகாந்த நிலையில்—விழிகளை இமைக்க மறந்த நிலையில் நின்றாள்.

"யோகம், சிகரெட் பக்கெட் எங்க?" என்ற நாகராஜாவின் குரல் கேட்ட பின்னரே அவள் நிதானத்துக்கு வந்தாள். சிகரெட் பக்கெட்டை எடுத்தவள் வெளியே வரத் தயங்கினாள். இதயத்தின் படபடப்பு அடங்க மறுத்தது. வெகு பிரயாசைப்பட்டு மனதைத் திடப்படுத்தினாள். அறையை விட்டு வெளியேறி ஹோலுக்குச் சென்றாள். அவள் கண்களில் அச்சமும், தயக்கமும் நிறைந்து விளங்கின.

நாகராஜா நாற்காலியில் சரிந்து அமர்ந்திருந்தான். அவன் கண்கள் மூடியிருந்தன.

"இந்தாங்க அத்தான்" என்று அவள் சிகரெட் பக்கெட்டை நீட்டினாள்.

நாகராஜா கண்களைத் திறந்தான். சுவாரஷ்யத்துடன் அவளை நோக்கியவன் சிகரெட் பக்கெட்டை கைநீட்டிப் பெற்றான்.

அவன் பார்வைக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவள் பார்வையைத் தாழ்த்தியபடி நின்றாள்.

"தாங்ஸ் யோகம். நீர் போய் படும்."

"நெருப்புப் பெட்டி இருக்குதா?"

"ஓமோம்."

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

அவள் அறைக்குத் திரும்பினாள். அறைக் கதவைப் பூட்டுவதா, இல்லையா என்ற சர்ச்சை அவள் மனதினுள் மூண்டது. நாகராஜா ரயிலில் நடந்த விதத்தை நினைத்த போது பூட்டுவது தான் சிறந்தது என யோசித்தாள். ஆனால், அவனை நம்பி இவ்வளவு தூரம் வந்த பின், அவன் ரயிலில் நடந்த விதத்தை மட்டும் காரணமாக வைத்து அவனுக்கு அகெளரவத்தை ஏற்படுத்தும் விதத்தில் நடப்பது சரியல்ல என மனம் குத்திக் காட்டியது. தனது அன்பினை, காதலை வெளிப்படுத்த அவள் கரத்தைக் கைப் பற்றியவன் கீழ்த்தரமான செய்கையை மேற்கொள்வான என எதிர்பார்ப்பது தவறு என எண்ணினாள். அப்படியே அவன் கீழ்த்தரமாக நடக்க முயன்றாலும் அதை தடுத்து நிறுத்திவிடும் சக்தி; பலம் தன்னிடம் புதைந்திருக்கின்றன என நம்பினாள். எனவே, கதவைப் பூட்டுவதில்லை எனத் தீர்மானித்தாள்.

அறையில் இரு கட்டில்கள் கிடந்தன. அவற்றின் மீது அழுக்கான 'பெட்ஷீட்கள்' விரிக்கப்பட்டிருந்தன. இவற்றில் யார் படுத்தார்களோ என எண்ணியவள் அருவருப்புடன் கட்டிலொன்றில் சரிந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்காக, தனது துணைக்காக வந்திருக்கும் நாகராஜா நித்திரையைத் தியாகம் செய்து நாற்காலியில் அமர்ந்திருப்பதையிட்டு அவள் மனம் துயருற்றது.

'சே! அவரை அறைக்குள்ள படுக்கச் சொல்லி விட்டு நான் தான் கதிரையில படுத்திருக்க வேணும். ரயிலில் கூட தூங்கி தூங்கி வழிந்தாரே. அவரால நித்திரை முழிக்க முடியாது போல.' யோகராணியின் உள்ளம் அவனுக்காக இரக்கப்பட்டது.

அவள் எண்ணங்களை மழுங்க வைக்கும் விதத்தில் கட்டில் மெத்தையில் இருந்த மூட்டைப் பூச்சிகள் அவள் உடம்பைப் பதம் பார்க்கத் தொடங்கின. மெத்தையின் ஒவ்வொரு பக்கமாக திரும்பிப் படுத்த போதும் பூச்சிகளின் தொல்லை தீரவில்லை. அடுத்த கட்டிலுக்குத் தாவினாள். அங்கும் மூட்டைப் பூச்சிகளின் ஆக்கிரமிப்புத்தான் அதிகம். இனியும் இந்தக் கட்டில்களில் படுப்பது என்பது இயலாத காரியம் என்பதைப் புரிந்தாள்.

மதியம் வெயிலில் கொடிகாமம் ஸ்டேஷனுக்கு நடந்து வந்தது, வெயில் அகோரத்தில் ஸ்டேஷனில் ரயிலுக்காக நின்றது, வெயில் பக்கமாக ரயிலில் இருந்தது, மாகோ ரயில் நிலையம் வரை விழித்திருந்தது . . . களைப்பும், நித்திரையும் அவள் கண்களைச் சுழற்றின. ஆனால்,மூட்டைப் பூச்சிகளின் தொல்லை தூக்கத்தைக் கலைக்கின்றதே என எண்ணிய போது ஆத்திரமும், அழுகையும் ஏற்பட்டன.

'அதிர்ஷ்டம் கெட்டவளாகப் பிறந்து விட்டேனே. அதனால தான் இந்த சின்ன விஷயத்தில கூட நான் கஷ்டப்படுறன்' என மனம் வெதும்பி வேதனையுற்றாள்.

கட்டிலில் இருந்து எரிச்சலுடன் எழுந்தாள். வெளியே வந்து பார்த்தாள். நாகராஜா கண் விழித்த நிலையில் சிகரெட் புகையில் தன்னை மறந்திருப்பது தெரிந்தது.

அவனிடம் செல்லத் தயக்கமாக இருந்தது. பேசாமல் நின்றாள். நாகராஜா அவளைக் கண்டு விட்டான்.

''என்ன யோகம் நித்திரை வரவில்லையா?'' எனக் கேட்டான்.

''இல்லை அத்தான். கட்டில்ல ஒரே மூட்டை. கடி கடி என்டு கடிச்சு விட்டுது.''

''இந்தக் கதிரையில இருந்து படும்'' என அவன் முன்னால் இருந்த நாற்காலியைக் காட்டினான். அவள் அமரவில்லை.

''அத்தான், நீங்க நித்திரை கொள்ளவில்லையா?''

''நித்திரை வரவில்லையே!''

''ஏனாம்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உம்மைப் பற்றி நினைச்சுக் கொண்டிருந்தன். நித்திரை வரவில்லை.''

''என்னைப் பற்றியா? என்னைப் பற்றி நினைக்க என்ன இருக்குது?''

''எவ்வளவோ இருக்குது.''

''ஒன்டைச் சொல்லுங்கோவன்.''

''உம்மட இதயம்.''

''என்ர இதயத்தில என்ன இருக்குது?''

''என்ர முகம்.''

யோகராணி ஒரு கணம் ஸ்தம்பமாக நின்றாள்.

நாகராஜாவின் முகத்தில் ஒரு வித அதிசயப் புன்னகை மலர்ந்தது.

## (16)

ஆச்சரியமான பார்வை மறைந்து, கேள்விக்குறி பார்வையில் கலக்க சுபத்திரா புன்னகையைத் தாராளமாக படரவிட்டு வரவேற்பளித்தாள்.

படியேறியபடி யோகராணி தன்னுடன் துணைக்கு வந்திருந்த நாகராஜாவை அறிமுகம் செய்து வைத்தாள்.

''அத்தான், இதுதான் சந்திராவின்ர அக்கா. பெயர் சுபத்திரா. என்ஜினியர் ஒருவரை கட்டி இருக்கிறா'' என யோகராணி அறிமுக படலத்தைத் தொடர்ந்தாள்.

திருமணத்தின் பின் சுபத்திரா சற்று பருமனாகியிருந்தாள். நீண்டு வளர்ந்திருந்த கூந்தலை வெட்டி 'பொப்' செய்திருந்தாள். நாகரீகமும் அவள் மேனியை கெட்டியாக அரவணைத்திருந்தது. செல்வச் செழிப்பு உடல் முழுவதும் பரிணமித்திருந்தது. பேசும்போது கூட நிறைய ஆங்கில வார்த்தைகளைத் தேவையின்றி நுழைத்தாள்.

மூவரும் ஹோலில் அமர்ந்திருந்தவண்ணம் ஊர் புதினங்களை அலசினர்.

''யோகம், இப்பவெல்லாம் 'டிரெயின் டிரவலிங்' என்றால் எனக்கே ஒரே 'அலர்ஜி'. அதாலதான் நாங்க 'ஜாப்னா' பக்கமே வாறதில்லை. பேசாமல் இஞ்சயே 'செட்டில்' பண்ணினால் என்ன என்டு யோசிக்கிறம்'' என சுபத்திரா ஒரு கட்டத்தில் கூறினாள்.

''ஏன் கனடா, அவுஸ்ரேலியாவுக்குப் போனால் கொழும்பைவிட குஷியாக வாழலாமே'' என நாகராஜா நக்கலாக கேட்டான். சுபத்திரா அட்டகாசமாகச் சிரித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவருக்கு போக விருப்பம். ஆனால், எனக்கு விருப்பமில்லை.''

''ஏனாம்?''

''அங்கை நாகரீகம் முத்திப் போச்சு. அந்த நாகரீக வெள்ளத்தில நாங்க நீந்த முடியாது.''

''பகிடியோ கதைக்கிறியள்? எங்கடை படிக்காத சனங்கள் கூட அங்கை போய் நாகரீக வெள்ளத்தில எதிர் நீச்சல் அடிக்குதுகள் தானே?''

''போயிருக்குதுகள் தான். ஆனால், அதால எங்கடை கலை, கலாசாரம் எல்லாம் அழியப் போகுதே என்டதை பற்றி அதுகளுக்கு கவலை இருந்தால்தானே?''

நாகரீகத்தின் செழுமையை அனுபவிக்கும் சுபத்திரா இப்படிப் பேசியதில் நாகராஜாவுக்கு அதிசயமாக இருந்தது. கொழும்பில் நாகரீக மோகத்தில் மூழ்கியிருந்தாலும் தமிழினத்தின் பாரம்பரியங்களிலும் மோகம் கொண்டுள்ள அதிசயப் பிறவிகள் இன்னும் இருக்கின்றனவே என எண்ணிய போது நாகராஜாவின் உள்ளம் புளங்காகிதம் அடைந்தது.

அவர்கள் மேலும் பேசும் முன் யோகராணி குறுக்கிட்டாள்.

''சுபா அக்கா, எனக்கு கொழும்பில வேலை கிடைச்சிருக்குது.''

''அப்படியா? வெரி குட்.''

''அதால நான் கொஞ்ச நாளைக்கு இங்க தங்கலாம் என்டு நினைக்கிறன். இதைப்பற்றி சந்திராவும் உங்களுக்கு கடிதம் எழுதித் தந்தா'' என்ற யோகராணி கடிதமொன்றை சுபத்திராவிடம் நீட்டினாள்.

''சந்திரா, ஏன் இதைப்பற்றி எனக்கு எழுதவேணும்? நீர் சந்திராண்ட நல்ல பிரெண்ட், உம்மை எனக்கு கன நாளா தெரியும். நீர் நல்ல கேர்ள். கொஞ்ச நாள் என்ன கன நாளைக்கே இரும்.''

சுபத்திராவின் வார்த்தைகள் யோகராணிக்கு தேனாக இனித்தன. மகிழ்ச்சி கரை புரண்டோடியது.

''தாங்கியூ சுபா அக்கா. என்னில நீங்க இவ்வளவு அன்பு காட்டுவீங்க என்டு நான் நினைக்கவில்லை'' என்று யோகராணி ஆனந்தத்தில் கூவினாள்.

''என்னை அளவுக்கு மீறி புகழாதையும்.''

''சுபா அக்கா, இன்னொரு விஷயம்.''

''என்ன?''

''அத்தான் நாளைக்கு காலமை ஊருக்கு போறார். இன்டைக்கு இரவைக்கு இஞ்ச தங்கலாம் தானே?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ! ஷுவர், அவர் இஞ்சயே இருக்கட்டும். அதில என்ன கஷ்டம்? ஆனால், இது சின்ன ஒரு வீடு. 'எக்ஸ்ட்ராவாக' இன்னொரு அறை தான் இருக்குது. நீங்க இரண்டு பேரும் ஒரு அறையை 'ஷியார்' பண்ணுவீங்க தானே?"

"ஓ! ஷுவர்" என யோகராணி தன்னை மறந்த நிலையில் கூறினாள். நாகராஜாவின் பார்வை நிலைக்குத்தி நின்றது.

## (17)

மாலை மங்கும் வேளை ராஜரட்னம் வந்தான். அவனை சுபத்திரா அறிமுகம் செய்து வைத்தாள். அதன் பின் நால்வரும் அமர்ந்திருந்த வண்ணம் அளவளாவினர்.

ராஜரட்னத்தின் வருகையின் பின் யோகராணிக்கு அடிக்கடி எரிச்சல் ஏற்பட்டது. ராஜரட்னம் அவளது மேனியை மொய்ப்பது போல் பார்க்கவே யோகராணி அங்கிருக்க முடியாமல் தவித்தாள். இடையிடையே அநாவசிய பகிடிகளை ராஜரட்னம் உதிர்த்தான்.

நாகராஜா அங்கிருந்ததில் ராஜரட்னத்திற்கு பிடித்தம் இல்லை என்பதை அவன் பார்வை பறைசாற்றியது. நாகராஜாவின் பேச்சில் அடிக்கடி குறுக்கீடு செய்தவன் அவனை மட்டம்தட்டும் விதத்தில் வார்த்தைகளை உதிர்த்தான். ராஜரட்னத்தின் பார்வையிலும், பேச்சிலும் யோகராணி எரிச்சலுற்ற போதும் மனதை அடக்கியபடி இருந்தாள்.

ராஜரட்னம் சற்றுக் கவர்ச்சி பொருந்தியவன். சுருள், சுருளாக வளர்ந்திருந்த தலைமயிரும், அடர்த்தியான கன்னமயிரும், அரும்பு மீசையும், நிறைவான தோற்றமும் அறுபதாம் ஆண்டுகளின் தமிழ் சினிமா கதாநாயகர்களின் தோற்றத்தைப் பிரதிபலித்தன.

ஏழுமணி போல் நாகராஜா அவர்களிடம் விடைபெற்று வெளியே சென்றான்.

"யோகம், என்ர கூட்டாளி ஒருவன் கொள்ளுப்பிட்டியில இருக்கிறான். அவனைப் பார்த்துவிட்டு வாறன்" என நாகராஜா போக முன் கூறினான்.

"கெதியில வாங்க. நாளைக்கு காலமை வெள்ளன எழும்ப வேணும்."

நாகராஜா போனபின் சுபத்திரா சமையல் அறைக்குள் அடைக்கலமானாள்.

"சுபா அக்கா, நானும் கூடமாட உதவி செய்யுறன்" என யோகராணி எவ்வளவோ கூறியும், சுபத்திரா அவளை சமையல் அறைப்பக்கமே அண்ட விடவில்லை.

"நீர் நல்லா களைச்சிருக்கிறீர். போய் 'ரெஸ்ட்' எடும். நாளைக்குத்தான் 'கிச்சன்' பக்கமே வரவேணும்" என்று கண்டிப்புடன் கூறி விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகராணிக்கு வேறு வழியிருக்கவில்லை. ஹோலுக்கு வந்து அன்றைய தினசரிகளை எடுத்து வாசித்தாள்.

இடையிடையே வீட்டு யோசனை அவள் சிந்தனையில் படிமமாகப் பளிச்சிட்டு வாசிப்பினை மழுங்கச் செய்தது.

தாயும், தங்கையும், தம்பியும் அவள் நினைவில் மாறி மாறித் தோன்றி மறைந்தனர்.

''என்ன பலத்த யோசனை'' என்றபடி வந்த ராஜரட்னம் அவள் முன்பாக சாவகாசமாக அமர்ந்தான்.

''ஒன்றுமில்லை'' எனக் கூறி யோகராணி எழுந்தாள்.

அங்கு, அத்தருணத்தில், ராஜரட்னம் முன்பாக அமர்ந்திருக்க அவள் விரும்பவில்லை.

''இரும், இரும்....... என்ன சரியான பட்டிக்காடாக இருக்கிறீர்? நான் என்ன உம்மை விழுங்கி விடப்போறேனா'' எனக் கேட்டு ராஜரட்னம் சிரித்தான்.

''யோகம் இரும், அவர் உம்மை விழுங்க மாட்டார்'' என சுபத்திரா சமையல் அறையில் இருந்து கத்தினாள்.

யோகராணிக்கு வேறு வழி இருக்கவில்லை. மனமின்றி அமர்ந்தாள்.

ராஜரட்னத்தின் பார்வையில் அசாதாரண தன்மையே நிறைய புதைந்திருந்தது. அவளது அவயங்களின் கவர்ச்சிப் பகுதிகளை அவன் கண்கள் மொய்த்தன. யோகராணியின் உடல் கூனிக்குறுகியது. உள்ளம் கூசியது.

அதன் பின் ராஜரட்னம் அவளுடன் பல விஷயங்கள் குறித்து பேசினான். அவளது அந்தரங்க விஷயங்களை அறிவதில் அளவு கடந்த ஆர்வம் காட்டினான்.

சந்திரா தனது அத்தானைப் பற்றி கூறியதில் எவ்வித தப்பும் இல்லையென்று யோகராணிக்குப் புரிந்தது. வந்த முதல் நாளே இப்படி நடந்தால் நாட்கள் நகர எவ்வாறு நடப்பானோ என நினைத்து அச்சமடைந்தாள். எதற்கும் சில தினங்களில் இங்கிருந்து வெளியேறி அறையொன்றில் தங்குவதற்கு வழி பார்க்கவேண்டும் எனத் தீர்மானித்தாள்.

இரவு வந்தது.

ஒன்பது மணியைத் தாண்டியது. கொள்ளுப்பிட்டிக்குப் போன நாகராஜா திரும்பவில்லை.

சுபத்திரா வருந்திக் கூப்பிட்டும் யோகராணி சாப்பிட மறுத்து விட்டாள். ''அத்தான் வந்த பின் அவருடன் சாப்பிடுறன்'' என முடிவாகக் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்ப நாங்க சாப்பிடுறம்'' என்ற சுபத்திரா கணவனுடன் சேர்ந்து சாப்பிட்டாள்.

## (18)

பத்து மணி.

யோகராணியின் முன்னால் அமர்ந்திருந்த சுபத்திரா நான் கைந்து தடவைகள் கொட்டாவி விட்டாள். ''யோகம், நான் படுக்கப் போறன்'' என்று கூறி கணவனையும் அழைத்துக்கொண்டு அறைக்குள் புகுந்தாள்.

ராஜரட்னம் கதவடியில் சில வினாடிகள் நின்று யோகராணியை ஆசைதீரப் பார்த்தான். யோகராணி முகத்தை மறுபக்கம் திருப்பவே, கபடமான புன்னகையொன்றை உதிர்த்துவிட்டு உள்ளே சென்றான்.

சிறிது நேரம் யோகராணியின் மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்தது. மனதைத் திடப்படுத்திய போது கவலை அதனுள் புகுந்தது. நாகராஜாவின் வரவின்மையே அவளுள் கவலையை ஏற்படுத்தியது.

'அத்தான் எங்க போயிட்டார்? வீட்டைக் கண்டுபிடிக்காமல் எங்காவது அலைந்து திரிகிறாரா? அல்லது......... ' யோசனையில் கேள்விகள் பல விரிந்தன.

பத்தரை மணி.

பசியும், தூக்கமும் அவளை வாட்டி வதைத்தன.

நேரம் செல்லச் செல்ல சினம் பொங்கியது.

கொட்டாவிக்கு மேல் கொட்டாவி வந்தது. தூக்கம் கண்களை தழுவமுற்பட்டபோது கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

யோகராணி எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

சாராயத்தின் நெடி 'குப்' பென்று அவள் மூக்கை அடைத்தது. மூக்கைப் பொத்தியவள் நாகராஜாவை விசனத்துடன் நோக்கினாள்.

நாகராஜா நிற்க முடியாத நிலையில் கதவு நிலையைப் பிடித்த படி நின்றான். அவன் கண்கள் சிவப்பேறி, தலைமயிர் குழம்பி இருந்தன. கண்களை அளவுக்கு மீறி இமைத்தான்.

அவன் நிலை யோகராணிக்கு ஆத்திரத்தையும், கோபத்தையும் ஏக காலத்தில் ஏற்படுத்தின. அவனை தாறுமாறாக ஏச வேண்டும் என்ற உத்வேகம் மனதினுள் எழுந்தது. ஆனால், பிறத்தியாரின் வீட்டில் குரலை உயர்த்த அவள் விரும்பவில்லை. உணர்ச்சியை வெகு சிரமத்துடன் அடக்கியவள் அவனுக்கு உள்ளே வர இடமளித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைக்குள் வந்த நாகராஜா யோகராணியை குற்ற உணர்வுடன் நோக்கினான். அவன் வாயிலிருந்து எச்சில் வடிந்தது.

"யோகம், என்னை மன்னிச்சு விடும்" என திக்கித் திணறிய படி கூறினான்.

"நீங்க ஒரு குடிகாரன் என்று நான் நினைக்கவில்லை. சீ! நீங்களும் ஒரு மனுஷனா?" என யோகராணி சீறினாள்.

"யோகம் .......... நான் குடிகாரன் இல்லை. இன்டைக்கு மட்டும் அளவுக்கு மீறி குடிச்சு விட்டன்."

"ஏன் குடிச்சீங்க?"

"பழைய கூட்டாளியை கண்டதில கொஞ்சம் கூட குடிச்சிட்டன். வேண்டாம், வேண்டாம் என்டு சொன்ன போதும் கூட்டாளி கனக்க ஊத்தி விட்டான்."

"ஓ! அப்படியா" என இளக்காரமாக கேட்டவள் "சத்தமில்லாமல் உடுப்பை மாத்தி விட்டு சாப்பிட வாங்க. புட்டு காய்,காய் என்று காய்ஞ்சு விட்டுது. என்ர வயிறு அதைவிட காய்ஞ்சு விட்டுது" என்றாள்.

"யோகம், என்னால சாப்பிட முடியாது."

"சாராயம் வயிற்றை நிரப்பிப் போட்டுதோ?" என ஒரு இழுவையுடன், ஏளனம் மிளிரக்கேட்டாள்.

அவள் தொனி அவனுக்குப் பிடிக்கவில்லை. அவளை முறைத்தான். கோபத்தில் எதையோ முணுமுணுத்தான். பின் யோகராணியை அருவருப்புடன் நோக்கி "நான் உடுப்பை மாத்தப் போறன். நீர் இஞ்ச இருந்து போம்" என்றவன் இரண்டடி முன்னால் நடந்தான்.

யோகராணி அறையை விட்டு வெளியேற முற்பட்டபோது நாகராஜா வாந்தி எடுக்கும் சத்தம் கேட்டு அசையாமல் நின்றாள்.

நாகராஜா பலத்த சத்தத்துடன் வாந்தி எடுத்தான். வாந்தி தரை முழுவதும் படர்ந்தது.

யோகராணியின் உடல் கோபத்தினால் கொதித்தது. ஆத்திரம் கட்டை மீற முற்பட்டது.

"ஆரோ ஆக்களின்ர வீட்டை வந்து மானத்தை வாங்குது" என்று யோகராணி தலையில் அடித்தாள்.

வாந்தி எடுத்து முடித்த நாகராஜா தலைநிமிர்ந்து அவளை நோக்கினான். அவன் கண்கள் கலங்கின.

"யோகம், என்னை மன்னிச்சு விடும்" என்றபடி அவளை நோக்கி வந்தவன், அவள் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்தான். அவள் கால்களை பற்றியவன் கால் மேற்புறத்தில் தன் முகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப் பதித்தான். அவன் கண்ணீர் அவள் கால்களில் வழிந்தோடியது.

அந்த வினாடியே - அவள் மனதினுள் அடைக்கலம் புகுந்திருந்த கோபம், ஆத்திரம் இருந்த இடம் தெரியாமல் பறந்தோடின. அதனுள் பரவசம் புகுந்தது.

கீழே குனிந்தவள், அவனைத் தூக்கிவிட்டாள்.

## (19)

மேலே மின்சார விசிறி சுழன்று காற்றினை அள்ளி வீசியபடி கருமமாற்றியது. கீழே கிடந்த கட்டிலில் நாகராஜா அயர்ந்திருந்தான்.

அவனுக்கு எதிராக நாற்காலியொன்றில் யோகராணி அமர்ந்திருந்தாள். தூக்கம் அவள் கண்களிடம் விடைபெற்றிருந்தது.

எங்கோ இருந்து 12 மணி அடிக்கும் சத்தம் துல்லியமாகக் கேட்டது.

யோகராணியின் மனதில் ஒரு சிறிய போராட்டம் இடைவிடாது நடந்தது.

நாகராஜாவை மன்னிப்பதா? இல்லையா?

அவன் நடந்த விதத்தை எண்ணிய போதெல்லாம் அருவருப்பும், அசூசையும் ஏற்பட்டன. சே! மனதில் அடிக்கொரு தரம் அங்கலாய்த்தாள்.

நிலத்தில் வாந்தி எடுத்துவிட்டு அவள் கால்களில் வீழ்ந்து கண்ணீரால் பாதங்களைக் கழுவியவன் எழ முடியாமல் கிடந்த போது யோகராணி அவனைத் தூக்கிவிட்டாள்.

தட்டுத் தடுமாறி எழுந்தான். சில வினாடிகள் அவளை வெறியுடன் நோக்கினான். பின் அவளை அரவணைக்கும் நோக்கத்துடன் முன்னேறினான். அவன் எண்ணம் அவளுக்குப் புரிந்தது. சட்டென விலகினாள். முன்னேறிய வேகத்தில் அவன் கட்டிலுடன் மோதி கட்டிலின் மேல் விழுந்தான். நல்ல வேளை அடி ஒன்றும் படவில்லை. முகம் தலையணைக்குள் கவிழ்ந்தது. முகத்தைத் திருப்பி அவளை எரிச்சலுடன் நோக்கி 'எதையோ' கூறி வைதான். அவ்வளவுதான்! அவன் கண்கள் மூடிக் கொண்டன.

நாகராஜாவை மனதினுள் சபித்த யோகராணி, சில நிமிஷங்கள் வரை அடுத்த நடவடிக்கையை மேற்கொள்ள முடியாமல் திணறினாள்.

நாகராஜா வாந்தி எடுத்த சத்தத்தைக் கேட்டு அங்கு ராஜரட்னமோ, சுபத்திராவோ தோன்றாமல் இருந்தமை யோகராணிக்கு நிம்மதியை ஏற்படுத்தி இருந்தது. தற்செயலாக அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் ஒருவர் வந்திருந்தால் அங்கு நிகழவிருந்த சம்பவத்தின் தாற்பரியத்தை யோகராணியினால் உணரக்கூடியதாக இருந்தது.

நாகராஜாவின் செயலினால் ஆத்திரமுறும் ராஜரட்னம் அவனை அல்லது இருவரையும் உடனடியாக வீட்டிலிருந்து வெளியேற்றி இருக்கலாம். அப்படி அவளை வெளியேற்றும் பட்சத்தில் அவள் கொழும்பில் தங்குவதற்கு நிழலின்றி தவித்திருக்கலாம். நல்ல வேளை இக்கட்டான நிலையில் இருந்து தப்பி விட்டாள்.

ஆனாலும், நாகராஜாவின் வாந்தி நினைவுக்கு வந்த போது இக்கட்டான நிலையில் இருந்து இன்னும் தப்பவில்லை என்பது நினைவுக்கு வந்தது. உடனே வாந்தியை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டாள். அந்த நரக வேதனையான காரியத்தில் ஈடுபட்ட போது அவளுக்கே வாந்தி வந்துவிடும் போலிருந்தது. மூக்கைப் பொத்தியபடி கருமமாற்றினாள். ஒருவாறு வாந்தியின் அடையாளமே தெரியாத வகையில் 'ஹோலை' சுத்தப்படுத்தினாள்.

இப்போது அவளுக்கு ஆறுதலாக இருந்தது. மனதினுள் நிம்மதி புகுந்தது. அதன் பின்னரே மனப் போராட்டம் தொடங்கியது.

ஊரில் பெரும் சாது போல் விளங்கிய நாகராஜா இப்படி மூக்குமுட்ட குடித்துவிட்டு வந்ததையிட்டு யோகராணிக்கு அதிசயமாக இருந்தது. அவன் குடிக்கிறதைப் பற்றி அவள் கேள்விப்பட்டதே இல்லை. குடித்து விட்டுவீட்டுக்கு வந்ததைக் கூட அறியமாட்டாள். அவன் குடிப்பதில்லை என்றே எண்ணி இருந்தாள். கொழும்பில் அவள் எண்ணத்தை மழுங்கடிக்கும் விதத்தில் அவன் குடிபோதையில் வந்து அவளது ஆத்திரத்தை கிளறியது மட்டுமன்றி நாகரீகத்தை சமாதி கட்டவும் முனைந்து விட்டான்.

ஆனாலும், அவன் குடிபோதையில் நடந்த விதம் வெகுண்டெழுந்திருந்த மனதினுள் சாந்தியை ஏற்படுத்தி விட்டது. அவள் கால்களை அவன் கண்ணீரால் கழுவியபோது . . . . சொற்ப வினாடிக்குள் அவள் பிடரி மயிர்கள் சிலிர்த்தெழ . . . உணர்ச்சி நாளங்கள் யாவும் புடைத்தெழ . . . . . உணர்வுகளின் அதிர்வுகளைத் தாங்க முடியாமல் இதயம் படபடக்க . . . . இன்ப சாகரத்தில் மூழ்கினாள். அதில் புதைந்திருந்த சுகம் அவளுக்கு புதுமையானது. என்றுமே அனுபவித்திராதது.

அந்த கொஞ்ச நேரத்துக்குள் நடந்து முடிந்து போன சம்பவத்தை எண்ணிப் பார்க்கப் பார்க்க . . . . அவள் அனுமதியின்றி புன்னகைகள் தோன்றி மறைந்தன.

கைவிரல்களின் நடுக்கம், உடலின் மெல்லிய சூடு . . . மெல்ல மெல்ல மறைய அவள் நிதான நிலைக்குத் திரும்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது அவன் தவறு அவள் இதயத்தை முள்ளாக குத்தத் தொடங்கியது. அவன் இழைத்த தவறு என்ன?

குடித்து விட்டு வந்தது. வாந்தி எடுத்தது. இவை தவறா? தவறுதான். தவறுகள் மன்னிக்கப்படுகின்றன. தவறு செய்யாதவன் மனிதனே அல்ல. மனிதன் என்ற வரையறைக்குள் இருக்கும் போது தவறு செய்வது வாஸ்தவமே. நாகராஜாவும் தவறு செய்யும் மனித வர்க்கத்துக்குள் அடங்குபவன். அவன் இழைத்த தவறை மன்னித்தால் என்ன?

'மன்னித்தேன், மன்னித்தேன்' என அவள் மனம் திடீரென முடிவு எடுத்து மகிழ்ச்சியில் கூவியது.

இப்போது அவள் உள்ளம் நிதான நிலைக்குத் திரும்பி இருந்தது. அதில் அமைதி நிலவியது.

நாகராஜாவை மனம் குளிர்ந்த நிலையில் நோக்கினாள். அவன் வாய் 'எதையோ' முணு முணுப்பதை கவனித்தாள். சட்டென்று அவனிடம் சென்றாள் அவன் இதழ்களுக்குக் காதைக் கொண்டு சென்றாள்.

3635C.C

'யோகம், என்னை மன்னித்து விடும்' என முணுமுணுப்பது கேட்டது.

யோகராணி புளங்காகிதம் அடைந்தாள். நாகராஜாவின் உள்ளத்தில் புதைந்திருந்த உண்மை—அவனை அறியாமல் வார்த்தைகளாக வெளிவந்த போது- தன்னுள் அவன் வைத்திரு க்கும் அன்பினை, பாசத்தினை, பயத்தினை முற்று முழுதாக, தெளிவாக அறியக்கூடியதாக இருந்தது.

யோகராணி மகிழ்ச்சியின் எல்லைக்கே செனறாள். அதன் தாக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் தவித்தாள். நாகராஜா தனக்கே உரியவன் என்ற எண்ணம் மனதினுள் விகாரமடைந்தது. அவன் கரத்தை எடுத்து தன் நெஞ்சில் பதித்தாள். அவன் கண்களைத் திறக்கவில்லை. கரத்தை அழுத்தினாள்.

'யோகம், இனி நான் குடிக்க மாட்டன்'

அவன் இன்னும் பிதற்றினான்.

அவளின் நெஞ்சு நிறைந்து வழிந்தது.

## (20)

**கா**லைக் கடன்களை இயந்திர கதியாக முடித்து விட்டு சாப்பாட்டுக்கு குந்திய போது ராஜரட்ணமும், சுபத்திராவும் அங்கு வந்தனர்.

உயர்ரக 'சென்டின்' நறுமணம் ராஜரட்ணத்தின் உடையிலிருந்து புறப்பட்டு யோகராணியின் மூக்கை வருடிச் சென்றது.

அவன் 'டை' அணிந்து கம்பீரமாகக் காட்சி அளித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜரட்ணம் அவள் முன்பாக அமர்ந்தான்.

இருவருக்கும் சுபத்திரா உணவைப் பரிமாறினாள்.

முதல் நாளைப்போலவே ராஜரட்ணம் தன் வெறிப்பார்வையை அவள் மீது வெளிவிட்டான். அநாவசியமாக சம்பாஷணையையும் வளர்த்தான்.

சுபத்திரா அங்கு இருந்திருக்காவிட்டால் யோகராணி செருப்பை கழற்றி ராஜரப்ணத்திற்கு காட்டி இருப்பாள். அந்தளவிற்கு அவளுக்கு ஆத்திரம் ஏற்பட்டிருந்தது. அமைதியைத் தொடர்ந்தும் கடைப்பிடித்தாள்.

யோகராணி இன்றுதான் முதல் தடவையாக வேலைக்குப் போகிறாள்.

தனது வேலையை வேறு யாருக்கும் கொடுத்திருப்பார்களா என்ற ஐயம் முதல் நாள் பின்னிரவு முதல் தோன்றியிருந்தது.

'கடவுளே, நீ தான் என்னைக் காப்பாத்த வேணும்' என அடிக்கடி பிரார்த்தனை செய்தாள்.

வேலைக்குப் போற அவதியில் அவளால் சரிவர சாப்பிட முடியவில்லை. ஏதோ சாப்பிட்டோம் என்ற ரீதியில் சாப்பிட்டு முடித்தாள்.

''யோகம் உம்மை, உம்மட கொம்பனிக்குக் கிட்ட இவர் 'டிரொப்' பண்ணுவார். 'ஈவினிங்' இவர் வரும்வரை இரும். பஸ்சிலை ஏறி எங்காவது போக நினைச்சு விடாதையும்'' என சுபத்திரா கூறினாள்.

சாவி கொடுத்த பொம்மை போல யோகராணி தலையாட்டினாள்.

ராஜரட்ணம் ஒரு மொரிஸ்மைனர் கார் வைத்திருந்தான்.

யோகராணி முன்ஆசனத்தில் ஏறி அமர்ந்தாள்.

காரில் ஏறிய ராஜரட்ணம் கவர்ச்சி யாவற்றையும் வெளிப் படுத்தி புன்னகை ஒன்றைப் புரிந்தான். அதில் கபடம் நிறைந் திருந்தது.

அவன் சிரிப்பு அவளுக்கு எரிச்சலையூட்டியது. கண்களால் அவனுக்கு எச்சரிக்கை விடுத்தாள். அவன் அதைக் கண்டு கொள்ள வில்லை.

எத்தனை நாளைக்குத்தான் இந்த முசுரோட அவதிப்படு கிறதோ என அங்கலாயித்தாள்.

கார் புறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில் ராஜரட்னம் பேச்சுக்கொடுத்தான். பல கேள்விகளைத் தொடுத்தான். வேறு வழியின்றி அவன் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளித்தாள்.

அவன் 'கியரை' மாற்றும் வேளைகளில் வேண்டுமென்றே அவள் தொடையில் விரல்களினால் வருடினான். அவள் முகம் சுளிப்பதைக் கண்டும், காணாதது போல மீண்டும், மீண்டும் அதே போல் செயல்பட்டான்.

"யோகம். எனக்கு உம்மிலை சரியான விருப்பம். ஏனோ என்டு தெரியவில்லை. உமக்கு என்னிலை விருப்பமோ" என ஒரு கட்டத்தில் கேட்டான்.

யோகராணிக்கு ஆத்திரம் எல்லை மீறியது.

உடனேயே காரை நிறுத்தச் சொல்லி, காரிலிருந்து இறங்கி தனியாக வேலைக்கு போக வேண்டும் என்று நினைத்தாள். எனினும், தனது எண்ணத்தைச் செயலுருப்படுத்த அவள் விரும்ப வில்லை. அதனால் ஏற்படும் எதிர் விளைவுகளால் சில பிரச்சினை களை அவள் எதிர்நோக்க வேண்டிவரும்.

அவன் கேட்ட கேள்விக்கு கடைசிவரை அவள் விடை அளிக் கவே இல்லை. ஏனோ அவனும் பதிலை அவளிடம் இருந்து அறிய முனையவில்லை.

கார் கோட்டையை அடைந்தது. அவள் பணிபுரியப் போகும் கம்பெனியின் முன்னால் ராஜரட்னம் காரை நிறுத்தினான்.

"இதுதான் உம்மட கம்பெனி. இறங்கும். ஓகே மை பெஸ்ட் ஒப் லக்" என்றவன் இளித்தான்.

யோகராணி ஒன்றுமே கூறவில்லை. 'வெடுக்'கென்று முகத் தைத் திருப்பியவள், அண்ணாந்து அந்தக் கட்டிடத்தை நோக்கி னாள். அதன் மூன்றாவது மாடியில் 'எக்ஸ்போர்ட் அண்ட் இம் போர்ட் கம்பெனி' என்ற பெயர்ப் பலகை தொங்கியது. அவளுள் உற்சாகம் கரைபுரண்டோடியது.

காரில் இருந்து இறங்கினாள்.

"பின்னேரம் ஐஞ்சு மணிக்கு இதிலை நில்லும். நான் போயிட்டு வாறன்" என்ற ராஜரட்னம் காரைக் கிளப்பினான்.

கட்டிடத்தின் படிக்கட்டின் வழியில் ஒரு 'செக்கியூரிட்டி கார்ட்' நின்றான். அவனிடம் தனக்கு வந்த நியமனக் கடிதத்தை காட்டி னாள். மூன்றாம் மாடிக்குப் போகும்படி அவன் பணித்தான்.

ஒவ்வொரு படியிலும் ஏறும் போது அவளுள் மகிழ்ச்சி ததும்ப முற்பட்டது. வாழ்க்கையில் ஒவ்வொரு படியாக உயர்கிறேன் என்ற நினைப்பு மனதை ஆக்கிரமித்தது.



PUBLIC LIBRARY
JAFFNA.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது மாடியை அடைந்தாள். புதுமையான நறுமணம் ஒன்று அவளுக்கு வரவேற்பளித்தது.

'ரிஷர்ப்ஷன்' என்ற பகுதி முன்னதாகத் தென்பட்டது. நாகரீக மோகத்தில் மூழ்கியிருந்த பெண் ஒருத்தி அங்கு அமர்ந்திருந்தாள். அவளிடம் தனது நியமனக் கடிதத்தை நீட்டினாள். அப்பெண் ஒரு முறை விழிகளால் யோகராணியை அளந்து விட்டு கடிதத்தை மேலோட்டமாக பார்த்தவள், "ஏன் இவ்வளவு நாளும் வரவில்லை" என தமிழில் கேட்டாள். காரணத்தை யோகராணி சுருக்கமாக வெளியிட்டாள்.

'ரிஷர்ப்ஷனிஸ்டின்' புருவங்கள் பல தடவைகள் வில்லாக வளைந்தன. "ஹோ, வட் எ பிற்றி" என அனுதாபப்பட்டாள். பின் யோகராணியை நோக்கி "அந்த அறையில் எக்கவுண்டன் ரவிகுமார் இருக்கிறார். அவரைப் போய் சந்தியுங்க. அவர் எல்லா ஏற்பாடுகளையும் செய்வார்" என்றாள்.

'ரிஷர்ப்ஷனிஸ்ட்' காட்டிய அறையை அடைந்தாள். உள்ளே போக தயக்கமாக இருந்தது. கதவைப் பார்த்தபடி நின்றாள். யதேச்சையாக சுற்றும் முற்றும் பார்த்தவளுக்கு அடிவயிறு பகீரென்றது. அலுவலகத்தில் இருந்த பாதிப்பேர் அவளையே வேடிக்கையாகப் பார்த்தபடி இருந்தனர்.

இதயம் விறைப்புக்கு உள்ளாகியது. என்ன செய்வதென்று தோன்றாமல் நின்றாள். முன்னால் இருந்த பெண் ஒருத்தி விழிகளால் உள்ளே போகும்படி சைகை காட்டினாள். யோகராணி மனதைத் திடப்படுத்தினாள்.

உள்ளே அடியெடுத்து வைத்தாள்.

ரவிகுமார் பைல்களுக்குள் முகத்தை நுழைத்திருந்தான்.

"குட் மோர்னிங் சேர்" என தயக்கத்துடன் கூறினாள்.

ரவிகுமார் தலையை உயர்த்தினான்.

யோகராணி புன்னகையைப் படரவிட்டபடி நியமனக் கடிதத்தை அவனிடம் ஒப்படைத்தாள்.

ரவிகுமார் அவளை மேலும் கீழும் பார்த்தான். "சிட் டவுன்" என்றான்.

அவள் அமர்ந்தாள்.

"இன்டைக்கு எட்டாம் திகதி. உங்களை முதலாம் திகதி தானே 'ரிப்போர்ட்' பண்ணச் சொன்னோம்?" என ரவிகுமார் கேட்டான்.

முதலாம் திகதி வர முடியாமைக்கான காரணத்தை அவனிடமும் ஒப்புவித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தனது கண்ணாடியைக் கழற்றினான்.

"மிஸ் செல்லையா, உங்களுக்காக நான் அனுதாபப்படுகிறன்" என்றவன் மேசையில் இருந்த மணியை அடித்தான். சிறிது நேரத்தில் வயதான தோற்றமுடைய ஒருவர் வந்து பணிவாக நின்றார். ரவிகுமார் அவருடன் அலுவலக விஷயம் குறித்து ஆங்கிலத்தில் 'எதையோ' பேசினான்.

யோகராணிக்கு இன்னும் யோசனையாகவே இருந்தது. தனது வேலை இன்னும் காலியாக இருக்கிறதா அல்லது வேறு யாருக்கும் கொடுக்கப்பட்டு விட்டதா என அறிய முடியாமல் தவித்தாள்.

ரவிகுமாரை எங்கோ கண்டது போல் அவளுக்கு இருந்தது. எங்கே கண்டிருக்கிறேன் என மூளையைப் போட்டு குழப்பினாள். நடிகர் பிரதாப் போலவே ரவிகுமாரின் தோற்றம் விளங்குகிறது என்பதை சில வினாடி ஆராய்ச்சியின் பின் கண்டுபிடித்தாள். இருவருக்கும் உள்ள உருவ ஒற்றுமை அவளை வியப்பில் ஆழ்த்தியது.

வயதானவர் அறையை விட்டு வெளியேறினார்.

"மிஸ் செல்லையா, என்னை மன்னித்து விடுங்க, உங்களை இங்க காக்க வைத்து விட்டன். பை த வே, இன்டைக்கு தொடக்கம் வேலையை தொடங்குங்க."

"தங்கியூ சேர்" என சந்தோஷ மிகுதியில் கூவினாள்.

"நீங்க இன்டைக்கு வந்திருக்கா விட்டால் நாங்க வேறொரு கேர்ளை எடுத்திருப்பம். அதிர்ஷ்டம் உங்கட பக்கம் இருக்குது."

யோகராணி மென்மையாக முறுவலித்தாள்.

"இந்த ஒரு விஷயத்தில நான் ஒரு அதிர்ஷ்டசாலி என்டு நினைக்கிறன்."

"எல்லா விஷயத்திலும் நீங்க ஒரு அதிர்ஷ்டசாலி என்டு நான் நினைக்கிறன்."

"அதிர்ஷ்டசாலி? நானா? இல்லவே இல்லை, நான் அதிர்ஷ்டம் கெட்டவள். ஏழைக்குடும்பத்தில் மூத்தவளாகப் பிறந்தவள், எப்படி அதிர்ஷ்டசாலியாக இருக்க முடியும்?"

"உங்களைப் பொறுத்தளவில் அதிர்ஷ்டம் இப்பத்தான் உங்களை அரவணைத்திருக்கிறது, இனியும் அணைக்கும் என நினைக்கிறன்."

யோகராணியின் கண்கள் பல தடவைகள் படபடத்தன.

வீட்டில் இருந்த போது இவ்வளவு நளினமாக, சரளமாக எப்படி ரவிகுமாருடன் பேசினோம் என அவள் தன்னையே பல தடவைகள் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (21)

நாகராஜாவின் நினைவு மனதை மேய்ந்தது.

இந்நேரம் அவர் ஊர் போய் சேர்ந்திருப்பார் என யோகராணி எண்ணினாள்.

ஊரில் இருந்து அவனுடன் வந்த பின் சில பசுமையான சம்பவங்கள் நடந்தேறி விட்டன. யோகராணிக்கும், அவனுக்கும் இடையிலான நெருக்கம் மேலும் இறுகி விட்டது.

அதிகாலையில் நாகராஜா எழும்பும் வரை யோகராணி கட்டிலின் முன்னால் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தாள்.

கட்டிலில் இருந்து எழுந்த நாகராஜா கண்களைப் பல தடவைகள் கசக்கினான். பின் யோகராணியை நோக்கி ''குட் மோர்னிங்'' என்றான். யோகராணி பதிலுக்கு ''குட் மோர்னிங்'' என்றாள்.

நாகராஜா அவள் முன்னால் கை கட்டியபடி நின்றான். ஆசிரியரின் முன்பாக நிற்கும் மாணவனின் பக்குவம் அவன் செயலில் தென்பட்டது.

''யோகம், என்னிலை கோவமா?''

அவள் உடனடியாக பதில் கூறவில்லை. வெறுமனே அவனைப் பார்த்தபடி மௌனமாக இருந்தாள்.

''சொல்லும் யோகம்.''.

''கோபம் தான்....... ஆனால், அதை மறந்து விட்டன்.''

மன்னிப்பு கோரும் பாவனையில் சிரித்தவன், ''நேற்றிரவு நல்லாக குடிச்சு விட்டன்'' என்றான்.

''இப்படித்தானா ஒவ்வொரு நாளும்?''

''ஒவ்வொரு நாளும் குடிக்கிறதா இருந்தால் சத்தி எடுத்திருக்க மாட்டன்.''

''அப்ப, ஏன் நேத்து நிறையக் குடிச்சீங்க?''

''சந்தோஷமாக இருந்தன். அதனால அளவுக்கு மீறி குடிச்சிட்டன்.''

''சந்தோஷமா?''

''ஓமோம்.''

''சந்தோஷத்திற்கு காரணம் என்ன?''

அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

''அதைப் பேந்து ஒரு நாளைக்குச் சொல்லுறன்.''

''இப்ப சொன்னால் என்னவாம்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதில 'த்ரில்' இல்லை.''

யோகராணி பதிலுக்கு அவனைத் துளைக்கவில்லை. அவனது சந்தோஷத்திற்கான காரணத்தை அவளால் அனுமானிக்கக்கூடியதாக இருந்தது. இருந்தும் அவன் வாயாலேயே அதை அறிந்து விட வேண்டும் என்ற ஆர்வம் தோன்றியது. அவன் அதைக் கூற மறுக்கவே அவள் அவனைக் கட்டாயப்படுத்தவில்லை.

''யோகம்.''

''ஊம்''

''இரவு சத்தி எடுத்தேனே. அதெல்லாவற்றையும் சுத்தம் செய்திட்டீர் போல.''

''ஓமோம்.''

''இந்த உதவிக்கு நான் என்ன மாதிரிக் கைமாறு செய்ய போறனோ தெரியவில்லை.''

கைமாறு என்ற சொல்லுக்கு அவன் அழுத்தம் கொடுத்திருந்தான். அந்தச் சொல்லின் உள்ளார்ந்த கருத்தின் ஆழம் அவளுள் மகிழ்ச்சியைப் புகுத்தியது.

''யோகம், இப்ப இந்தக் கட்டத்தில உமக்கு ஒரு உண்மையைச் சொல்லலாம் என்டு நினைக்கிறன்.''

''என்ன?'' ஆர்வம் கலந்த அவசரத்துடன் யோகராணி வினவினாள்.

''நாங்க இரண்டு பேரும் சற்று நெருங்கிப் பழக வேணும் என்டதற்காக தான் இதெல்லாம் நடக்குதோ என்டு தெரிய வில்லை.''

''இதெல்லாம் என்டால் .......?''

''உமக்கு கொழும்பில வேலை கிடைச்சது, நான் உமக்கு துணையாக வந்தது, கோச்சி நடு வழியில நின்டு ஒரே வீட்டில இரவைக் கழிச்சது, நேத்தைக்கு இரவு இந்த அறையில இரண்டு பேரும் தங்கினது . . . நீர் என்ன சொல்லுறீர்?''

''நாங்க இரண்டு பேரும் கன நாளாகத்தான் நெருங்கிப் பழகி வாறமே!''

''இப்படி எப்பவாவது பழகி இருக்கிறோமா?'' அவன் கேட்டு விட்டு அர்த்தபுஷ்டியுடன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். அவன் புன்னகையில் அவளும் பங்கெடுத்தாள். அவனது கேள்விக்கு பதில் கூறாமல் அவள் தலையைக் குனிந்தாள்.

அவன் புறப்படுவதற்குத் தயாரானான். அவளிடம் வந்தான். அவளை அன்புடன் நோக்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் வெளிக்கிடப் போறன். அதற்கிடையில ஒன்டு கேட்கிறன். மறுமொழி சொல்லுவீரோ?''

''மறுமொழி சொல்ல முடியுமெண்டால் கட்டாயம் சொல்லுறன்.''

''யோகம், சுபத்திரா எங்கள் இருவருக்கும் ஒரே அறையைத் தந்த போது என்னோட அறையைப் பங்கு போட எப்படி சம்மதித்தீர்?''

அவளிடமிருந்து பதில் உடனடியாக வெளிப்பட்டது. அவள் பதில், அவள் எவ்வளவு தெளிவான சிந்தனையுடன் விளங்குகிறாள் என்பதை எடுத்துக் காட்டியது.

''அத்தான், எனக்கு உங்களில நம்பிக்கை இருக்குது. அதனால தான் உங்களை நம்பி ஊரில இருந்து வெளிக்கிட்டு வந்தனான்.''

அவள் பதிலில் அவன் புளங்காகிதம் அடைந்தான். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் - சந்தோஷம் அளவு கடந்த நிலையில் - அவளை நோக்கி முன்னேறினான். அவன் கண்களின் கீழே நரம்புகள் துடிப்பதை அவள் அவதானித்தாள்.

''அத்தான், கோச்சிக்கு நேரம் வரவில்லையோ?'' என அவள் உரத்த குரலில் கேட்டபோது அவன் ஸ்தம்பித்து நின்றான். அவன் முகத்தில் சலனமில்லை. அவளையே உற்றுப்பார்த்தவன் ''யோகம்'' என ஒரு முறை தொண்டையைச் செருமியவன், ''நான் போயிற்று வாறன்'' என்றவன் அங்கிருந்து தயங்கித் தயங்கி நகர்ந்தான். முகத்தில் ஏமாற்றம் படிந்திருந்தது.

கட்டிலில் படுத்திருந்தவண்ணம் நாகராஜாவின் உருவத்தை மனதினுள் தோற்றுவித்தும், அழித்தும் கொண்டிருந்த யோகராணி அப்படியே தூங்கிவிட்டாள்.

புதிய இடம், புதிய சூழ்நிலை, புதிய முகங்கள் யோகராணியின் மனதினில் படிந்திருந்த சோகத்தினை விரட்டியடித்திருந்தன. நாலைந்து நாட்கள் வேலைக்கு போய்விட்டு வந்தபின் வாழ்க்கையில் புதியதொரு பற்றுதல் ஏற்பட்டிருப்பதை அவளால் உணரக் கூடியதாக இருந்தது. அலுவலகத்தில் இருந்த பலரும் அவளுடன் சகஜமாகப் பழகினார்கள்.

எக்கவுண்டன் ரவிகுமார் தான் அவளைப் பொறுத்தளவில் ஒரு கேள்விக்குறியாக விளங்கினான். அவன் பேசும், பழகும் விதத்தில் அவள் சந்தேகம் கொண்டாள். அவன் எவ்விதத்தில் அவளுடன் பழகுகிறான் என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சற்று முன் நடந்த நிகழ்ச்சி அவன்பாற் இரக்கத்தை ஏற்படுத்திய அதே வேளை சந்தேகத்தைக் கிளப்பி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்முரமாக 'டைப்' செய்து கொண்டிருந்தவளை 'பியன்' குழப்பினான். "மிஸ் உங்களை எக்கவுண்டன் ஐயா வரச்சொன் னார்" என்று கூறிவிட்டு அவன் சென்றான்.

யோகராணி 'டிக்டேஷன்' புத்தகத்தை எடுத்துக்கொண்டு ரவிகுமாரின் அறைக்கு விரைந்தாள்.

ரவிகுமார் மூக்குக் கண்ணாடியை கைலேஞ்சியினால் துடைத் தபடி இருந்தான்.

அவன் முன்னால் யோகராணி வழமையான தயக்கத்துடன் நின்றாள்.

அவளை அதிசயமாகப் பார்ப்பது போல பார்த்தவன் கதிரை யைச் சுட்டிக்காட்டி சைகை மொழியினால் அமரச் சொன்னான்.

யோகராணி அமர்ந்தாள். 'டிக்டேஷன்' புத்தகத்தை மேசை யில் வைத்து எழுதத் தயாரானாள்.

"டிக்டேஷன் எடுப்பதற்காக நான் உங்களை கூப்பிடவில்லை" என்ற ரவிகுமார் கண்ணாடியை அணிந்தான்.

சட்டென வியப்பு அவள் முகத்தில் பரிணமித்தது. கேள்விக் குறியுடன் அவனை நோக்கினாள்.

தொண்டையை இரு முறை செருமியவன் அவள் குடும்பத் தைப் பற்றி அடுக்கடுக்காக கேள்விகளைத் தொடுத்தான். அவளும் சுருக்கமாக பதில்களைக் கூறினாள். எல்லாவற்றையும் கேட்டு முடித்த போது அவனின் முகம் இருளடைந்திருந்தது.

"மிஸ் செல்லையா, நான் உங்களுக்காகப் பரிதாபப்படுறன். இந்த சின்ன வயசில இப்படியொரு சுமையை சுமக்க வேண்டிய நிலை உங்களுக்கு வந்துவிட்டுது."

"எல்லாம் விதிதான் சேர்."

"உண்மைதான். இந்த விதியை மாற்றியமைக்க வேணும்."

"எப்படி?"

"சொல்லுறன். நீங்க இருக்கிற நிலையில நான் உங்களுக்கு எப்படி உதவலாம் என்று நினைக்கிறீங்க?"

கேள்வியைக் கேட்டு விட்டு சோகமும், இரக்கமும் கலந்த பார்வையை அவன் முகம் வெளிப்படுத்தியதை அவதானித்த யோகராணியின் உள்ளம் நெகிழ்ந்து விட்டது. தனது துயரில், சோக வாழ்க்கையில் பங்கெடுக்க இன்னொருவனும் இருக்கிறானே என நினைத்தபோது அவளுக்கு பேச்சு வரவில்லை.. வெறுமனே, ஏகாந்தப் பார்வையை வெளியிட்டபடி, அவன் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்காத நிலையில் திகழ்ந்தாள்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்லுங்க மிஸ் செல்லையா" என அவன் துரிதப்படுத்தினான்.

சுயநினைவுக்குத் திரும்பியவள் அவன் கேட்ட கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் தடுமாறினாள்.

"சொல்லுங்க............."

சில வினாடிகள் யோசித்த போது அவளால் ஒரு தீர்க்கமான முடிவுக்கும் வரமுடியவில்லை.

'என்ன விதமான உதவியைச் செய்ய அவர் சித்தமாக இருக்கிறார்? என்ன விதமான உதவியைச் செய்யும்படி கேட்போம்?' யோகராணி தடுமாறினாள்.

உதவியை நாடும் நிலையிலா அவள் விளங்கினாள்?

அவளைப் பொறுத்தளவில் சுபத்திராவின் வீட்டில் இருந்து வெளியேற வேண்டும். இல்லாவிடில் ராஜரட்ணத்தின் வெறிக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம். எனவே, வேறு இடத்திற்கு மாற வேண்டும். இதற்கு ரவிகுமாரின் உதவியை நாடினால் என்ன?

போயும், போயும் இதற்கு அவரை நாடுவதா என்ற எண்ணம் ஏற்படவே "உங்களிடம் கேட்கும் அளவுக்கு எந்தவொரு உதவியும் தேவையில்லை" என்றாள்.

அவனின் நெற்றி சுருங்கியது.

"உண்மையைத் தானே சொல்லுறீங்க?"

அவள் ஆமென்று தலையாட்டினாள்.

"அட்லீஸ்ட் உங்கட சம்பளத்தை கூட்டுற மாதிரி உதவி செய்ய வேணுமா?" என அவன் இழுத்தான்.

யோகராணியைப் பொறுத்தளவில் சம்பளம் சற்று அதிகமாகக் கிடைத்தால் ஊருக்குப் போதுமான அளவு பணம் அனுப்பக் கூடியதாக இருக்கும். ஆனால், அந்த உதவியைக் கேட்க அவளுக்கு நா கூசியது. அவளின் சுயகௌரவம் அந்த எண்ணத்தை மனதில் இருந்து வெளியேற்றியது.

"வேண்டாம்" என ஒற்றைச்சொல்லில் பதில் அளித்தாள்.

ரவிகுமாரின் முகம் கோணலாகியது.

"ஓகே, ஓகே" என ஒரு இழுவையுடன் கூறியவன், "உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் சொல்லுங்க. செய்யத் தயாரா இருக்கிறன்" என்றான்.

"சரி சேர்" என்ற யோகராணி எழ முற்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மிஸ் செல்லையா, என்னை சேர் என்று கூப்பிடாதீங்க. வெறுமனே ரவிகுமார் என்று சொன்னாலே போதும். ரவிகுமார் என்று கூப்பிட கஷ்டமென்றால் ரவி என்றே சொல்லலாம்.''

யோகராணி 'க்ளுக்' கெனச் சிரித்தாள். எல்லாமே ஒரு சில வினாடிகள் தான். நாக்கை பற்களால் கடித்தவள், குற்ற உணர்வு டன் அவனை நோக்கி கண்களால் 'சொரி' எனச் சொன்னாள்.

''நீங்க ஏன் சிரித்தீங்க மிஸ் செல்லையா?'' என ரவிகுமார் குழைவுடன் வினவினான்.

''நீங்களும் என்னை யோகராணி என்று சொல்லுங்க. யோகராணி என்ற பெயர் நீட்டு என்டால் வெறுமனே யோகம் என்று சொல்லுங்க.''

ரவிகுமார் கண் மணிகளை ஒரு முறை உருட்டி அவளை அளப்பது போல் பார்த்து விட்டு, ''ஓகே யூ மே கோ'' என்றவன் அவளை நகைச்சுவை உணர்வுடன் நோக்கி ரசித்தான்.

அறையிலிருந்து வெளிப்பட்டு தனது ஆசனத்திற்கு சென்ற யோகராணியின் உள்ளம் ஒரு நிலையில் திகழாமல் தத்தளித்தது. ரவிகுமார் தன்னுடன் பழகும் விதத்தை, தன் மீது அவன் கொள்ளும் இரக்கத்தை ஆராய்ந்தபோது அவன் மீதே அவளுக்கு இரக்கம் ஏற்பட்டது. ஆனால், அவன் சொல்லில், செயலில் ஏதோவொரு சந்தேகம் ஏற்பட்டது. 'அவர் ஏன் வலிய உதவி செய்ய முற்படுகிறார்? என்னை விரும்புகிறாரா? அல்லது, உண்மையிலேயே இரக்கப்படுகிறாரா?' இந்தச் சந்தேகம் முளை விட்டபோது அதை நிவர்த்தி செய்ய விரும்பினாள்.

வசந்தா அங்கு பிரசன்னமானாள். அவள் அங்கு கிளார்க்காகப் பணிபுரிந்தாள். யோகராணியுடன் சற்று நெருங்கிப் பழகினாள்.

''நீர் ரவிகுமார்ன்ட அறையில இருந்து வந்ததிலை இருந்து உம்மை பார்க்கிறன், வட் இஸ் ரோங் வித் யூ?'' என வசந்தா நக்கல் சிரிப்புடன் கேட்டாள்.

''ஒன்றுமில்லை.''

''ஆனால், முகம் அதைச் சொல்லவில்லையே. அவர் என்ன கேட்டார்? தன்னைக் கலியாணம் கட்ட விருப்பமோ என்று கேட்டாரோ?''

''சீ! இல்லை, சும்மா கதைச்சவர்.''

''என்னத்தைப் பற்றி?''

''பொதுவான விஷயம் பற்றி.''

''நீர் என்னட்டை எதையோ மறைக்கிறீர். ஒரு நாளைக்கு அந்த உண்மை வெளியில வந்துதானே ஆக வேணும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகராணி ஒன்றும் கூறவில்லை. தலைகுனிந்தாள்.

"ரவிகுமார் பாவம்." — வசந்தா கூறினாள்.

யோகராணியின் தலை சட்டென்று உயர்ந்தது.

"ஏன்" என அவசரத்துடன் கேள்வியைத் தொடுத்தாள்.

"ரவிகுமாருக்கு இரண்டு அக்காமாரும், மூன்று தங்கச்சிமாரும் இருக்கினம். அவையளுக்கு கலியாணம் முடிஞ்ச பிறகுதான் இவர் கலியாணம் செய்யலாம். ஐஞ்சு சகோதரங்களும் கலியாணம் முடிச்சு இவர் கலியாணம் முடிக்கிறதென்டால் இவருக்கு எப்படியும் நாற்பத்தைஞ்சு வயசாகும். அந்த வயசிலை எவள் தலை நீட்டுவாள்?"

யோகராணியின் உள்ளம் ஊமையாகியது.

## (22)

எங்கோ தொலை தூரத்தில் நாயொன்று ஊளையிடும் சத்தம் கேட்டது.

சற்று முன்னர் தான் யோகராணி கண் விழித்திருந்தாள். கெட்ட கனவு ஒன்று கண்டு திடுக்கிட்டு எழுந்தவள் மீண்டும் தூங்குவதற்கு முயன்றும் அதில் தோல்வி கண்டாள். தூக்கம் அவளை அரவணைக்கத் தவறியது.

யோசனைகள் தான் மனதை ஆக்கிரமித்திருந்தன.

யோசனைகளை விஞ்சும் வகையில் நாகராஜாவின் முகமும், ரவிகுமாரின் முகமும் அவள் மனதில் தோன்றி மறைந்தன.

நாகராஜாவை நினைக்கும் போதெல்லாம் அவள் நெஞ்சில் 'ஏதோவொன்று' ஊற்றெடுப்பது போன்ற உணர்ச்சியே ஏற்பட்டது. அந்த உணர்ச்சியின் தாற்பரியம் அவளுள் புதுவித மோக உணர்வினை தோற்றுவிக்க முயன்றது. அவள் என்றுமே அனுபவித்திராத உணர்வு உடலில் வியாபித்தது.

ஊரில் இருந்து நாகராஜாவுடன் ஒன்றாக புறப்பட்ட நேரம் முதல் அவன் மீண்டும் ஊருக்குப் போகும் வரை நடந்த சம்பவங்கள் அவள் மனத்திரையில் வரிசையாக ஓடின. ஒவ்வொரு சம்பவத்தையும் நினைத்துப் பார்க்கும் போதெல்லாம் உள்ளத்தின் மகிழ்ச்சியைப் புன்னகைகள் பிரதிபலித்தன. மதுபோதை தலைக்கேறிய நிலையில் நாகராஜா தனது கால்களில் விழுந்து கண்ணீரைச் சொரிந்ததை நினைத்துப் பார்த்த போது அவள் பிடரி மயிர்கள் சில்லிட்டு நின்றன. அந் நிகழ்ச்சி மனதில் அழியா இடத்தைப் பெற்று விட்டது.

நாகராஜா நாசூக்காக பேசிய பேச்சுக்கள், வெளிப்படையாகக் கூற முடியாமல் மறைமுகமாகப் பேசிய பேச்சுக்கள் யாவும் அவள் செவிப்பாறையில் மோதின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3635 C.C

இவ்விரு நாட்களிலும் நாகராஜா அவளுடன் பேசிய விதம், பழகிய விதம் அவன் மீது மேலும் மரியாதையையும், பற்றினையும், அன்பினையும் அதிகரித்தது. அவன் உள்ளத்தில் அவளுக்கென்று ஓர் உன்னத இடம் ஒதுக்கப்பட்டிருப்பதை அவளால் உணர முடிந்தது.

'அவர் என்னை விரும்புகிறார். இல்லாவிட்டால் எனக்கு துணையாக ஊரில இருந்து வந்திருக்கமாட்டார். இப்படியெல்லாம் கதைச்சு இருக்க மாட்டார். பழகி இருக்க மாட்டார்......' யோகராணியின் எண்ணங்கள் சிறகடித்துப் பறந்தன. அவற்றில் இனிமை, மகிழ்ச்சி வெகுவாகக் கலந்திருந்தன.

நாகராஜாவின் முகம் அகன்று, ரவிகுமாரின் முகம் நெஞ்சில் பதிந்த வேளை அதனை அகற்ற யோகராணி முயன்றும் தோல்வியையே கண்டாள். அது ஏன் என்று அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவர் என்ன நோக்கத்துடன் தன்னுடன் பழகுகிறார் என்பதை அறிய முயன்றாள்.

'அவருக்கு என்னிலை விருப்பம் ஏற்பட்டு விட்டுதோ? இல்லாவிட்டால் பரிதாப உணர்ச்சி ஏற்பட்டு விட்டுதோ? சகோதரி என்ற வகையில் என்னோட பழகுகிறாரோ அல்லது....'

ஐந்து சகோதரிகளுடன் பிறந்த ஒருவர், அவர்கள் கரை சேரும் வரை வாழ்க்கையில் தனிக்கட்டையாக வாழ வேண்டிய ஒருவர் காதலை நினைத்துப் பார்ப்பாரா? இந்த ஐயம் கேள்வி ரூபத்தில் எழுந்த போது அவளால் தீர்க்கமான முடிவுக்கு வரமுடியவில்லை. முடிவை அறியும் ஆவல் பிறக்காததினால் அவள் மனதினுள் நாகராஜா மீண்டும் எட்டிப் பார்த்தான்.

அப்போது 'யாரோ' நடந்து வரும் ஓசை கேட்டது.

யோகராணிக்கு 'திக்' என்றிருந்தது.

இந்த அகால வேளையில் யார் அறைக்கு வருகிறார்கள்?

"யாரது" துணிவை வரவழைத்தபடி கேட்டாள்.

"உஸ், சத்தம் போடாதையும், நான் தான்."

ராஜரட்னத்தின் குரலைக் கேட்டதும் யோகராணிக்கு தூக்கி வாரிப்போட்டது. சப்த நாடிகளும் அடங்கிப் போயின.

## (23)

நடக்கக் கூடாதது நடக்க விருந்ததை யோகராணி தனது மன வலிமையினால் தடுத்து நிறுத்தி விட்டாள்.

அதன் பலன் அவள் சுபத்திராவின் வீட்டை விட்டு அவமானம் மேலிட்ட நிலையில் வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைக்கு ஆளானாள். அவள் மீது அபாண்ட பழி சுமத்தப் பட்டு, அவப்பெயரும் சூட்டப்பட்டது.

அவமானமும், வெட்கமும், துக்கமும் ஒன்றை ஒன்று மனதினுள் இடம் பிடிக்க போட்டியிட்ட நிலையில் யோகராணி வீட்டை விட்டு வெளியேறினாள். மனதைக் கல்லாக்கி தனக்கு சூட்டப்பட்ட அவப்பெயரை துச்சமென மதித்து, எந்த எதிர் நீச்சலையும் எதிர் நோக்க இந்த யோகராணி தயங்க மாட்டாள் என்பதை நிரூபிக்கும் வகையில் யோகராணி வெளியேறினாள்.

எங்கே போவது என்று தெரியாத நிலையில், கொழும்பில் அறிமுகமானவர்களின் வீடு எங்கே இருக்கிறது என்று புரியாத நிலையில், மனம் போன போக்கில், கால் போன போக்கில் நடந்தாள். ஊரில் இருந்து கொண்டு வந்த உடுப்புக்கள் நிறைந்த சூட்கேஸின் பாரத்தை அசட்டை செய்தவளாக நடந்தாள்.

சுபத்திராவை அவள் எத்தனை தடவைகள் கெஞ்சி இருப்பாள்?

''சுபா அக்கா, தயவு செய்து இன்னும் ஒரு கிழமைக்கு இஞ்ச இருக்க 'பெர்மிஷன்' தாங்க. அதற்கிடையில நான் ஒரு அறையைப் பார்த்துக் கொண்டு போறன்'' என்று கெஞ்சிய போதும் சுபத்திரா தனது முடிவை மாற்றத் தயாராக இருக்கவில்லை.

''ஒரு கிழமை? அந்த ஒரு கிழமைக்குள்ள எவ்வளவோ நடந்து விடும். நீர் இஞ்ச இருந்து இப்பவே போய் விடுறது உமக்கும் நல்லது. எனக்கும் நல்லது'' என்று சுபத்திரா ஆணித்தரமாகக் கூறி விட்டாள்.

''சுபா அக்கா, என்னிலை எனக்கு நம்பிக்கை இருக்குது. ஒன்றுமே நடக்காமல் இருப்பதற்கு நான் 'கரண்டி' தாறன்.''

சுபத்திரா நக்கலாகச் சிரித்தாள்.

''யோகம், உம்மை போன்ற ஒருத்தி இஞ்ச இன்னும் ஒரு நிமிஷத்திற்கு இருந்தால் கூட நான் என்ர குடும்ப வாழ்க்கையை இழக்க வேண்டித்தான் வரும்.''

''இது தான் உங்கட இறுதி முடிவா?''

''ஓமோம்.''

''சரி வாறன். பின்னால், என்றைக்காவது ஒரு நாள் இப்படி நடந்து விட்டேனே என்று நீங்க மனம் கலங்குவீங்க. அப்ப நான் எங்க இருப்பேனோ தெரியாது'' என்ற யோகராணி வீட்டை விட்டு வெளியேறினாள்.

அச்சமயத்தில் வீட்டின் முன் விறாந்தையில் கதவு நிலையுடன் சாய்ந்தபடி ராஜரட்னம் நின்றான். தலை நிமிர்ந்த நிலையில், திமிர் பிடித்த நிலையில் ராஜரட்னம் நிற்பதைக் கண்ட போது யோகராணியின் ஆத்திர உணர்வு நரம்புகளை புடைக்க வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்களைக் கடித்த வண்ணம் அவனை எரித்து விடுவது போல் பார்த்தவள், "சீ! நாயே" என்றபடி எச்சிலைக் காறித்துப்பினாள்

ராஜரட்ணம் எவ்வித சலனமுமின்றி நின்றான். சுபத்திரா "உம், போகலாம்" என அதட்டினாள்.

தனது அவல நிலையை நினைத்து யோகராணிக்கு அழுகை பீரிட்டது. வெகு சிரமத்துடன் அழுகையை அடக்கியவள் அங்கிருந்து கிளம்பினாள்.

நடந்தாள். எவ்வித இலக்குமின்றி, மன நோயாளி போல நடையைத் தொடர்ந்தாள்.

ஊரில் இருந்தபோது பல சோதனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. கொழும்புக்கு வந்து தெளிந்த நீரோடை போன்ற வாழ்க்கையை மேற்கொண்ட கொஞ்ச நஞ்ச நாட்க ளுக்குள் சோதனை தலைவிரித்தாடத் தொடங்கி விட்டது. வேதனையை மறந்திருந்தவளுக்கு வேதனை பன்மடங்கு அதிகரித்தது.

முதல் நாளிரவு நடந்த அந்த துர்ப்பாக்கிய சம்பவத்தை நினைக்க, நினைக்க தன் தலைவிதியை நொந்து கொள்ளத்தான் யோகராணியினால் முடிந்தது. "உஸ் சத்தம் போடாதையும், நான் தான்" என்று கூறியபடி ராஜரட்ணம், யோகராணியை நெருங்கினான்.

ஆனால், அதற்குள் அவள் கட்டிலில் இருந்து பாய்ந்து அறை 'லைட்டை' போட்டாள். 'லைட்' வெளிச்சத்தில் ராஜரட்ணத்தின் உருவத்தைக் கண்டு யோகராணி சமைந்து போனாள்.

அவன் கண்களில் தெரிந்த காம வெறியும், கைவிரல்களின் நடுக்கமும் அவனது உள்நோக்கத்தின் தாற்பரியத்தை அவளுக்கு உணர்த்தியது. அடுத்து அவன் புரியப்போகும் செயல் எது என்று அவளுக்குப் புரிந்தது. அந்நோக்கத்தை நிறைவேற்ற விடாமல் முளையிலேயே கிள்ளி விடுவதற்குத் தயாரானாள்.

"மிஸ்டர் ராஜரட்ணம், பிளீஸ் இஞ்சை இருந்து போங்க" என யோகராணி வேண்டுகோள் ஒன்றை வினயத்துடன் விடுத்தாள்.

அவன் கடை வாயில் கபடமான புன்கையொன்று அரும்பியது.

"யோகம், நீர் மனது வைச்சால் எனக்கு உதவலாம்: நான் பலாத்காரத்தை விரும்பவில்லை."

இதைக்கேட்டு அவள் பெண்மை உணர்ச்சி வெகுண்டெழுந் தது. கோபக்கனல் பறக்க அவனை எரிப்பது போல் பார்த்தாள்.

யோகராணியின் முக பாவத்தையிட்டு ராஜரட்ணம் அலட்டிக் கொள்ளவில்லை. வெகு சாதாரணமாக அவளை நோக்கியவன், "என்ர ஆசைக்கு இணங்கினால் அதால உமக்கு எவ்வளவோ லாபம்.

3635CC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபத்திராவுக்கு தெரியாத முறையில காரியத்தை முடித்து விடுவோம்'' எனக் கூறினான்.

''மிஸ்டர், உங்களைக் கெஞ்சுறன். தயவு செய்து இங்கை இருந்து போங்க. இந்த மாதிரி விஷயங்களுக்கெல்லாம் என்னை நாடாதீங்க'' என யோகராணி இரங்கினாள்.

ராஜரட்னம் சற்று முன்னேறினான்.

அவன் தனது எண்ணத்தை நிறைவேற்றும் முதல் கட்டத்தை ஆரம்பித்து விட்டான் என்பதை அவள் புரிந்தாள்.

துணிவை நிறைய வரவழைத்தவள் ஆடாமல் அசையாமல் நின்றாள். வலதுகையின் விரல்களை பொத்திப் பிடித்தாள். பலம் எல்லாவற்றையும் ஒன்று திரட்டினாள்.

ராஜரட்னம் அவளை அண்மித்தான். அவள் கரத்தைப் பிடிக்க முயன்றான்.

யோகராணி ஒரு வினாடியும் தாமதிக்கவில்லை. பொத்திய கையைப் பாவித்து அவன் கன்னத்தில் அறைந்தாள். இதை ராஜரட்னம் துளியளவும் எதிர்பார்க்கவில்லை. நிலைகுலைந்து போனான். யோகராணி அவனது எதிர்ப்பின்மையைத் தனக்கு சாதகமாக்கி அவனை தாறுமாறாகத் தாக்கத் தொடங்கினாள். கண்மண் தெரியாத விதத்தில் கைகளையும், கால்களையும் விசிறினாள். அவளது தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் அவன் கீழே விழுந்து விட்டான்.

ஆவேசம் பிடித்த நிலையில் நின்ற யோகராணி ''டேய் ராஸ்கல் எழும்படா'' எனக் கத்தினாள்.

ராஜரட்னம் தட்டுத்தடுமாறி எழுந்தான். யோகராணியை ஒரு முறை நோக்கியவன் கண் இமைக்கும் நேரத்திற்குள் அவள் மீது பாய்ந்தான். அந்த வேகத்தில் அவளைக்கட்டி அணைத் தான். யோகராணியினால் அவனிடமிருந்து விடுபடமுடியவில்லை.

ராஜரட்னம் தனது கால்களால் அவளது பின்னங் கால்களைத் தட்டி சரிய வைத்தான். அவள் தலைகுப்புற கீழே விழுந்தாள். அவளுடன் இணைந்திருந்த அவனும் விழுந் தான்.அவன் தனது பிடியை விடவில்லை. யோகராணியினால் அசைய முடியவில்லை.

ராஜரட்னம் தனது வெறியைத் தணிக்க பிரயாசைப்பட்டான்.

தனது கற்புக்கு களங்கம் ஏற்படப் போகிறது என்பதை யோகராணி உணர்ந்தாள். இனியும் தனது பலத்தை நம்புவதில் பலனில்லை என்று அவளுக்குத் தெரிந்தது. ''சுபத்திரா'' என வீடே அதிரும் வண்ணம் கத்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது கூச்சலை ராஜரட்ணம் அசட்டை செய்தான். கருமத்தி லேயே கண்ணாக இருந்தான். அவளது நைட்டியை கழற்ற முற்பட்டான்.

திடீரென அங்கு சுபத்திரா தோன்றினாள்.

அவளைக் கண்டது தான் தாமதம் ராஜரட்ணம் எழுந்தான். கணவனைச் சுட்டெரிப்பது போல் பார்த்த சுபத்திரா அங்கு நடந்ததன் தாற்பரியத்தை உணராத நிலையில் ''வாங்க அறைக்கு'' என்று கூறியவள் தனது அறைக்குச் சென்றாள். அவள் யோகராணியை எறெடுத்தும் நோக்கவில்லை. ராஜரட்ணம் தலையைத் தொங்கப் போட்ட வண்ணம் நடந்தான்.

அவர்கள் அங்கிருந்து அகன்றதும் யோகராணி அறைக் கத வைத் தாழ்ப்பாள் போட்டு பூட்டினாள். கட்டிலுக்குச் சென்றவள் தலையணைக்குள் முகத்தைப் புதைத்தாள், அவ்வளவுதான், 'கேவிக் கேவி' அழத் தொடங்கினாள்.

இரவு முழுவதும் அழுதழுது யோகராணியின் தலையணை நனைந்து விட்டது.

கெட்ட கனவு காண்பதும், திடீர் திடீரென விழித்து அழுவது மாக இரவைக் கழித்தாள். காலையில் எழுந்தபோது ஒரே தலையிடி. மாத்திரை போட எத்தனித்த போது சுபத்திரா அங்கு தோன்றி னாள். அவள் யோகராணிக்கு அதிர்ச்சி வைத்தியம் பார்த்தாள்.

யோகராணி வீட்டை விட்டு உடனடியாக வெளியேற வேண்டு மென சுபத்திரா கண்டிப்புடன் கூறிவிட்டாள்.

''சுபா அக்கா, அவர் செய்த பிழைக்காக என்னைக் கண்டிக் கிறீங்களா?'' என யோகராணி விசனத்துடன் கேட்டாள்.

''நடத்தை கெட்டவளுடன் இனியும் கதைக்க நான் தயா ரில்லை. நீர் இஞ்ச இருந்து இன்னும் அரை மணித்தியாலத்திலை போய்விட வேணும்'' என வார்த்தைகளைப் பொரிந்து தள்ளிவிட்டு சுபத்திரா போய் விட்டாள்.

அவளது கடுமையான வார்த்தைகள், வேதனையினால் காயப் பட்டிருந்த யோகராணியின் இதயத்தை மேலும் காயப்படுத்தின. நெஞ்சைப் பிடித்தபடி அமர்ந்தவள் பதினைந்து நிமிடங்கள் வரை சிந்திக்கும் ஆற்றலையே இழந்தாள்.

கொஞ்சம், கொஞ்சமாக உணர்வுகள் வேலை செய்யத் தொடங் கிய வேளையில் அவள் எழுந்தாள். எதையும் துலாம்பரமாக யோசிக்காமல் தனது உடுப்புக்களை அடுக்கினாள்.

சுபத்திராவிடம் சென்றாள். கடைசித் தடவையாக அங்கு தங்குவதற்கான அனுமதியை மன்றாட்டமாகக் கேட்டாள். சுபத்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது வேண்டுதலை செவி சாய்க்கவில்லை. யோகராணி வீட்டை விட்டு வெளியேறினாள்.

சுபத்திராவைப் பொறுத்தளவில் தனது கணவனின் 'வீக்னஸ்' பற்றி அவளுக்குத் தெரியும். ஏற்கனவே இதே மாதிரியான ஒரு சூழ்நிலை ஏற்பட்டு அபலை பெண் ஒருத்தி வீட்டில் இருந்து துரத் தப்பட்டாள். யோகராணி மேலும் அங்கிருந்தால் ராஜரட்னம் எப்ப டியும் தனது இச்சைக்கு அவளை உட்படுத்தி விடுவான். அதில் இருந்து இரு சாரரும் விலகிக் கொள்வதென்றால் யோகராணி அங்கிருந்து அகல வேண்டும். ஆனால் வெறுமனே போகும்படி கூறினால் யோகராணி உடனடியாகப் போக மாட்டாள். அதனால் தான் அவளுக்கு நடத்தை கெட்டவள் என்ற நாமத்தைச் சூட்டி வீட்டிலிருந்து சுபத்திரா வெளியேற்றினாள். அவ்வாறு செய்ததை மனச்சாட்சி தவறு என இடித்துக்காட்டிய போதும் இம்முடிவைத் தவிர வேறெந்த முடிவையும் அவளால் எடுக்க முடியவில்லை.

யோகராணிக்கு களைத்தது. நாக்கு வரண்டது. தாகம் ஏற் பட்டது.

இந்த கொழும்பு மாநகரில் எங்கே போவாள்? அவளுக்கு யாரைத் தெரியும்?

அவளது ஒன்று விட்ட அண்ணன் பாலசுப்பிரமணியம் இடமாற் றலாகி வவுனியாவுக்குச் செல்லாமல் இன்னும் இருந்தால் அவனு டன் தங்கலாம். ஒரு வாரத்திற்கு முன்னர் பாலசுப்பிரமணியம் இடமாற்றலானான் என்பதை முதல் நாள் மாலை தான் சுபத்திரா மூலம் அறிந்தாள்.

கொழும்புக்கு வந்து சொற்ப நாட்கள் ஆகின்றன. இதனால் அவளுடன் வேலை செய்யும் எந்தவொருவரின் வீடும் எங்கே இருக் கின்றது என்பது அவளுக்குத் தெரியாது. தெரிந்தால் யாராவது ஒருவரின் வீட்டில் அடைக்கலம் தேடலாம்.

அவள் நின்றாள்.

எங்கே நிற்கிறோம் என்பதைக் கூட அறிந்து கொள்ள முடி யாத நிலையில் விளங்கினாள்.

வழியில் வருவோர், போவோரில் பலர் அவள் மேனியை மொய்த்தபடி சென்றனர்.

யோகராணியின் உடல் கூனிக் குறுகியது. யாரும் தெரிந்த வர்கள் வருகிறார்களா என ஆராய்ந்தாள். ஹூ்கும்! ஒருவருமே தென்படவில்லை.

மேலும் நடந்தாள். களைத்தது. நின்றாள். மீண்டும் பார் வையை ஓடவிட்டாள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன ஆச்சரியம்! தூரத்தில் ரவிகுமார் ஸ்கூட்டரில் வருவது தெரிந்தது.

அவள் அடைந்த மகிழ்ச்சி..............சூட்கேஸை எறிந்து விட்டு அவனை நோக்கி ஓட வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது. தலை கால் புரியாத மகிழ்ச்சி அவளைத் திக்குமுக்காட வைத்தது.

ரவிகுமார் அவள் முன்னால் ஸ்கூட்டரை நிறுத்தினான். அவளை அன்புடன் நோக்கிப் புன்னகைத்தான்.

''ஒபிஸுக்கு வரவில்லையா'' என புன்னகை மாறாமல் கேட்டான்.

''இல்லை'' எனக் கூறியவள் வேதனையின் ஆற்றாமையைப் பொறுக்க முடியாமல் விசித்து, விசித்து அழுதாள். ரவிகுமாருக்கு தர்ம சங்கடமாகி விட்டது. அவள் அழுவதற்கான காரணம் தெரியாமல் முழித்தான்.

''யோகம், என்ன.........என்ன.........நடந்தது?''

தனக்கு நடந்த அவலத்தை யோகராணி அழுகை அடைக்கும் குரலில் கூறினாள்.

அவள் கூறியதைக் கேட்டு அவன் முகம் இறுகியது.

''ராஜரட்னம் ஒரு ராஸ்கல், பாஸ்டர்ட்'' என ரவிகுமார் ஆவேசமாகக் கத்தினான்.

''என்னை படுகுழிக்கே தள்ளிவிட்டார். சுபத்திரா நான் கூறியதைக் கூட கேட்கவில்லை. எல்லாம் என்ர தலைவிதிதான்'' என யோகராணி தலையில் அடித்தாள்.

''இப்போ இருக்கிற நிலைமையில உமக்கு தங்குவதற்கு ஒரு அறை வேண்டும். அப்படித்தானே?''

யோகராணி ஆமென்று தலையாட்டினாள்.

''இப்பவே ஒரு அறை தாறன். ஏறும்.''

''எதிலை?''

''ஸ்கூட்டரில.''

அவனுடன் ஸ்கூட்டரில் ஏற அவள் தயங்கினாள். நெருங்கிப் பழகாத ஒருவனுடன் செல்ல அவள் மனம் கூசியது.

''ஏறும், ஒன்டுக்கும் யோசிக்காதையும். பத்திரமாக கொண்டு போறன்.''

யோகராணி மேலும் எதையும் யோசிக்கவில்லை. ஸ்கூட்டரில் ஏறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரகுமார் 'இயரை' மாற்றி ஆக்ஸிலேட்டரை அமர்த்தியபோது ஏற்பட்ட குலுக்கலில் அவள் 'பலன்ஸ்' தவறி கீழே விழப் போனாள். நல்ல வேளையாக அவன் இடுப்பைக் கட்டிப் பிடித்து விட்டாள். அவன் நெளிந்து, வளைந்தான்.

"ஓ! ஐ ஆம் வெரி சொறி" என்றவள் கைகளை எடுத்தாள். சில வினாடிகள் வரை அவளுக்கு வெட்கமாகவும், அந்தரமாகவும் இருந்தது.

ஐந்து நிமிட ஓட்டத்தின் பின் ஸ்கூட்டர் நாரஹேன்பிட்டியை அடைந்தது.

பல வீதிகளைக் கடந்த ஸ்கூட்டர் வீடு ஒன்றின் முன்பாக நின்றது.

வீட்டின் முன் தோற்றத்தைப் பார்த்த போது யோகராணிக்கு தூக்கி வாரிப் போட்டது. முன்பக்கம் எரிந்து கருகிய நிலையில் விளங்கியது. எரிந்தும் எரியாத நிலையில் ஜன்னல், கதவு நிலைகளும், புகை படிந்த நிலையில் சுவர்களும், பீலிகளும் தெரிந்தன.

"வீட்டுச் சொந்தக்காரர் என்ர தூரத்துச் சொந்தம். அவர்கள் கலவரத்திற்கு பிறகு கனடாவுக்குப் போய் விட்டினம். எரியாத இரண்டு அறையில ஒன்டில இருக்கிறன் .......... உமக்கு உம்மிலையும், என்னிலையும் நம்பிக்கை இருந்தால் இரண்டாவது அறையில தங்கலாம்."

"என்னிலை எனக்கு நம்பிக்கை இருக்குது. உங்களிலையும் நம்பிக்கை இருக்குது. அந்த நம்பிக்கையில நீங்க மண்ணை வாரி இறைக்க மாட்டீங்க என்ற நம்பிக்கையும் இருக்குது."

ரவிகுமார் வாய்விட்டுச் சிரித்தான்.

"நீர் இவ்வளவு புத்திசாலித்தனமாக கதைப்பீர் என்று நான் நினைக்க இல்லை."

"புத்தி இருந்து என்ன பிரயோசனம்? தலை எழுத்து தாறு மாறாக எழுதப்பட்டிருக்கிதே."

"நான் தலை எழுத்தை மாற்றுறன்" என அவன் முணு முணுத்தான்.

## (24)

குப்பி விளக்கின் வெளிச்சத்தில் யோகராணி சமையலில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள். கடந்த ஒரு வாரமாக இரவு வேளைகளில் குப்பி விளக்கின் உதவியுடன் அவள் சமையலைக் கவனித்தாள்.

கலவரத்தின் போது அந்த வீடு தாக்கப்பட்டு எரிக்கப்பட்ட பின் மின்சாரம் அற்றுப் போய் விட்டது. வீட்டுச் சொந்தக்காரர் கலவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்தின் பின் கனடாவுக்குச் சென்று விட்டதனால் வீட்டைத் திருத்து வற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வீட்டைப் பாரம் எடுத்த ரவிகுமார் இரு அறைகளே ஓரளவு பாவிக்கக்கூடிய நிலையில் இருப்பதை அறிந்தான். அந்த அறை களின் கதவுகளும் எரிந்திருந்தபடியினால் கொஞ்சம் காசைச் செலவளித்து புதுக்கதவுகளைப் போட்டதுடன், அறைகளையும் திருத்தி அமைத்தான்.

ஒரு அறையில் தான் இருந்து கொண்டு மற்ற அறையை 'பாஸ்போர்ட்', 'விசா' என்று கொழும்புக்கு வரும் தனது உறவினர் களுக்கும், நண்பர்களுக்குமென ஒதுக்கி வைத்தான்.

அந்த வீட்டை முழுமையாகக் கட்டி முடித்தால் தான் மின்சா ரம் வழங்க முடியும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறவே மின்சாரத்தைப் பெறும் எண்ணத்தை ரவிகுமார் கைவிட்டான். இரு குப்பி விளக்குகளை வாங்கி இரவு அரக்கனை விரட்டினான்.

சமையலைக் கவனிப்பதற்கென சிறிய மண்ணெண்ணை அடுப்பு போதுமானதாக இருந்தது.

யோகராணி அங்கு வந்த பின் சமையலை அவளே தனித்துக் கவனித்தாள். தனது அறையில் அடுப்பை வைத்து சமைத்தாள்.

ரவிகுமாரின் வீட்டுக்கு வந்த நாளன்று அந்த வீட்டில் இருக்கவே பயப்பட்டாள். இரவின் போது குப்பி விளக்கு வெளிச்சம் போதா மையினால் அக்கம் பக்கம் பார்க்கவே பயந்தாள். ஆனால், அடுத்த நாள் பழகி விட்டாள். முதல் நாள் வாழ்க்கை நரகமாகத் தெரிந் தது. ரவிகுமாரின் அனுமதியுடன் அன்றைய தினம் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தாள். ராஜரட்ணம் அவள் வாழ்க்கையில் ஏற்படுத்தி இருந்த வடு அவள் மனதை விட்டு அகலவே இல்லை. வேதனை நிரம்பிய நெஞ்சுடன் அன்றைய பொழுதைக் கழித்தாள்.

சுபத்திராவின் வீட்டில் நடந்த சம்பவத்தை அடிக்கடி நினைத் துக் கலங்கினாள். கண்ணீர் விட்டாள். 'சே! அதிர்ஷ்டம் கெட்ட வளாகி விட்டேனே' என மனம் வெதும்பினாள். ஊரை விட்டு வெளியேறிய பின் தான் எதிர்நோக்கிய பிரச்சினைகளை எண்ணி மனம் உருகினாள்.

மாகோவில் யாரோ ஒரு குடிகாரனின் வீட்டில் சில மணி நேரத்தை கழித்தது. ராஜரட்னத்தின் வெறிக்கு இரையாகாமல் தப்பி வீட்டை விட்டு வெளியேற்றப்பட்ட பின் திக்குத் தெரியாமல் வீதிகளில் அலைந்தது. நிமிடத்துக்கொரு தரம் தன் தலைவிதியை நொந்தபடி இருந்தாள்.

இருண்டு கொண்டிருக்கும் தன் வாழ்க்கையில் ஒளி ஏற்படாதா என்ற கேள்வியே அவள் மனதில் நர்த்தனமாடியது.

மாநகர நூலக சேவை யாழ்ப்பாணம்
111416
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு வந்தபோது ரவிகுமார் மரக்கறி மற்றும் சமையலுக்குத் தேவையான பொருட்களுடன் வந்தான்.

வாடி வதங்கிய நிலையில் யோகராணியை அவதானித்த ரவிகுமார், "மத்தியானம் சாப்பிட்டீரா?" என வாஞ்சையுடன் கேட்டான்.

"சாப்பிடுற நிலையிலா நான் இருக்கிறன்?"

"யோகம், வாழ்க்கையில இப்படி எத்தனையோ தேவையற்ற சம்பவங்கள் நடக்குது. இதுக்கெல்லாம் இப்படி துக்கப்பட்டு சாப்பிடாமல் இருந்தால் வாழ முடியாது. ராஜரட்ணம் உம்மை கெடுக்க நினைத்தானே தவிர கெடுக்கவில்லையே. ஏன் கெடுத்தது மாதிரி துக்கப்படுறீர்?"

ரவிகுமாரின் பேச்சு அவளது வேதனையான உள்ளத்திற்கு ஒத்தடம் கொடுத்தது.

"நீங்க சொல்லுறதை நான் ஒப்புக் கொள்ளுறன். ஆனால், சுபத்திரா ஏன் எனக்கு இப்படியொரு பட்டம் சூட்டினா?"

"நீர் வீட்டில் பேந்தும் இருந்து ஏதாவது அசம்பாவிதம் நடக்கலாம் என்று யோசித்து இப்படி பழிச்சொல்லைச் சுமத்தி துரத்திவிட்டிருக்கிறா என்றுதான் நினைக்கிறன்."

"உங்கட நினைப்பு சரியாக இருக்கலாம். அதுக்காக ஒரு அப்பாவிப் பொம்பளையை இப்படி வருத்துறதோ?"

"என்ன செய்யுறது? சுயநலம் வரும்போது மற்றவையலை மறப்பதுதானே வழக்கம்?"

ரவிகுமார் கூறிய கருத்தினை ஏற்றுக்கொள்ள மறுத்தவள், மேலும் அப்பேச்சினை தொடர விரும்பாமல் அதனை திசை திருப்பினாள்.

"நான் உங்கட வீட்டுக்கு வந்ததை பற்றி ஒபிஸில என்ன கதைச்சாங்க?"

"நான் ஒரு லக்கி ஃபெலோ என்று சொன்னாங்க."

"எந்த விதத்தில?"

"ருசியான சாப்பாடு கிடைக்குமாம்."

"வேறை என்ன சொல்லிச்சினம்?"

"என்னை கண்டபடி பகிடி பண்ணினாங்க."

"என்ன சொல்லி?"

"கலியாணம் கட்டாத சம்சாரி."

யோகராணி 'கலகல' வென நகைத்து "பகிடிதானே" என்று சொல்லி சிரிப்பைத் தொடர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவிகுமாருக்கு சிரிப்பு வரவில்லை.

"ரவி, எனக்கு ருசியாக சமைக்கத் தெரியாது."

"எனக்கு கொஞ்சம் தெரியும். இருவரும் சேர்ந்து சமைத்தால் ருசியாக இருக்கும்."

'இருவரும்' என்ற சொல்லுக்கு அவன் சற்று அழுத்தம் கொடுத்திருந்ததை அவள் கருத்திற் கொள்ளத் தவறவில்லை.

இரவுச் சாப்பாட்டின் பின் இருவரும் தத்தம் அறைக் கதவு நிலையில் சாய்ந்திருந்த வண்ணம் அளவலாவினர்.

"அப்பா கமம் செய்துகொண்டிருக்கக்கிலை எங்களுக்கு எவ்வித குறையும் இருக்கவில்ல. நேரகாலத்திற்கு சாப்பாடு கிடைக்கும். நேரகாலத்துக்கு படுப்பம். சினிமா பார்க்க் பருத் தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கூட போவம். ஆனால், பாரிசவாதம் வந்து அப்பா வீட்டில முடங்கின பிறகு எங்கட வாழ்க்கையைப் பற்றிச் சொன்னால் கல்லு கூட கரையும். எனக்கு இப்ப வேலை கிடைச்சிருக்கிறபடியால ஒருமாதிரி முதுகை நிமிர்த்தி விட்டம். இனி முந்தி மாதிரி கஷ்டப்படத் தேவை யில்லை என்று நினைக்கிறன்."

யோகராணி கூறுவதை ரவிகுமார் ஆர்வத்துடன் கேட்டான். அவளே தொடர்ந்தாள்:

"தம்பி படிக்கிறான். நல்ல மூளைசாலி. ஆனால், ஒரு கொம்யுனிஸ்வாதி. படிப்பை எல்லாம் மூட்டை கட்டிவிட்டு அரசியலில அல்லது இயக்கத்தில சேர்ந்து விடுவானோ என்று பயப்படுறன். தங்கச்சியும் கெட்டிக்காரி. ஆனால் அவசர குடுக்கை. தெரியாத்தனமாக முடிவு எடுத்து தத்தளிப்பாள்."

ரவிகுமார் தனது குடும்பத்தைப பற்றி பிரஸ்தாபித்தான். தகப்பன் ஒரு ஊதாரியாம். குடிப்பதும், சூதாடுவதுமாக நாட்களைக் கழித்தவர், அரைவாசிச் சொத்தை கரைத்துவிட்டு அண்மையில்தான் மண்டையை போட்டாராம்.

அதன் பின் குடும்பத்தை நிருவகிக்க வேண்டிய பொறுப்பு அவன் மீது சுமத்தப்பட்டது. வசந்தா கூறியது போல் இரு அக்காமார்களும், மூன்று தங்கைமார்களும் கழுத்தை நீட்டத் தயாரான நிலையில் இருந்தனர். இந்த ஐந்து பேருக்கும் வரணியில் ஒரேயொரு வீடே இருந்தது.

"அக்காமார் கலியாணம் முடிச்ச பிறகு நான் கலியாணம் செய்யலாம் என்று நினைக்கிறன். என்னைப் பொறுத்தளவில் எனக்கு வாற பெஞ்சாதி வடிவாக இல்லாவிட்டாலும், சீதனம் என்று ஒன்றும் இல்லாவிட்டாலும் நல்ல குணமாக இருந்தால் கண்ணை மூடி தாலியைக் கட்டிவிடுவன்" என்ற ரவிகுமார் கடைக்கண்ணால் யோகராணியின் முகத்தை நோக்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுவாரஷ்யமான நிலையில் அவன் பேச்சை அவள் செவிமடுப்பதைக் கண்டவனுக்கு 'ஏதோ' போலிருந்தது. ஆனாலும், தொடர்ந்தும் உற்சாகத்துடன் பேசினான்.

"அக்காமார் இரண்டுபேரும் எப்படியும் இன்னும் மூன்று வருஷங்களுக்குள்ளை கலியாணம் முடிச்சு விடுவினம் என்று நம்புறன்."

இந்த விபரங்கள் யாவற்றையும் ரவிகுமார் எதற்காக தன்னிடம் கூறுகிறான் என்பதை புரிந்துகொள்ளும் அளவுக்கு மனப்பக்குவத்தை யோகராணி அடைந்திருந்தாள். அவன் உள் மனதில் தேங்கி இருக்கும் எண்ணங்கள்தான் இவ்வாறு வார்த்தைகளாக வெளியேறுகின்றன என்பதையும் அவளால் கிரகிக்க முடிந்தது.

அவனது ஒருதலைப்பட்சக் காதலை, எண்ணப்போக்கை ஆதரிக்கும் நிலையிலா அவள் விளங்கினாள்?

யோகராணிக்கு துளியளவு கூட இவ்வாறான எண்ணம் இருக்கவில்லை. அவனது எண்ணத்தை ஒரேயடியில் வெட்டிப் போடும் நிலையில் அவள் திகழ்ந்தாள். ஆனாலும் அவன் மனதைப் புண்படுத்த அவள் விரும்பவில்லை. சந்தர்ப்பம் வரும்போது இதை விளக்குவோம் என நினைத்தாள்.

யோகராணியின் நெஞ்சினில் நாகராஜாவே நிலைத்திருந்தான். அதில் வேறு ஒருவனுக்கும் இடமிருக்கவில்லை. 'நான் உங்களை காதலிக்கிறன்' என்று இருவரும் ஒருவரிடம் ஒருவர் கூறாவிட்டாலும் இருவரது மனநிலையும் ஒருமித்தே விளங்கியது.

## (25)

தனது பெயருக்கு அலுவலக விலாசத்துக்கு வந்த இரு கடிதங்களைக் கண்ணுற்ற யோகராணிக்கு ஒரு கடிதத்தை யார் எழுதி இருக்கிறார் என்று புரிந்தது.

மற்றக் கடிதத்தில் காணப்பட்ட கையெழுத்துக்குரியவரை அடையாளம் காணமுடியவில்லை.

கையெழுத்தைப் புரிந்து கொண்ட சந்திராவின் கடிதத்தைப் பிரித்தாள்.

தொடக்கத்தில் ஊரில் நடக்கும் சமாச்சாரங்களை சந்திரா சுருக்கமாக விபரித்திருந்தாள்.

"......உமக்கு நடந்த கதிபற்றி அக்கா எழுதியிருந்தா. அத்தானிடமிருந்து உம்மைக் காப்பாற்றும் பொருட்டே அக்கா இப்படி நடந்தவவாம். அத்தானின் மனதைப் புண்படுத்தி விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடன் வாழ விரும்பாததினாலேயே அக்கா உம்மை கண்டபடி ஏசினாவாம்.

எனவே, இதையிட்டு குறை விளங்க வேண்டாம் என்று எனக்கு கடிதம் எழுதச் சொன்னா. நேரில் காணும் போது உம்மிடம் மன்னிப்பு கேட்கவிருக்கிறாவாம். அத்தானைப்பற்றி நான் ஏற்கனவே கூறியிருந்தேன் தானே?

உமது வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களையும் அறியும் போது எனக்கு கவலையாக இருக்கிறது. இந்த சின்ன வயதிலேயே நாளாந்தம் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலையிலேயே நீர் விளங்குகிறீர்.

கடவுள் உம்மை கண் திறந்து பார்க்க மாட்டாரோ என்ற ஏக்கமே என்னுள் நிதமும் ஏற்படுவதுண்டு.

இப்பொழுது கஷ்டப்பட்டாலும் எதிர்காலத்தில் நீர் சந்தோஷமாக வாழ்வீர் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நான் நாள் தவறாமல் கடவுளிடம் உமக்காக வேண்டுதல்களைச் செய்கிறேன் . . . .''

யோகராணியினால் தொடர்ந்தும் கடிதத்தை வாசிக்க முடியவில்லை. வேதனை அவளின் கண்களில் நீரை வரவழைத்தது. கண்ணீர் வழிந்து கடிதத்தில் தெறித்தது.

கண்களைக் கைக்குட்டையினால் துடைக்க வேண்டுமே என்ற நினைப்பின்றி கடிதத்தைத் தொடர்ந்தும் வாசிக்கலானாள்.

'' . . . . . . இது நிற்க, ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். உண்மையோ, பொய்யோ என்று எனக்குத் தெறித்தது.

உமது அத்தான் நாகராஜாவுக்கு எங்கள் தூரத்துச் சொந்தக்கார பொம்பளைக்கு கலியாணம் பேசுகினமாம்.

நாகராஜாவின் மாமாதான் பலவந்தமாக சாதகத்தை எடுத்துக் கொண்டு போய் பொம்பளை வீட்டிலை கொடுத்திருக்கிறார். இந்த சம்பந்தத்திலை நாகராஜாவுக்கோ, அவரின் தாயாருக்கோ பிடித்தமில்லையாம்.

சாதகம் பொருந்தினால் கலியாணத்தை நடத்தியே தீருவதென பொம்பளை வீட்டுக்காரர் நிற்கினமாம்.''

சமைந்த நிலையில் கடிதத்தை வாசித்து முடித்த யோகராணியின் கையில் இருந்து கடிதம் நழுவி கீழே விழுந்தது. அதை எடுக்க வேண்டுமே என்ற நினைப்பின்றி, கண்களை இமைக்க மறந்த நிலையில், இலக்கின்றி பார்வையை வெளிவிட்டபடி யோகராணி அமர்ந்திருந்தாள்.

பிரமை அவளை இறுக அரவணைத்தது. சிந்தனா சக்தி விலகியது. வேதனை நெஞ்சில் புதைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குள் இது காலவரை உருவகித்த மனக்கோட்டை சீக்கிரத்தில் தகர்ந்து விட்டதே என்ற உணர்வு அவள் இதயத்தை துளைத்த நிலையில்–

ஆசைகள், எதிர்பார்ப்புகள், கனவுகள், கற்பனைகள் எல்லாமே சிதைந்து விட்டநிலையில் – என இருந்த யோகராணியிடம் ''என்ன பலத்த யோசனை?'' எனக்கேட்ட வண்ணம் வந்த ரவிகுமார் குனிந்து கீழே கிடந்த கடிதத்தை எடுத்து அவளிடம் நீட்டினான்.

அதைப் பெற்றவள் 'தாங்ஸ்' என்று கூட கூறாமல் தலைகுனிந்தாள்.

கண்களை அவசரத்துடன் துடைத்தாள்.

ஒரு சில வினாடிகள் அவளை வெறித்துப் பார்த்தபடி நின்ற ரவிகுமார் தொண்டையைச் செருமியபடி சென்று விட்டான்.

யோகராணி மற்றக் கடிதத்தை பிரித்தாள்.

கையொப்பத்திற்கு அவள் பார்வை விரைந்தது.

ரவிகுமார் என்றிருந்தது.

அவளுக்கு மூச்சு அடைத்தது.

## (26)

சில நேரங்களில் தனிமையில் இருக்கும் போது அந்த எண்ணம் மனதினுள் புகுந்து விடும்.

வசதிகளற்ற ஒரு வீட்டில் தானும், ரவிகுமாரும் ஒன்றாக வாழ்வது சரியா, தவறா என்று யோகராணி எண்ணுவாள்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் அவளுக்குத் தெரிந்த வரையில் ஓர் ஆணும், பெண்ணும் வாழ்ந்ததைப் பற்றி அவள் அறியவோ, கேள்விப்படவோ, கண்டதோ இல்லை. ஓரிரு சினிமாப்படங்களில் ஒரே வீட்டில் கதாநாயகனும், கதாநாயகியும் வாழ்வதைப் பார்த்திருக்கிறாள். அச்சமயத்தில் இயற்கைக்கு மாறான காட்சிகளைத் தான் சினிமாவில் காட்டுகிறார்கள் என்று அவள் நினைப்பதுண்டு. இது நிஜ வாழ்க்கையில் நடக்குமா என அவள் வியந்திருக்கிறாள். ஆனால், இப்பொழுது சினிமாவில் வருவது போன்ற ஒரு வாழ்க்கையைத் தான் மேற்கொள்கிறாள்.

இந்த மாதிரி வாழ்வதை எமது சமூகம் ஏற்றுக் கொள்ளுமா? இதனை மற்றவர்கள் கடுமையாக விமர்சிப்பார்களா? நடத்தை கெட்டவள் என்ற பட்டத்தைச் சூட்டுவார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கேள்விகளுக்கு விடை அறிவதில் நேரத்தைச் செலவளிக்கும் போதெல்லாம் இன்னொரு கேள்வி அவள் உள்ளத்தை நச்சரிக்கும்.

ரவிகுமார் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முனைவானா?

யோகராணி அவனை மேலெழுந்தவாரியாக எடை போட்ட அளவில், அவனுடன் பழகிய விதத்தில் அவன் அவ்வாறான எண்ணத்தைக் கொண்டிருக்கமாட்டான் என்பதைப் புரிந்து கொண்டாள். ஆனால், உணர்ச்சி வசப்படுவதனால், அல்லது, தன் நிலையினை மறப்பதனால் அவன் தவறாக நடப்பதற்கும் சந்தர்ப்பம் இருக்கின்றது என்ற உண்மையையும் அவள் அறிந்து வைத்திருந்தாள்,

எனவே, சந்தர்ப்ப சூழ்நிலையை அவனுக்கு உருவாக்கிக் கொடுக்காமல் விடுவதென்றால் அங்கிருந்து வெளியேறிப் பாதுகாப்பான ஒரு இடத்திற்கு செல்ல முயலவேண்டும்.

இதைப்பற்றி அவள் வசந்தாவிடம் கூறியிருந்தாள்.

''யோகம், உம்மட மனம் உறுதியாக இருந்தால் நீர் யாருக்குமே பயப்படத் தேவையில்லை. ரவிகுமாரின் அறையைப் போல வசதியான அறை கிடைக்கிறது சரியான கஷ்டம். அப்படியே கிடைச்சாலும் வாடகை கொடுக்க உமக்கு கட்டுப்படியாகாது. வீட்டுக்கு ஒரு காசு கூட அனுப்ப ஏலாமல் இருக்கும்'' என வசந்தா சொன்னாள்.

''நீர் சொல்லுறது உண்மைதான். ஆனால், நான் ஏற்கனவே அனுபவப்பட்டனான். என்னைத் தூற்றி வீட்டில இருந்து துரத்தி விடுமளவுக்கு சம்பவம் நடந்திருக்குது. என்னெண்டாலும் ஆம்பிளையளைப் பற்றி கணிக்கிறது கஷ்டம். அவையளுக்கு ஏதாவது தேவைப்பட்டால் அடைஞ்சே தீருவார்கள். அதனால நாங்களே விலகிக் கொள்ளுறது நல்லது.''

யோகராணி கூறியதை வசந்தா ஆமோதித்தாள். ''சரி உமக்கு ஒரு அறையைப் பார்க்கிறன்.''

ரவிகுமாரின் வீட்டில் இரு வாரங்களை கழித்த பின் யோகராணியிடம் ஏற்பட்டிருந்த கலக்கம், பயப்பிராந்தி, சந்தேகம் கொஞ்சம், கொஞ்சமாக விலகின. அவனது பக்குவமான நடத்தையினால் அவன் மீது அதீத மரியாதை செலுத்தினாள். கண்ணியத்துடன் அவன் பழகும் விதத்தினால் அவனில் அன்பு கொண்டாள். ஆனாலும், தான் அவன்மீது செலுத்தும் அன்பினை அவன் தப்பாக விளங்கிக் கொள்ளக்கூடிய ஒரு நிலை ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளும் வகையிலேயே அவள் அவனுடன் பேசினாள், பழகினாள். எதிலுமே முன் ஜாக்கிரதையைக் கடைப்பிடித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவிகுமார் அவளுடன் பேசும் பொழுது இரட்டை அர்த்தத்துடன் வார்த்தைகளை வெளியிட்டால் அவள் எதையும் விளங்கிக் கொள்ளாதவாறு செயல்பட்டாள். சிலவேளைகளில் அவன் எண்ணத்தைக் களையும் விதத்தில் பதில் அளித்தாள்.

நாளுக்கு நாள் அவனது மனப் போக்கினை யோகராணி யினால் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

'உமக்காகத்தான் இதைக் கொண்டு வந்தன், உமக்காகத்தான் இதை வாங்கினன், உமக்காகத் தான் கெதியில வந்தனான்' போன்ற வார்த்தைகள் அவன் மன எழுச்சியின் உணர்வுகளை அவளுக்குப் புரிய வைக்கத் தடுமாறின.

அவன் மனதில் துளிர் விட்டுள்ள எண்ணத்தை அரும்பி லேயே வெட்டிவிட வேண்டும் என்றதொரு சந்தர்ப்பத்தை யோகராணி எதிர்பார்த்திருந்தாள். ஆனால், அந்தச் சந்தர்ப்பம் கிட்டமுன், அவள் எதிர்பார்த்திருக்காத வேளையில் அவனிடம் இருந்து அவளுக்கு கடிதம் வந்திருந்தது. அதனை நேரில் கொடுப்பதற்கு துணிச்சலின்றி தபால் மூலம் அனுப்பி வைத்திருக்கிறான்.

கடிதத்தின் ஒவ்வொரு வாசகத்தையும் நிதானித்து வாசித்தாள்.

"..... ஒரே வீட்டில் வாழ்கிறோம். ஒரே அலுவலக த்தில் பணி புரிகிறோம். ஆனால், என் மனதில் தேங்கியுள்ள ஒரு விஷயத்தை உம்மிடம் வெளியிட முடியாத நிலையில் தான் இக்கடிதத்தை எழுதுகிறேன்" என அழகு தமிழில் ரவிகுமார் கடிதத்தை ஆரம்பித்திருந்தான்.

"இக்கடிதத்தில் இனி என்ன எழுதப்போகிறேன் என்பதை கிரகிக்கக் கூடிய ஒரு திறமை உம்மிடம் உள்ளது என நம்புகிறேன்.

சுற்றி வளைத்து விஷயத்திற்கு வராமல் நேரடியாகவே வருகிறேன். நான் உம்மை விரும்புகிறேன். இது திடீரென நான் எடுத்த முடிவல்ல. நன்கு யோசித்து எடுத்த முடிவாகும். எனது அம்மாவுக்கு நீர் தான் சிறந்த மருமகளாக இருப்பீர் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

எனது நிலையில் தான் நீரும் இருப்பீர் என நம்புகிறேன். எனது நம்பிக்கையை வீணடிக்க மாட்டீர் என்பதில் எனக்கு எவ்வித ஐயமும் இல்லை."

யோகராணி கடிதத்தை மடித்து 'ஹான்ட் பாக்'கினுள் வைத்தாள். நீண்டதொரு பெருமூச்சு அவளிடமிருந்து வெளிப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திராவின் கடிதமும், ரவிகுமாரின் கடிதமும் அவளுள் அமைதியின்மையை ஏற்படுத்திவிட்டன.

நாகராஜாவுக்கு கலியாணம் பேசுகிறார்கள். சாதகம் பொருந்தினால் கலியாணத்தை நடத்தியே தீருவதென பெம்பளை வீட்டார் கங்கணம் கட்டியுள்ளனர். நாகராஜா இதற்கு உடன்படு வானா? உடன்பட்டால் . . . . , ? அவனை இழக்க நேரிடும்.

ரவிகுமார் அவளைக் காதலிக்கிறான். ஆனால், அவனைக் காதலிக்கும் நிலையில் அவள் இல்லை.

ரவிகுமாரை யோகராணி நிராகரிக்கிறாள். நாகராஜா அவளை நிராகரித்தால்?

அந்த எண்ணமே அவள் வறிற்றில் புளியைக் கரைப்பது போல் இருந்தது. எண்ணத்தினுள் புதைந்திருந்த உண்மை அவளது நிலையினைத் தழும்ப வைத்தது.

ரவிகுமாரின் நம்பிக்கையில் மண்ணை வாரி இறைக்க முடியாத ஒரு நிலைக்கு தான் தள்ளப்படுவது போன்ற உணர்வு அவளுள் படிப்படியாக ஏற்பட்டு பலமடைவதை உணர்ந்தாள். உறுதியானதொரு முடிவினை எடுக்க முடியாமல் தவித்தாள். தன் யோசனையின் சாதக, பாதகங்களை அலச முற்பட்டபோது கண்க ளைக் கட்டிக் காட்டில் விட்டதொரு பிரமை மேலோங்குவதையே அவளால் உணர முடிந்தது.

மனப் போராட்டம் ஒரு சிக்கல் நிலையை தோற்றுவித்துக் கொண்டிருக்கும் பொழுது அவளது யோசனையை 'பியன்' குழப்பினான்.

"எக்கவுண்டன் உங்களை வரட்டாம்" என்று சொல்லி விட்டு அவன் தன்பாட்டில் போய்விட்டான்.

மன எழுச்சியின் வேகத்தினைக் கட்டுப்படுத்திய வண்ணம் ரவிகுமார் முன்னால் தலைகுனிந்த நிலையில் நின்றாள்.

"இரும்."

"இஞ்ச இருக்கிற நிலைமையில நான் இல்லை. விஷயத்தை சொல்லுங்க."

"யோகம், என்ர லெட்டரை வாசித்தீரா?"

அவள் ஆமென்று தலையசைத்தாள்.

"என்ன முடிவு எடுத்தீர்?"

"உங்கட வீட்டில இருந்து வெளியேறி அறையொன்றுக்கு போவதென்டு முடிவு எடுத்திருக்கிறன்."

அவன் ஸ்தம்பிதமானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகராணி அங்கிருந்து அகன்றாள்.

ரவிகுமாரின் மேசையில் இருந்த மணி அலறியது.

அவன் டெலிபோனையே வெறித்துப் பார்த்தான். ரிஸிவரை தொடவே இல்லை.

அலறிய மணி அடங்கியது.

## (27)

மனதினில் உருப்போட்டு ஒரு தீர்க்கமான முடிவு எடுத்து அதனை வெளியிடுவதற்குப் பதிலாக வாயில் வந்ததை உளறி விட்டு தனது ஆசனத்தில் யோகராணி அமர்ந்திருந்தாள்.

ரவிகுமார் அவளை அழைத்த போது அவனின் கடிதத்திற்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் மனம் தத்தளித்த நிலையில் அவன் அறைக்குச் சென்றாள். அவன் கேட்ட கேள்விக்கு பின்னர் பதில் கூறுவதாகத் தெரிவித்து, அவகாசம் கேட்டிருக்க லாம். ஆனால், அவள் 'பட்'டென, வாய்க்கு வந்ததை உளறி விட்டு வந்து விட்டாள்.

"உங்கட வீட்டில இருந்து வெளியேறி அறையொன்றுக்கு போவதென்டு . . . . "

அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. ஏன் இப்படி பதில் அளித்தேன் என அவள் தன்னையே நொந்தாள். வீணாக ரவிகுமாரின் உள்ளத்தை புண்படுத்தி விட்டேனே என மன வேதனையுற்றாள்.

'எவ்வளவு அன்பாக என்னோட பழகினார்? ஒரு நிமிஷத்தில எல்லாத்தையும் உதறித் தள்ளுற மாதிரி ஒரு மறுமொழி சொல்லி விட்டு வந்து விட்டன. அவர் என்னைப் பற்றி என்ன நினைச் சிருப்பார்? இப்படிப்பட்ட ஒருத்திக்கு அடைக்கலம் கொடுத்தேனே என வருத்தப்படுவார். சுபத்திராவின் வீட்டில இருந்து வெளி யேறி திக்குத் தெரியாத நிலையில, போக்கிடம் எதுவென்று தெரியாத நிலையில இருந்த என்னை கூட்டிச் சென்று அடைக்கலம் தந்தார். ஆனால், நான் அந்த நன்றிக் கடனை மறந்து விட்டன் . . . '

'அவர் தன்ர மனதில இருந்ததை எழுத்தில எழுதினார். அதில என்ன பிழை? ஒரு பொம்பிளையை ஒரு ஆம்பிளை விரும்புறது பிழையோ? அவர் மரியாதையாக தனது விருப்பத்தை தெரிவித்து என்ர விருப்பத்தை கேட்டார். எனக்கு அவரைப் பிடிக்கவில்லையென்றால் நேரடியாகச் சொல்லுறது. அதை விட்டுட்டு வீட்டை விட்டு போறதென்று மொக்குத்தனமாக மறுமொழி சொல்லி . . . . . '

யோகராணியின் மனம் அழுது வடிந்தது. வேதனை பன் மடங்காகியது. வேதனையின் தாக்கத்தினை அவளால் தாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. நெஞ்சு எரிந்தது. இதய ஓட்டம் அதிகரித்தது. மூச்சு விடக் கஷ்டமாக இருந்தது. நெற்றியில் வியர்த்தது. பிடரி குளிர்மை அடைந்தது. பார்வை மங்கியது. மண்டைக்குள் இயந்திரங்கள் தொழிற்படுவது போன்ற உணர்வு ஏற்பட்டது.

அவளால் மேலும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தலை சுழன்றது. கண்கள் செருகின. தலை 'டைப் ரைட்டரில்' மோத சுயநினைவை இழந்தாள்.

36350 C

மீண்டும் கண் விழித்த போது இரு மேசைகள் மீது கிடத்தப்பட்டிருப்பதைப் புரிந்தாள். தன்னைச் சுற்றி அலுவலகத்தில் பணிபுரிபவர்களில் பாதிப்பேர் நிற்பதை அவதானித்தாள். வசந்தா 'பைல்கவர்' ஒன்றினால் விசிறினாள்.

யோகராணிக்கு வெட்கமாகி விட்டது. நாணப் புன்னகையை உதிர்த்த வண்ணம் எழுந்தாள்.

அந்தக் கூட்டத்தில் ரவிகுமார் நிற்கிறானா என அவசரத்துடன் நோட்டம் பார்த்தாள். அவன் அங்கு இல்லை. மெல்லிய ஏமாற்றம் மனதில் படர்ந்தது.

''பிள்ளை என்ன நடந்தது?'' என 'சீப் கிளார்க்' கந்தசாமி அன்புடன் வினவினார்.

''காலமை சாப்பிட இல்ல'' பொய்யொன்றை சாவகாசமாக வெளியிட்டாள்.

''ரவிகுமார் சமைக்கவில்லையா?'' கூட்டத்தில் இருந்து 'யாரோ' ஒருவர் கேட்டார்.

'கொல்' லென்று சிரிப்பொலி அங்கு பரவியது.

யோகராணி அசடு வழிந்தாள். முகத்தில் சிவப்பு கோலமிட்டது. சிரிப்பை வரவழைத்தபடி மேசையில் இருந்து இறங்கினாள்.

அவளை வேடிக்கை பார்த்தவர்கள் எல்லாரும் கலைந்து சென்றனர். வசந்தா அகலவில்லை. யோகராணியிடம் வந்தாள். அவள் கரங்களைப் பற்றினாள்.

''யோகம், எனக்கு மட்டும் உண்மையைச் சொல்லும். நான் ஒருவருக்கும் சொல்லமாட்டன்.''

''காலமை சாப்பிட இல்ல.''

''நீர் பொய் சொல்லுறீர். உண்மையைச் சொல்லுமன். நான் உம்மட 'டியரஸ்ட் பிரெண்ட்' தானே?''

யோகராணிக்கு வேறு வழி இருக்கவில்லை. ரவிகுமார் எழுதிய கடிதத்தைப் பற்றியும், அதன் பின் அவன் கூறியதைப் பற்றியும் பிரஸ்தாபித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓ! அப்படியா சங்கதி? இப்ப என்ன செய்யப் போறீர்? ரவிகுமாரின்ட வீட்டில இருந்து போகப் போறீரா?''

''அவர்ட்ட வீட்டில இருந்து போறதைப் பற்றி நான் கவலைப் படவில்லை. ஆனால், எனக்கு ஆதரவு தந்து, அடைக்கலம் குடுத்த வரை எளனம் செய்யுறமாதிரி கதைச்சு விட்டேனே. அவர் என்னைப்பற்றி என்ன நினைத்திருப்பார் என்றதை நினைக்கக்கிலை தான் துக்கமாக இருக்குது.''

''அவர் ஒன்றுமே நினைத்திருக்க மாட்டார். எனக்கு அவரை நல்லாத் தெரியும். அவர் எதையும் பெரிசாக எடுக்க மாட்டார்.''

''எதற்கும் அவர்ட்ட மன்னிப்பு கேட்கவேணும்.''

''கேட்டால் போச்சு.''

''வசந்தா.''

''உம்.''

''நான்...... நான்...... மயங்கிக் கிடக்கக்கிலை அவர் வந்து பார்த்தாரா?''

''அவர் தானே உம்மை மேசையில கிடத்தினவர்.''

''ஓ!'' என்ற யோகராணி முகத்தை கைகளால் பொத்தியபடி நாணமுற்றாள்.

''உம்மை வேறு ஆரும் தொடக் கூட அவர் விடவில்லை. இரண்டு மூன்று பேர் உம்மை தூக்க வந்தபோது 'நான் தனியாக தூக்குறன்' என்று சொல்லி விரட்டி விட்டார். மேசையில கிடத்தின பிறகு அவர் தான் உமக்கு காற்று வீசினவர்.''

வசந்தா கூறக்கூற யோகராணியின் கண்களின் படபடப்பு அதிகரித்தது. இதயத்தின் ஓட்டமும் அதிகரித்தது.

யோகராணியின் நிலையைக் கண்டு வசந்தா உற்சாகத்துடன் பேச்சைத் தொடர்ந்தாள்.

''யாரோ ஒருவர் 'யோகத்தை தூக்க ஈஸியாக இருந்துதோ' என்று கேட்க ரவிகுமார் பெரிய ஒரு மூச்சை விட்டு 'ஆள் நெத்தலி போல மெல்லிசாக இருந்தாலும் நல்ல பாரம், கையெல்லாம் உளையுது' என்று சொல்லி ஜோக் அடிச்சார்.''

யோகராணி சிரித்துக் கொண்டே ''கொஞ்சம் உம்மட கதையை நிறுத்தும். இப்ப போய் அவரிட்ட மன்னிப்பு கேட்க வேணும். நீரும் வாறீரோ'' எனக் கேட்டாள்.

''அதற்கென்ன?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் ரவிகுமாரின் அறைக்குள் நுழைந்தனர்.

ரவிகுமார் 'பைல்' ஒன்றில் மூழ்கி இருந்தான்.

''மிஸ்டர் ரவிகுமார், உங்களுக்கு ஒரு விசிட்டர்'' என்று கூறிய வசந்தா மெல்ல அங்கிருந்து நழுவினாள்.

ரவிகுமார் தலையை உயர்த்திப் பார்த்தான். கைகளைப் பிசைந்த வண்ணம் யோகராணி நிற்பதைக் கண்டான்.

யோகராணிக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. வெறு மனே அவனை விழித்துப் பார்த்த வண்ணம் நின்றாள்.

''யோகம், ஐ ஆம் வெரி சொறி. உம்மட மனதை குழப்பி விட்டன் போல. ஏதோ என்ர மனதில இருந்ததை அப்படியே அவசரப்பட்டு எழுதி அனுப்பி விட்டன் ...''

யோகராணி குறுக்கிட்டாள். ''சேர்.........''

''நோ, ஐ யாம் யுவர் ரவி.''

''ரவி, நீங்க தான் என்னை மன்னிக்கணும்.''

''எதற்கு?''

''ஆதரவு அளித்து அடைக்கலம் தந்த உங்களை முகத்தில அடிச்சது போல கதைச்சு விட்டன். ஏதோ ஒரு பேய் குணத்தில அப்படி கதைச்சு விட்டன். நான் அதை மனசார சொல்லவில்லை.''

ரவிகுமார் புன்னகைத்தான்.

''ஓகே ! இருவரும் தங்கட தங்கட பிழைகளை மன்னிப்பம். அப்ப சரிதானே ?''

யோகராணி தெம்புடன் சிரித்தாள்.

''யோகம், உமக்கு என்னிலை விருப்பமில்லையென்டால் பரவாயில்லை. ஐ வில் டேக் இட் ஈஸி. நீர் போய் வேலை யைக் கவனியும்'' என்ற ரவிகுமார் 'பைலைப்' புரட்டினான்.

யோகராணி அகலவில்லை.

யதேச்சையாக தலையை உயர்த்திய ரவிகுமார் அவள் இன்னும் அங்கே நிற்பதைக் கண்டு, ''நீர் என்ர வீட்டில தொடர்ந்தும் இருக்கலாம். எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. இனி என்னட்ட இருந்து 'நியூசென்ஸ் லெட்டரும்' வராது'' என்றான்.

''ரவி, இனியும் நாங்க இரண்டு பேரும் ஒரே வீட்டில இருக்கிறது சரியில்லை. என்டபடியால, ஒரு அறை கிடைக்கிற மட்டும் உங்கட வீட்டில இருக்கிறன்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது உம்மட விருப்பம்"

கனத்த இதயத்துடன், தெளிந்த சிந்தனையுடன் யோகராணி வெளியேறினாள்.

## (28)

சுசிலாவிடமிருந்து கடிதமொன்று வந்தது. அவளது கிறுக்கல் கையெழுத்து அவசரமாக எழுதியிருக்கிறாள் என்பதை எடுத்துக் காட்டியது.

தாயின் சுகவீனம் கடுமை அடைந்திருப்பதாகவும், முடியு மென்றால் ஊருக்கு வருமாறும் தந்தி போல் கடிதத்தை எழுதி இருந்தாள்.

கடிதத்தை வாசித்து முடித்த யோகராணி சமைந்து போனாள். பதற்றம் தேகத்தில் நுழைந்தது. வேதனை இதயமெங்கும் பரவியது. கண்ணீர் கண்களை குளமாக்கியது.

அந்தப் பக்கம் வந்த ரவிகுமார், கலங்கிய விழிகளுடன் காணப்பட்ட யோகராணியைக் கண்டு அவளிடம் வந்தான்.

"ஊரில இருந்து லெட்டர் வந்திருக்குது போல. ஏதாவது அசம்பாவிதம் நடந்திருக்குதோ?"

யோகராணி கடிதத்தை அவனிடம் நீட்டினாள். அதை வாசித்தவன் "ஓ! அம்மாவுக்கு கடுமை. நீர் இப்ப ஊரில இருக்க வேணும். உமக்கு ஒரு கிழமை லீவு தாறன். போயிட்டு வாரும்" என்றான்.

"தாங்கியூ."

"ஊருக்குப் போக காசு இருக்குதா?"

"இருக்குது."

மாலையே 'பிரைவேட்' பஸ்சில ஊருக்குப் பயணமானாள். பிரயாணக் கஷ்டங்களைப் பல இடங்களில் எதிர் நோக்கிய நிலையில் காலை பத்து மணி போல் ஊரை அடைந்தாள்.

வீட்டை அண்மிக்க, அண்மிக்க இதய ஓட்டத்திலும் ஒரு பரபரப்பு இருந்தது.

'கடவுளே, கடவுளே' என மனம் ஓராயிரம் தடவைகள் பிரார்த்தித்தது.

நடக்கக் கூடாதது நடக்கக் கூடாது என கடவுளை வேண்டிய வண்ணம் நடக்கலானாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறை மேளத்தின் சத்தம் துல்லியமாகக் கேட்டது. காதை கூர்மையாக்கினாள்.

''அம்மா'' என அலறிய வண்ணம் ஓடினாள்.

பறை மேளச் சத்தம் அதிகரித்துக் கொண்டு வந்தது.

யோகராணிக்குச் சொல்லாமல் மங்களம் நிரந்தரமாகக் கண்களை மூடிவிட்டாள்.

## (29)

புயலுக்குப் பின் அமைதி என்பார்கள். ஆனால், யோகராணியின் வாழ்க்கையைப் பொறுத்தளவில் புயலுக்குப் பின்னரும் புயல்தான்.

துன்பம் வரும் போது அலையாக வருவதில்லை, அது பேரலைகளாக வருகின்றது என்று எங்கோ படித்த ஞாபகம்தான், தன்னைப் பற்றி நினைத்த போதெல்லாம் யோக ராணியின் நினைவுக்கு வந்தது.

தந்தைக்குப் பின் தாய் மறைந்துவிட்டாள்.

குடும்பப் பாரம் முழுவதையும் யோகராணி மீது சுமத்தி விட்டு மங்களம் போய்விட்டாள்.

''நெஞ்சு நோகுது,, சுடுதண்ணி தா'' என சுசிலாவிடம் கூறிவிட்டு படுக்கையில் சாய்ந்தவள் சுசிலா சுடுநீர் கொண்டு வரமுன் சுயநினைவை இழந்துவிட்டாள். உடனடியாக மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். மூன்று நாட்கள் வரை மூச்சு பிடிச்சுக் கொண்டு இருந்தாள்.

கடைசி நாள் ''பிள்ளை சுசிலா ஒருக்கால் யோகத்திற்கு அறிவி. அவளைப் பார்க்க வேணும் போல இருக்குது'' என்று கஷ்டப்பட்டு வேண்டுகோள் விடுத்தாள். மகளைக் கடைசி முறையாக பார்ப்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்காமல் மங்களத்தை காலன் இழுத்துக் கொண்டான்.

மங்களத்தின் குடும்பத்தினர் யாவரும் ஆறாத்துயரில் மூழ்கினர். யோகராணியைப் பிடித்த பிரமை அகல சில நாட்கள் பிடித்தன.

சந்திரா இல்லாவிட்டால் அவள் பைத்தியமே அடைந் திருப்பாள். சந்திரா தான் யோகராணிக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி மனதைத் தேற்றினாள்.

செத்த வீட்டன்று ரவிகுமார் வந்திருந்தான். அவனை யோகராணி சற்றேனும் எதிர்பார்க்கவில்லை.

''யோகம், உமக்கு என்னென்டு ஆறுதல் கூறுவதென்றே தெரியவில்லை'' எனக் கூறியபடி ரவிகுமார் கண்ணாடியைக் கழற்றி கைக்குட்டையினால் கண்களைத் துடைத்த போது யோகராணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினால் தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. “ஓ” வென ஒப்பாரி வைத்தாள்.

“அழாதையும் . . . . அழாதையும் . . . . . .”

யோகராணி தொடர்ந்தும் அழுது கொண்டே இருந்தாள். அவளால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அதன்பின் யோகராணி இரண்டு தடவைகள் அவனைச் சந்தித்தாள். “ஏதாவது காசு தேவையென்றால் சொல்லும், தாறன்” என்று ஒரு தடவை சந்தித்த போது கூறினான்.

“வேண்டாம், ஒரு மாதிரிச் சமாளிக்கலாம் போல இருக்குது” என்றாள் அவள்.

இரண்டாவது தடவை சந்தித்தபோது “செத்தவீடு முடிந்த பிறகு ஊருக்குப் போய் நாளைக்கு கொழும்புக்கு போறன். நீர் ஆறுதலாக வாரும் உம்மை எதிர்பார்ப்பன்” என்றான்.

அவள் ஆகட்டும் என்று தலையாட்டினாள்.

“உம்மை எதிர்பார்ப்பன்” என்று மீண்டும் ஒரு முறை சொல்லி விட்டுச் சென்றான்.

செத்த வீட்டுக் காரியங்களை நாகராஜா முன்னின்று நிறைவேற்றினான். எதனையும் முகம் சுளிக்காமல் காரியங்களை நிறைவேற்றினான். பணம் போதாத போது தனது பணத்தைச் செலவிட்டான். இவையெல்லாவற்றையும் அவதானித்த யோகராணியின் உள்ளம் நெகிழ்ந்துபோனது. தனக்காக இன்னொரு உயிர் கஷ்டப்படத் தயாராக இருக்கிறது என்பதை அறிந்த போது இன்ப உணர்ச்சியினால் துடித்தாள்.

செத்தவீட்டுக் காரியங்கள் எல்லாம் மூன்று நாட்களுக்குள் நிறைவேறின. வீட்டில் தங்கிய உறவினர்கள் சென்று விட்டனர். சோகமே உருவெடுத்திருந்த அந்த வீடும் அமைதியாய் திகழ்ந்தது. வீட்டு உறுப்பினர்களான யோகராணி, மோகன், சுசிலா ஆகியோர் மட்டுமே தனித்து விடப்பட்டனர்.

சந்திரா வந்தாள். அவளும், மங்களம் செத்த நாளில் இருந்து தோழியுடன் தான் இருந்தாள். காலையில் வீட்டுக்குச் சென்றவள் மாலையில் வந்தாள். “யோகம் இனி எப்ப கொழும்பு போறதாக உத்தேசம்” என சந்திரா கேட்டாள்.

“போறதா, இல்லையா என்று இன்னும் முடிவு எடுக்கவில்லை. சுசிலாவையும், மோகனையும் தனிய விட்டுட்டு எப்படி போறது? சுசிலா வளர்ந்து விட்டாள். அவளை தனிய விடுறது சரியோ? ஊரில ஆட்கள் கூடாத கதையள் எல்லாம் கதைப்பினம்.”

“நீர் சொல்லுறது சரிதான். அப்படியென்டால் என்ன செய்யப் போறீர்?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகராணி உடனடியாகப் பதில் அளிக்கவில்லை. சில வினாடி மௌனத்தின் பின், ''நீர் தான் ஒரு வழியைச் சொல்லுமன்'' என்றாள்.

''இரண்டு பேரையும் ஹொஸ்டல்ல சேர்த்துவிடுமன்.''

யோகராணி வரட்சியான புன்னகையொன்றை உதிர்த்தாள். ''அந்தளவுக்கு நான் உழைக்கிறதில்ல. என்ர சம்பளம் காணாது.''

யோகராணி இப்படி கூறிக்கொண்டிருக்கும் பொழுது சுசிலா அங்கு தோன்றினாள்.

''அக்கா, நீ கொழும்புக்கு போய் வேலையைப் பார். நானும், மோகனும் இஞ்ச இருக்கிறம்.''

''தனியாகவோ?''

''என் தனியாக இருந்தால் என்ன? எங்களால தனியாக இருக்க முடியாதோ?''

''நீ குமர்ப் பொம்பளை. தனியாக இருக்கிறது சரியில்லை.''

சுசிலா ஏளனமாகச் சிரித்தாள்.

''அக்கா, நீயும் ஒரு குமர்ப் பொம்பளை என்டதை மறந்திடாதை. உன்னால தனியாக ரவிகுமாரோட இருக்க முடியுமெண்டால் என் நான் தனியாக இருக்க முடியாது? உனக்கு இருக்கிற அளவுக்கு துணிவு எனக்கும் இருக்குது.''

சுசிலா கூறியதைக் கேட்டு யோகராணி வாயடைத்துப் போனாள். சற்று நேரம் பதில் கூறத் தடுமாறினாள்.

''மறுமொழி சொல்லு அக்கா.''

''சுசிலா, நீ சின்னப் பெட்டை. உலகத்தை பற்றி உனக்கு சரியாகத் தெரியாது. நல்லதுக்கும், பொல்லாததுக்கும் வித்தியாசம் கண்டு பிடிக்க மாட்டாய்.''

சுசிலா ஏளனமாகச் சிரித்தாள்.

''அக்கா, உன்ர நிலையில நான் இருந்தால் ராஜரட்னத்தை செருப்பால அடிச்சிருப்பன்.''

''இதைப்பற்றி உனக்கு எப்படி தெரியும்?''

''எப்படியோ தெரியும் . . . . அக்கா, உன்ர தங்கச்சியை நீ மட்டமாக நினைக்கிறாய்., எனக்கு ஒரு சந்தர்ப்பம் தா. தனியா வாழ்ந்து காட்டுறன். துணைக்குத்தானே மோகன் இருக்கிறான்?''

சுசிலாவின் குரலில் தெரிந்த உறுதி, தெளிவு யோகராணியின் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்த ஒரு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

PUBLIC LIBRARY
JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உனக்கு உன்னிலை நம்பிக்கை இருந்தால் தனியாக இரு. ஆனால், இந்த அக்காவை தலைகுனிய வைத்து விடாதை'' எனக் கூறும் போது யோகராணியின் நாத் தழுதழுத்தது.

## (30)

மனதினுள் நுழைந்திருந்த இன்னொரு பிரச்சினை யோகராணியின் மனதை இன்னும் அரித்தபடியிருந்தது. சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது நாகராஜாவிடம் கேட்க வேண்டும் என்று எண்ணி இருந்தாள். ஆனால், அதற்கான சந்தர்ப்பமும், சூழ்நிலையும் கிட்டவில்லை.

மங்களத்தின் எட்டுச் செலவுக்கு வந்தவர்கள் போன பின் நாகராஜாவுடன் தனிமையில் கதைப்பதற்குச் சந்தர்ப்பம் கிட்டியது.

சிகரெட் ஒன்றைப் புகைத்த வண்ணம் முன் விறாந்தை நாற்காலியில் நாகராஜா அமர்ந்திருந்தான். அவன் கவனம் எதிலும் லயித்திருக்கவில்லை. ஏகாந்தமாகப் பார்வையை ஓடவிட்டிருந்தான்.

யோகராணி அவன் முன்பாக நின்றாள். அவன் அவளை ஏறெடுத்தும் நோக்கவில்லை.

''அத்தான்.''

''ஊம்.''

''என்ன யோசனை?''

''ஒன்றுமில்லை.''

''உங்களிடம் ஒரு விஷயம் கேட்க வேணும்.''

இதைக் கேட்டு கனவுலகில் இருந்து விடுபடுவது போல் அவளைப் பார்த்தான். பார்வையில் வெறுப்பின் சாயல் படர்ந் திருந்தது.

''அத்தான், உங்களுக்கு கலியாணம் பேசுகினமாம். பொம்பளைப் பகுதியிட்ட சாதகமும் குடுத்திருக்கிறியளாம்.''

''அது மாமன்ர தேவையில்லாத வேலை. அவருக்கு விசர்.''

நாகராஜாவின் வார்த்தைகள் அவளுக்கு தெம்பை வரவழைத்தது. உற்சாகம் கட்டை மீறி ஓடியது.

''சாதகம் பொருந்தினால் கலியாணம் நடக்கும் எண்டும் கதைக்கினம். உண்மையோ?''

''கதைக்கிற ஆட்களுக்கும் விசர்.''

அவன் பதிலில் சூடு வெளிப்பட்ட போதும் அவளுக்கு சந்தோஷமே ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்படியென்றால் நீங்க ஆரைக் கலியாணம் செய்யுறதா முடிவு எடுத்திருக்கிறியள்?'' என்று நமுட்டுச் சிரிப்புடன் வினவினாள்.

''கட்டுறதில்லை எண்டு முடிவு எடுத்திருக்கிறன்.''

''உண்மையைத் தானே சொல்லுறியள்?''

''ஓம்.''

'பொய். உங்களுக்கு எந்த நேரமும் என்னோட பகிடிதான்.''

''யோகம்...'' நாகராஜா உச்சஸ்தொனியில் கத்தினான். ''இது பகிடி இல்லை. உண்மை.''

''என்ன பகிடி இல்லையோ?'' என அதிர்ச்சியில் கத்தியவள் ''ஏன் இப்படி முடிவு எடுத்திருக்கிறியள்?'' என்று கேட்டாள்.

''பொம்பளையளை நம்ப முடியாமல் இருக்குது.''

''பொம்பளையளா? சுகந்தியைப் பற்றித் தானே குறிப் பிடுறியள்?''

''இல்லை, உம்மைப் பற்றி.''

யோகராணி விக்கித்துப் போனாள்.

''நீங்க......நீங்க......என்ன சொல்லுறியள்?''

''ரவிகுமாரோட நீர் அடிக்கிற கும்மாளம் பற்றி எனக்குத் தெரியும். அவனோட ஒண்டாக இருக்கிறதும் தெரியும். ஸ்கூட்டரில ஒண்டாக போறதும் தெரியும். நல்ல வேளை நான் தப்பிச்சன்.''

யோகராணிக்குப் பேச்சு வரத் தயங்கியது.

## (31)

எவ்வளவோ வாதாடிப் பார்த்தாள் யோகராணி. ஆனால், நாகராஜா அவள் கூறும் சமாதானத்தைச் செவிசாய்க்கத் தயாராக இருக்கவில்லை.

''அத்தான், நான் அவரை 'லவ்' பண்ணவில்லை. சும்மா 'பிரண்ட்ஸ்' போலத்தான் பழகுகிறன்'' என்று சத்தியம் செய்த போதும் நாகராஜா அதனை ஏற்கவில்லை.

''ஒரே வீட்டில இரண்டு பேரும் இருக்கிறீங்க. அது ஒன்றே போதும்.''

''ஒரே வீட்டில இருந்தால் நான் அவரை 'லவ்' பண்ணுறன் என்று அர்த்தமா?''

''நீர் ரவிகுமார்ண்ட ஸ்கூட்டரில ஒரு நாளுமே போகவில்லை என்று சத்தியம் செய்யும். நான் உம்மை நம்புறன்'' என்ற நாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா தனது கையை நீட்டிய போது அவள் வாயடைத்துப் போனாள்.

''ஊம், சத்தியம் செய்யும்.''

''போனன், ஸ்கூட்டரில போனன். அதுவும் ஒரேயொரு முறைதான். ஏன் தெரியுமா?'' என்ற யோகராணி தான் ரவிகுமாரின் ஸ்கூட்டரில் போனதற்கான காரணத்தை விளக்கினாள்.

''இதை நம்பச் சொல்லுறீரா? யோகம், இனியும் நீர் சொல்லுற பொய்யை நம்ப நான் தயாரில்லை.''

''அத்தான், பனையின் கீழ இருந்து பால் குடிச்சவனின் கதை போல தான் என்ர கதையும் ஆகிட்டுது. இவ்வளவு நாளாக நீங்க என்னோட பழகுறீங்க. அப்படி இருந்தும் நான் சொல்லுறதை நீங்க நம்ப மாட்டீங்களா?''

''நீர் ஊரில இருக்கிற வரைக்கும் நான் உம்மை நம்பினன். ஆனால் கொழும்புக்கு போன பிறகு உம்மைநம்ப நான் தயாரில்ல. கொழும்பு நாகரீகம் உம்மை நல்லா மாத்திவிட்டுது. ரவிகுமாரின்ட அழகு, அந்தஸ்து என்னட்டை இல்லை, அவன் ஸ்கூட்டரில போறான். நான் செருப்பு தேய நடக்கிறன். நீரும் உம்மட அந்தஸ்தைக் கூட்டி அந்தஸ்தானவனைப் பிடித்து விட்டீர்.''

''இல்லை, இல்லை, நீங்க சொல்லுறதை என்னால ஏற்றுக் கொள்ள முடியாது. நீங்க கற்பனையில கதைக்கிறீங்க. கனவிலகூட நான் இப்படி நினைக்கயில்ல.''

''எனக்கு பொம்பளைகளைப் பற்றி நல்லாத் தெரியும். அவையள் பச்சோந்திகள்''

''சுகந்தியை வைச்சு என்னை மட்டமாகக் கணக்கு போடாதிங்க. என்ர வாழ்க்கையில நான் ஒருத்தரை விரும்பினதென்றால் அது நீங்க தான். இது உண்மை, சத்தியம்.''

''நான் மடையன் இல்லை. என்னை பேய்க்காட்டாதையும்'' என நாகராஜா உச்சஸ்தொனியில் கத்தினான்.

''அத்தான், உங்களைக் கெஞ்சிக் கேட்கிறன். என்னை நம்புங்க.''

நாகராஜா வெறுப்புடன் எழுந்தான். அங்கிருந்து வெளியேறினான்.

நீர் வழிந்தோடிய விழிகளினூடாக நாகராஜா செல்வதைக் கண்ட அவளுள் வேதனையை விரட்டும் வகையில் ஆத்திரம் புகுந்தது.

''அத்தான், சுகந்தி வீட்டை விட்டு ஏன் ஓடினவள் என்டு இப்பத்தான் எனக்கு விளங்குது. உங்களைப் போன்ற மிருகத்தோட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ விரும்பாமல் தான் உங்களை விட்டு ஓடி இருக்கிறாள்'' என யோகராணி காட்டமாகக் கூறினாள்.

'சடக்கென்று' நாகராஜா நின்றான். எரித்து விடுபவன் போல் பார்த்தவன் அவள் அருகில் வந்தான். ''என்னடி சொன்னாய்?'' என அதிகாரத்தோரணையில் கேட்டான். அவன் மீசை துடித்தது.

''போடா ஆண்மையற்றவனே.''- யோகராணி இளக்காரமாகக் கூறிவிட்டு முகத்தைத் திருப்பினாள்.

''அடியே வேசை'' என்ற நாகராஜா முன்னால் பாய்ந்து அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

யோகராணி இதை சற்றேனும் எதிர்பார்க்கவில்லை. வெல வெலத்துப் போனாள்.

நாகராஜா அத்துடன் நின்று விடவில்லை. யோகராணியின் கன்னத்தில் மாறி மாறி அறைந்தான்.

அறையின் உபாதை தாங்காமல் யோகராணி அலறினாள்.

திடீரென அங்கு மோகன் தோன்றினான். அவன் கையில் ஒரு கொட்டன் இருந்தது. கொலை வெறி முகத்தில் ஒட்டியிருந்தது.

''டேய் வேசா மகனே, என்டா அக்காவை அடிக்கிறாய்? என்று அடித்தொண்டையில் கத்தியவன் நாகராஜாவை கொட்டனால் பதம் பார்க்கத் தொடங்கினான்.

தோற்றத்தில் மோகனை விட நாகராஜா பெரியவனாகத் திகழ்ந்த போதும், மோகனின் செயலைத் தடுத்து அவனை மடக்க நாகராஜாவினால் முடியவில்லை.

மோகனின் முதல் தாக்குதல் நாகராஜாவின் முழங்காலைத் தாக்கியது. பலத்த அடி. ''ஐயோ அம்மா'' என அலறிய வண்ணம் நாகராஜா கீழே சாய்ந்தான்.

அதன் பின் மோகன் கண்மூடித்தனமாக நடந்தான். கொட்டன் நாகராஜாவின் உடம்பு முழுவதும் பதம் பார்த்தது.

இதற்கிடையில் அண்டை, அயலவர்கள் அங்கு பிரசன்னமாகி விட்டனர்.

மோகனின் செயலைத் தடுக்க இயலாத ஒரு நிலையில் யோகராணி நின்றாள்.

நாகராஜாவின் நெற்றியில் இருந்து இரத்தம் வழிந்தது.

''தம்பி, தம்பி போதும் நிறுத்தடா'' என்று முன் வீட்டு பொன்னையா, மோகனின் கையில் இருந்த கொட்டனைப் பறித்த பின்னரே அவனது ஆவேசம் அடங்கியது. நாகராஜாவை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காறித் துப்பி விட்டு "பொம்பளையிட்ட தன்ர வீரத்தைக் காட்டுறார், பேடிப் பயல்" என்றான்.

"ஏன்டா கொத்தாணை அடிச்சனி?" பொன்னையா கேட்டார்.

"இவனைக் கொன்றால்தான் என்ர ஆத்திரம் அடங்கும்."

மோகனின் பதில் பொன்னையாவைத் திருப்திப்படுத்தவில்லை. முகத்தை சுளித்தார்.

கொஞ்சம், கொஞ்சமாக எல்லோரும் அங்கிருந்து அகன்றனர்.

நாகராஜா முனகியபடி நிலத்தில் கிடந்தான்.

"இது உங்கட வீட்டுச் சங்கதி. நாங்க தலை போடுறதிலை வேலை இல்லை. நீங்களே தீர்த்துக் கொள்ளுங்க. கொலை, கிலை நடந்தால் நாங்க தான் சாட்சியத்திற்கு போக வேணும்." இறுதி ஆளாக வெளியேறிய பொன்னையா சொன்னார்.

மோகன் தெருவில் இறங்கி நடையைக் கட்டினான்.

நாகராஜாவை ஓரிரு நிமிடங்கள் வரை பார்த்த யோகராணி வீட்டுக்குள் சென்று கட்டிலுக்கு தாவினாள். தலையணைக்குள் முகத்தைப் புதைத்தாள். வேதனை அகலும் வரை அழுதாள்.

நாகராஜாவை யோகராணி இழந்து விட்டாள். அவன் அவளை நிராகரித்து விட்டான். ஒருவேளை உண்மையை அறிந்து அவளிடம் வரக்கூடிய சந்தர்ப்பம் இருந்தது. ஆனால், அவனை நையப் புடைத்து அவமானப்படுத்தி விட்டதனால் அந்தச் சந்தர்ப்பமும் நழுவி விட்டது. இவ்வளவும் நடந்த பின் யார் என்ன சமாதானம் சொன்னாலும் நாகராஜா மனதை மாற்ற மாட்டான். ஆத்திரத்தில் யோகராணி அவனை 'ஆண்மையற்றவன்' என்ற சொல்லை பிரயோகித்து ஏசி விட்டாள். அதைக் கேட்ட பின்னரும் அவன் மனம் மாறுமா?

ரவிகுமாரின் வீட்டில் தனியாக வாழ்ந்தது, அவனுடன் ஸ்கூட்டரில் போனது........யாவுமே அவளுக்கு எதிரான சாட்சியங்களாக விளங்கி விட்டன. நாகராஜாவின் மனதில் சந்தேகத்தை விதைத்து விட்டன.

நாகராஜாவிடம் இந்த சங்கதிகளை யார் கூறியிருப்பார்கள்? அவர் யார்? அவள் மீது எரிச்சல், கோபம், பொறாமை கொண்டவர்கள் எவருமே இல்லை. ரவிகுமாரின் ஸ்கூட்டரில் சென்றது வசந்தாவைத் தவிர வேறு ஒருவருக்குமே தெரியாது. அப்படியிருக்கும் போது............

யாராக இருக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த உண்மையை அவள் சில நிமிஷங்களுக்குள் அறிந்து விட்டாள். முதலில் சந்தேகம் கொண்டவள், தனது சந்தேகம் சரியானதா என பூரணமாக ஆராய்ந்தாள். இறுதியில் தனது சந்தேகம் சரி என்ற முடிவுக்கு வந்தாள்.

யோகராணியை காதலிக்கும் ரவிகுமார் செத்த வீட்டுக்கு வந்தபோது நாகராஜாவைக் கண்டு பழகி தான் யோகராணியைக் காதலிப்பதாக கூறியிருப்பான். அவளை அடைவதற்காக அவன் எல்லாவற்றையும் கூறி நாகராஜாவின் மனதில் சந்தேக விதையை நாட்டியிருப்பான். யோகராணியை நாகராஜா மறந்தால் ரவிகுமாரினால் அவளை இலகுவாக கைப்பிடிக்கலாம் தானே?

யோகராணிக்கு ரவிகுமார் மீது அளவில்லாத ஆத்திரம் வந்தது. பரம சாது போல செத்த வீட்டுக்கு வந்து மாபெரும் பிரச்சினை ஒன்றை தோற்றுவித்து விட்டுச் சென்று விட்டான்.

யோகராணிக்கு பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது. அழுதழுது கண்ணீரே வற்றிப் போய் விட்டது. அடுக்கடுக்காக வேதனைச் சம்பவங்களில் ஊறி உள்ளம் மரக்கட்டையாகி விட்டது. இனியும் யோசிப்பதில் பயனில்லை என்ற முடிவுக்கு இறுதியில் வந்தாள்.

யோகராணி எழுந்தாள். நிலைக்கண்ணாடியில் தன் கோலத்தைப் பார்த்தபோது அவளுக்கு தன் பிம்பம் மீதே கோபம் வந்தது. கல்லொன்றைத் தூக்கி கண்ணாடியின் மீது எறிய வேண்டும் என்ற கசப்புணர்ச்சி உருவாகியது.

அறையை விட்டு வெளியேறினாள். நாகராஜாவின் நினைப்பு வந்தது. நையப் புடைக்கப்பட்டு இரத்தம் வழிந்தோடிய நிலையில் நாகராஜா கிடந்த போது அங்கிருந்து அவள் அகன்று விட்டாள். அதன் பின் அவன் என்ன செய்தான்? எழுந்து வீட்டுக்குச் சென்று விட்டானா? அல்லது மயக்கமடைந்திருப்பானா?

யோகராணி முன்புறத்திற்கு விரைந்தாள்.

விறாந்தையில் மல்லாந்த நிலையில் நாகராஜா கிடந்தான்.

அவன் நெற்றியில் சுசிலா கட்டுப்போட்டுக் கொண்டிருந்தாள். அவன் தலை அவள் மடியில் கிடந்தது.

யோகராணியினால் முன்னேற முடியவில்லை.

நூலகப் பிரிவு
நூலக சேவை

## (32)

தூக்கம் கண்களைத் தழுவ மறுத்த நிலையில் யோகராணி படுக்கையில் புரண்டாள்.

நடந்து முடிந்த சம்பவங்களை நினைக்க, நினைக்க இதயமே சுக்குநூறாகி விடும் போலிருந்தது. ஒவ்வொரு சம்பவமும் அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தைப் பலவீனப்படுத்தி விட்டது. இனியும் அதிர்ச்சியை தாங்க முடியாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டாள்.

அதிர்ச்சி, ஆச்சரியம், துன்பம், ஏமாற்றம், வேதனை .......... இவை தான் அவள் வாழ்க்கையில் மலிந்திருக்கின்றன.

யோகராணி தன்னை எதிர்நோக்கிய பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து அவற்றினைத் தீர்த்திருக்கிறாள். ஆனால், நாக ராஜாவை இழக்க வேண்டிய ஒரு நிலையினை, அந்த ஏமாற்றத்தினை அவளால் தாங்க முடியவில்லை. அதனை நினைத்த போதெல்லாம் வாழ்க்கை வெறுமை அடைந்துவிட்டதென்ற உணர்வே அவளுள் மேலோங்கியது. வேதனை உள்ளத்தை கடுமையாக வாட்டியது.

எல்லாமே சூனியமாகிவிட்டது போன்று இருந்தது. வாழ்வதே அர்த்தமற்றது என்று விளங்கியது. இது அவள் சிந்தனையை மழுங்கடித்தது. இறுதியில் சிந்திக்கும் ஆற்றல் அவளிடமிருந்து விலகியது.

தன்னை நம்பி சுசிலா, மோகன் வாழ்கிறார்கள் என்ற எண்ணம் அவளை விட்டுப் பறந்தோடியது.

யோகராணி எழுந்தாள். கிணற்றடியை நோக்கி நடந்தாள். கிணற்றை அடைந்தாள். குனிந்து கீழே பார்த்தாள். நீர் அசைவின்றி அவளை 'வா வா' என வரவேற்றது.

இறுதி முறையாக அவள் மனக்கண் முன் நாகராஜா வந்தான்.

கிணற்று சுற்று மதிலில் காலை வைத்தாள்.

கீழே குதிப்பதற்கு தயாரானாள்.

''அக்கா பொறு. மோகனை எழுப்புறன். மூன்று பேருமே ஒன்டாகச் சாவோம்.'' சுசிலாவின் குரல் கேட்டு யோகராணி சமைந்து போனாள்.

## (33)

கொழும்பை நோக்கி அந்த 'பிரைவேட்' பஸ் ஊர்ந்தது. வீதி ஒரே பள்ளமும், திட்டியுமாக இருந்தபடியினால் பஸ்சினால் வேகமாகச் செல்ல முடியவில்லை.

டிரைவருக்கு மேற்புறத்தில் இருந்த தொலைக்காட்சி பெட்டியில் புதியதொரு தமிழ் சினிமாப்படம் ஓடியது. யாவரது பார்வையும் அதிலேயே லயித்திருந்தது.

யோகராணியினால் அதில் கவனம் செலுத்த முடியவில்லை. பார்வையை எவ்வித இலக்குமின்றி ஓடவிட்டபடி அமர்ந்திருந்தாள்.

தாயை வருத்தம் பார்ப்பதற்கென்று கொழும்பில் இருந்து புறப்பட்டவள் தாயை உயிரற்ற நிலையிலேயே பார்க்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயை இழந்த அதிர்ச்சி மாற முன் நாகராஜாவையும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

நாகராஜாவை இழந்த நிலையில் உயிரைப் போக்கத் துணிந்தாள். ஆனால், அவள் செயலைச் சுசிலா தடுத்துவிட்டாள்.

தங்கையின் புத்திமதிகளைக் கேட்டு அவள் தனது முடிவினை மாற்றிவிட்டாள்.

''அக்கா, தான் விரும்பியவரை இழந்த ஒரேயொரு காரணத்திற்காக உயிரை விடுவதென்றால் இன்று எத்தனையோ பொம்பளைகள் செத்திருப்பினம். பெண் சமுதாயத்தில் முக்கால் வாசி அழியும் ஒரு நிலை தான் எற்பட்டிருக்கும். அக்கா, ஒரு கோழை போல செயல்படாதே. வாழ்க்கை வாழ்வதற்கே. உன்ர நல்ல மனதுக்கு ஒரு நல்ல வாழ்க்கை வந்தே தீரும். கொஞ்சம் பல்லைக் கடிச்சுக் கொண்டிரு. கடவுள் உனக்கு நல்ல ஒரு வழியைக் காட்டுவார்.''

சுசிலாவின் புத்திமதிகள் நொந்து போன யோகராணியின் மனதிற்கு இதமாக இருந்தன. அவளின் கருத்துக்கு எதிர்வாதம் புரியவில்லை. புத்திமதிகளை நன்கு செவிமடுத்தவள் தங்கையின் தோளை ஆதரவாக தட்டி, ''சுசிலா, உங்கள் இரண்டு பேரையும் விட்டுட்டு கொழும்புக்கு போறதுக்கு தயங்கினன். ஆனால், நீ கதைக்கிறதைப் பார்த்தால் நான் தைரியமாக கொழும்புக்குப் போகலாம். நீ உண்மையிலேயே உலகத்தை அறிஞ்சு வைச்சிருக்கிறாய். இனி என்ர கவலை எல்லாம் போய் விட்டுது'' என்றாள்.

கண்ணீர் சொரிந்த நிலையில் யோகராணி ஊரைவிட்டு வெளியேறினாள். சுசிலாவும், மோகனும் கொடிகாமத்தில் பஸ்ஸை நிறுத்தி அவளை அதில் ஏற்றிவிட்டனர். நிமிர்ந்த நிலையில் நின்றபடி சுசிலா அவளுக்கு கை அசைத்து விடைகொடுத்தாள்.

பஸ்சில் வயதான ஒரு பெண்மணிக்கு அருகில் யோகராணிக்கு ஆசனம் கிடைத்தது. அவளுக்கு வயது ஐம்பது இருக்கும் போல் தோன்றியது. அழகான தோற்றம் . . . . பரந்த முகமும், சற்று சதைப்பிடிப்பான உடம்பும், தங்க 'பிரேம்' போட்ட கண்ணாடியும் அவள் சற்று வசதியானவள் என்பதைப் பறைசாற்றின. நெற்றியில் பொட்டு இல்லை. தலைமயிரில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நரை மயிர் தெரிந்தது. சேலைத் தலைப்பால் மேல் உடம்பைப் போர்த்தி இருந்தாள். யோகராணியைக் கண்டவள் முறுவலித்தாள்.

ஆனையிறவு தடைமுகாமில் 'செக் பொயின்ட்'டில் யோகராணி அவளுடன் பேச்சுக் கொடுத்த போது அவளுக்குப் பெயர் பார்வதி அம்மாள் என்பதை அறிந்தாள்.

பஸ் முறிகண்டியில் நிறுத்தப்பட்டது. எல்லோரும் கீழே இறங்கினர். யோகராணி மட்டும் இறங்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தங்கச்சி கோயிலுக்கு போகயில்லையா?" என பார்வதி அம்மாள் கேட்டாள்.

"இல்லை, நான் கிறிஸ்டியன்" என்ற யோகராணி முகத்தை மறுபக்கம் திருப்பினாள்.

"ஓ! சொரி" என்ற பார்வதி அம்மாள் கீழே இறங்கினாள்.

ஐந்து நிமிடங்கள் கழிந்திருக்கும்.

யோகராணியின் மனம் ஒரு நிலையில் இல்லை. மனம் போராடியது. கோவிலுக்குப் 'போ, போ' என மனதினுள் மறைந்திருந்த 'ஏதோ' ஒன்று நச்சரித்தது. 'கோவிலுக்கு நான் போக மாட்டன்' என அவள் கங்கணம் கட்டியிருந்தாள்.

'என்னைக் கைவிட்ட கடவுளை கும்பிட மாட்டன்' என மனதினுள் அடிக்கடி கூறினாள்.

பதினைந்து நிமிடங்கள் கழிந்தன.

டிரைவர் 'ஹோர்னை' அழுத்தினான்.

இறங்கிய யாவரும் ஏறினர்.

"எல்லோரும் ஏறிட்டினமோ?" என டிரைவர் கேட்டான்.

பஸ்சினுள் நோட்டம் விட்ட மற்ற டிரைவர் "ஓமண்ணே, பஸ்ஸை எடுங்கோ" என்றான்.

டிரைவர் பஸ்ஸை 'ஸ்டார்ட்' செய்ய முயன்றான். முடியவில்லை. மீண்டும் முயன்றான். தோல்விதான். பலதடவைகள் முயன்றும் அவன் முயற்சி வீணானதுதான் மிச்சம். பஸ் அசையவில்லை.

"முறிகண்டியான் சோதிக்கிறார் போல. . . . பஸ்சில இருக்கிற ஆரோ ஒருவர் தன்னை கும்பிடாதபடியால் முறிகண்டியான் விளையாட்டுக் காட்டுகிறார். அவரோட விளையாடினால் கஷ்டம்தான்" என டிரைவர் தன் காவிப்பற்களைக் காட்டிச் சிரித்தபடி கூறினான்.

சொல்லி வைத்தாற் போல யாவரும் திரும்பி யோகராணியைப் பார்த்தனர். நீதிமன்றத்தில் குற்றவாளிக் கைதியின் நிலைக்கு யோகராணி ஆளானாள். அத்தனை பேரினதும் பார்வைகளுக்கும் ஈடுகொடுக்க முடியாமல் தலைகுனிந்தாள்.

"தங்கச்சி, போய் கும்புட்டுட்டு வாருமன்." பார்வதி அம்மாள் கூறினாள்.

அப்போதும் யோகராணி அசையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஊம். கெதியில போயிட்டு வாங்கோ. கொழும்புக்கு போகவேணும்.'' டிரைவர் கத்தினான்.

யோகராணிக்கு வேறு வழி இருக்கவில்லை. எழுந்தாள். கோவிலுக்குச் சென்றாள். விபூதியை எடுத்து நெற்றியில் பூசினாள். சந்தனத்தை இட்டாள். கண்களை மூடினாள்.

'கடவுளே, என்னை மன்னிச்சுடு. என்னை இனியும் சோதிக்காதே. இவ்வளவு கஷ்டமும் போதும். நாகராஜாவை எனக்கு கட்டி வை. உன்னை நம்பித்தான் இருக்கிறன்'- யோகராணி மனமுருக வழிபட்டாள். கோவில் மணி 'டாண் டாண்' என்ற ஓசை எழுப்பியது.

'முருகா' - அவள் கண்களைத் திறந்தாள். முன்புறத்தில் மனோகரன் நிற்பதைக் கண்டாள். அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்பொழுது அங்கு வந்தான்? மனோகரனும் அவளைக் கண்டு விட்டான். அவன் முகத்தில் அதீத மலர்ச்சி. அவன் இதழ்கள், கண்கள் யாவும் மலர்ந்தன.

''எங்க போறீங்க?'' - யோகராணி கேட்டாள்.

''கொழும்புக்கு.''

''ஏன்?''

''மிடில் ஈஸ்ட்டுக்கு 'இன்டர்வியூ' ஒண்டு இருக்குது.''

''சந்திரா இதைப்பற்றி சொல்லவில்லையே!''

''நேற்று இரவுதான் முடிவு எடுத்தனான். அக்காவுக்கு கூட இன்டைக்கு காலமைதான் சொன்னனான்.''

''ஓ!''

''அம்மாவும் சொல்லாமல் கொள்ளாமல் போயிற்றா போல.''

''என்ன செய்யுறது? எல்லாம் விதிப்படிதான் நடக்குது. செத்தவீட்டிலை உங்களை கண்ட போதும் கதைக்க ஏலாமல் போயிற்றுது. நீங்க கனக்க வேலையெல்லாம் செஞ்சீங்க என்டு மோகன் சொன்னான். இந்த மாதிரி உதவிக்கெல்லாம் எப்படி தான் கைமாறு செய்யப் போறனோ தெரியாது.''

''யோகம், இது 'சிம்பிள்' விஷயம். இதையெல்லாம் பெரிசு படுத்துறதோ? உங்களுக்கில்லாத உதவியோ?'' என்ற மனோகரன் கண்களை அகல விரித்துச் சிரித்தான்.

பஸ் 'ஹோர்ன்' சத்தம் காதைப் பிளப்பது போல் இருந்தது.

''சரி நான் வாறன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யோகம், கொழும்பில உம்மை எங்க சந்திக்கலாம்?''

அவள் அவசரம் அவசரமாக தனது அலுவலக விலாசத்தை எழுதிக் கொடுத்தாள்.

பின் விரைந்து சென்று பஸ்சில் ஏறினாள். எல்லோரும் அவளைத் தினுசாகப் பார்த்தனர்.

டிரைவர் பஸ்ஸை 'ஸ்டார்ட்' செய்தான். ஒரே தடவையில் பஸ் 'ஸ்டார்ட்' ஆகியது.

அவன் திரும்பி யோகராணியைப் பார்த்து நக்கலாகச் சிரித்து, ''தங்கச்சி, முறிகண்டியான் பொல்லாதவர்'' என்றான். ஓரிருவர் பலத்துச் சிரித்தனர்.

பஸ் புறப்பட்டது.

''நீர் ஒரு கிறிஸ்டியன் என்று சொன்னீரே?'' பார்வதி அம்மாள் சிலேடையாகக் கேட்டாள்.

''பொய் சொன்னனான்.''

அதன் பின் யோகராணி அவளுடன் சரளமாகப் பேசினாள். பார்வதி அம்மாளும் தெளிந்த மனதுடன் அளவளாவினாள். அவள் பேச்சில் யோகராணி கவரப்பட்டு விட்டாள். மனதில் அவளை தாய் என்ற ஸ்தானத்தில் நிறுத்தினாள். தன் வாழ்க்கையில் நடந்து போன துயர்மிக்க சம்பவங்களை யோகராணி அவளிடம் எடுத்துரைத்தாள். ரவிகுமாரின் செயலால் தான் நாகராஜா தன்னை மறந்தான் என்ற விபரத்தையும் யோகராணி வெளியிட்டாள்.

ரவிகுமாரின் பெயரை யோகராணி வெளியிட்டதும் பார்வதி அம்மாளின் முகத்தில் சலனம் ஏற்பட்டது.

''நீர் எந்த ரவிகுமாரைப் பற்றிச் சொல்லுறீர்?''

''எங்கட கொம்பனி எக்கவுன்டன்.''

''உம்மட கொம்புனிக்கு பெயரென்ன?''

யோகராணி சொன்னாள்.

''ஓ'' என்ற பார்வதி அம்மாள் தன் தலையில் கையினால் அடித்தாள். ''மடச் சாம்பிராணி இப்படி செய்து விட்டானே'' என முணுமுணுத்தாள். அவள் யோகராணியின் நாடியைத் தடவிக் கொடுத்து, ''நீர் கும்பிட்ட முருகண்டியான் உம்மை கைவிடவில்லை. நீர் அதிர்ஷ்டசாலியாகப் போகப் போறீர்'' என்றாள்.

''அம்மா, நீங்க என்ன சொல்லுறீங்க?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யோகம், நான் இப்ப என்ர மகனுக்கு ஒரு பொம்பளை பார்க்கத்தான் கொழும்புக்கு போறன். ஆனால், இப்போதைக்கு அந்த முடிவை மாற்றிவிட்டன். என்றபடியால வவுனியாவில இறங்கி திரும்பவும் ஊருக்குப் போகப் போறன்.''

''அம்மா நீங்க என்ன சொல்லுறியள்? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை.''

''தனக்குப் பொருத்தமான ஒரு பொம்பளையை அவன் தேர்ந்தெடுத்திருக்கிறான் என்ற விபரத்தைத் தெரியாமல், மடச்சி மாதிரி கொழும்புக்கு ஏன் போவான்?''

அவள் புதிர் போட்டு பேசியதனால் யோகராணிக்கு ஒன்றுமே புரியவில்லை.

''நீங்க என்ன சொல்லுறியள்?''

''ரவிகுமார் என்ர மகன்.''

திஉரென டிரைவர் பிடித்த 'பிரேக்'கினால் யோகராணியின் நெற்றி முன்'சீட்டில்' மோதி விட்டது. நெற்றி சற்று நொந்தது. தடவி விட்டாள்.

''என்னம்மா சொல்லுறியள்?'' — எதனையும் நம்பத் தயாராக இல்லாத நிலையில் யோகராணி வினா தொடுத்தாள்.

''உண்மை தான். ரவிகுமார் என்ர மகன்தான்.''

''இரண்டு அக்காமாரும், மூன்று தங்கச்சிமாரும் கலியாணத் திற்காக தலை நீட்ட காத்திருக்கக்கிலை நீங்க மகனுக்கு பொம்பளை தேடி கொழும்புக்கு போறீங்களே?''

பார்வதி அம்மாள் வேடிக்கையாகச் சிரித்தாள்.

''அவன் எனக்கு ஒரேயொரு பிள்ளை. அவனுக்குப் பொம்ப ளைச் சகோதரங்களே இல்லை.''

யோகராணி விழித்தாள்.

பார்வதி அம்மாள் நமுட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு, ''உமக்கு உண்மையைச் சொல்லுறன். அப்பத்தான் எல்லாமே விளங் கும். அவனுக்கு வேலை கிடைச்ச பிறகு பொம்பளைகளை பெத்த ஆட்கள் வீட்டுக்கு வரத் தொடங்கிச்சினம். அதால அவன் தனக்கு ஐஞ்சு பொம்பளைச் சகோதரங்க இருக்கிறாங்க, அவங்கட கலியா ணம் முடிஞ்ச பிறகு தான் தனக்கு கலியாணம் என்று சொல்லி விரட்டி விடுவான். முதல்ல பகிடிக்கு சொன்னவன் பேந்து அதை ஒரு உண்மையாகவே நிலை நாட்டி விட்டான். ஆக சொந்தக்காரருக் குத் தான் உண்மை தெரியும். கொழும்பில இருக்கிற எல்லாரும் அவன்ர பொய்யை நம்பி விட்டினம். அம்மா, நான் ஒரு நல்ல

தேசிய நூலகப் பிரிவு மாநகர நூலக சேவை யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொம்பளையை பார்க்க மட்டும் இந்தப் பொய்யைச் சொல்லுவன் என்று அடிக்கடி என்னட்ட சொல்லுவான்'' என்றாள்.

''அவர்ட்ட அர்த்தத்தில நான் ஒரு நல்ல பொம்பளை இல்லை'' எனச் சொல்லி யோகராணி சிரித்தாள்.

''ஏன்?''

''நல்ல பொம்பளையை பார்க்க மட்டும் பொய் சொன்னவர் நான் நல்ல பொம்பளை என்று தெரிந்திருந்தால் அந்த பொய்யைச் சொல்லி இருக்க மாட்டார் தானே?''

பார்வதி அம்மாள் சிரித்தாளே தவிர பதில் கூறவில்லை.

பஸ் ஓடிக்கொண்டிருந்தது. சில நிமிஷ மௌனம் அங்கு நிலவியது. மௌனத்தை பார்வதி அம்மாள் உடைத்தாள்.

''யோகம், இனியும் என்ர மருமகளாவதில் உமக்கு எந்தவித ஆட்சேபணையும் இருக்காது என்று நினைக்கிறன். அவன் உம்மை விரும்புறான். நானும் உம்மை விரும்புறன். நீர் ஓம் என்று சொன்னால் நான் வவுனியாவில இறங்கி திரும்பி ஊருக்கு போய் விடுவன்.''

யோகராணி பார்வையை வெளியே செலுத்தினாள். குரங்குக் கூட்டமொன்று ஒருகிளையில் இருந்து இன்னொரு கிளைக்கு தாவிக் கொண்டிருந்தது.

''அம்மா, அந்தக் குரங்குகளைப் பாருங்கோ. கிளைக்கு கிளை தாவுகின்றன. என்னையும் குரங்காக்கி விடாதீங்க.''

பஸ் மாங்குளத்தைத் தாண்டியது.

## (34)

பஸ்சில் இருந்த 'ரிவி'யில் 'வாழ்க்கைப் படகு' படத்தின் பாடல் கட்டம் ஒளிபரப்பாகி இருந்தது.

''ஒருத்தியின் நெஞ்சு ஒருவனுக்கே

''சொல்..........சொல்.......... சொல்..........தோழி'' என்று ஒலித்தது.

''யோகம், இது தான் உம்மட முடிவா'' – பார்வதி அம்மாள் ஐந்தாவது தடவையாக கேட்டாள்.

''ஓமோம், ஒருத்தியின் நெஞ்சு ஒருவனுக்குத் தான்.''

''நீர் இன்னும் பழைய சம்பிரதாயங்கள்ல மூழ்கியிருக்கிறீர். இப்ப காலம் மாறிட்டுது. ஒரு பொம்பளை ஐந்தாறு ஆம்பிளைகளை கட்டுற காலம் இது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்கட மருமகளான பிறகு நான் சோரம் போவதை நீங்க விரும்புவீங்களா?''

111416

பார்வதி அம்மாள் மௌனமானாள்.

''அம்மா, உங்கட மகனால் தான் நாகராஜா என்னை வேண்டாம் என்றார். அதற்கு பிராயச்சித்தம் தேட வேண்டும் என்று நீங்க நினைத்தால் காதல்ல தோல்வியுற்று இன்னொருவரை கலியாணம் கட்டுவதற்கு தயாரா இருக்கிற ஒருத்தியை ரவிகுமாருக்கு கட்டி வையுங்க. என்னால என்ர முடிவை மாத்த முடியாது.'' யோகராணி உறுதியாகச் சொன்னாள்.

பார்வதி அம்மாள் ஒன்றுமே கூறவில்லை. 'எதனையோ' முணு முணுத்தாள்.

அதன் பின் அவள் யோகராணியுடன் பேச்சுக் கொடுக்கவில்லை.

மாலை மங்கும் வேளை பஸ் கொழும்பை அடைந்தது.

இப்பொழுது புதியதொரு பிரச்சினைக்கு யோகராணி முகம் கொடுக்க வேண்டியிருந்தது. ரவிகுமாரின் வீட்டுக்கு போவதா? இல்லையா? அவன் மீது அவள் அளவில்லாத ஆத்திரம் கொண்டிருக்கிறாள். இந்நிலையில் அங்கு போவதா? வேறு எங்கு போவது? சுபத்திராவின் வீட்டுக்கு போகமுடியாது.

எப்படியும் அலுவலகத்தில் ரவிகுமாரை சந்திக்க வேண்டும். அவனுடன் பேச வேண்டும். அலுவலகத்தில் பேச முடியுமென்றால் அவன் வீட்டுக்குச் செல்ல ஏன் தயங்க வேண்டும்? ஒரு அறை கிடைக்கும் வரை பல்லைக் கடித்துக் கொண்டிருப்போம். ரவிகுமாரின் தாயும் வீட்டில் இருப்பதனால் ஒரு மாதிரி சமாளிக்கலாம். எனவே, ரவிகுமாரின் வீட்டுக்குப் போவதென அவள் முடிவு எடுத்தாள்.

தாயும், யோகராணியும் ஒன்றாக வீட்டுக்கு வந்தபோது ரவிகுமார் ஆச்சரியம் அடைந்தான்.

பார்வதி அம்மாள் வீட்டை அடைந்ததும் சூட்கேஸை எறிந்தாள். ரவிகுமார் முழித்தான்.

''ராஸ்கல், உன்னை கட்டிப் போட்டு அடித்தால் தான் என்ர ஆத்திரம் தீரும்'' என பார்வதி அம்மாள் சத்தம் போட்டாள்.

''அம்மா, வந்தவுடனேயே என்ன சத்தம் போடுறியள்?'' என அப்பாவி போல ரவிகுமார் கேட்டான்.

''டேய், செய்யுறதையும் செய்துவிட்டு அப்பாவி வேடம் போடுறியோ? தடிமாடன். டேய்.......யோகத்தின்ர வாழ்க்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாழாக்கி விட்டியே. உன்ர பொய்யை நம்பி நாகராஜா இவளை மறந்து விட்டானே."

"ஓ! அதுவா விஷயம்?"

"டேய் உனக்கு இது 'சிம்பிள்' விஷயமாக இருக்கலாம். ஆனால், அவளுக்கு வாழ்க்கையே முடிஞ்சு விட்டுது."

"அம்மா, இதுக்கு ஏன் கத்துவான்? நான் யோகத்தை கட்டுறன்."

"அவள் உன்னை விரும்ப வேணுமே."

"நான் யோகத்தை விரும்புறன்."

"நீ விரும்புறாய் என்றதுக்காக அவளும் உன்னை விரும்ப வேணுமோ? முட்டாளே"

யோகராணி வாய் திறக்கவில்லை. மௌனமாக நடப்பதை பார்த்துக் கொண்டிருந்தாள்.

பார்வதி அம்மாள் யோகராணியை நெருங்கினாள். அவளின் கைகளை ஆதரவாகப் பற்றினாள்.

"உமக்கு எப்படியும் நாகராஜாவைக் கட்டித்தருவன்" என்றவள் மகனிடம் சென்றாள். "நாளைக்கு காலமை பஸ்சில யோகத்தின்ர ஊருக்குப் போய் நாகராஜாவைச் சந்தித்து உண்மையைச் சொல்லி அவன்ர மனதை மாற்றிவிட்டு கையோட அவனையும் இஞ்சை கூட்டி வா. இருவருக்கும் கலியாணம் செஞ்சு விட்டுத்தான் இஞ்சை இருந்து போவன். இது சத்தியம்."

திடீரென யோகராணியின் முகம் பிரகாசமடைந்தது. சந்தோஷம் உடலின் சகல பகுதிகளுக்கும் தங்கு தடையின்றி பரவியது. இப்படியான ஓர் ஏற்பாட்டினை பார்வதி அம்மாள் மேற்கொள்வாள் என அவள் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை. நாகராஜாவை அடைவதற்கு இன்னும் வழி இருக்கிறது என்பதைப் புரிந்தாள்.

"அம்மா நாளைக்கு 'ஒபிஸில' ஒரு 'மீட்டிங்' இருக்குது. நான் கட்டாயம் போக வேணும்." ரவிகுமார் இழுத்தான்.

பார்வதி அம்மாள் மகனை கோபத்துடன் நோக்கினாள். "மீட்டிங்கும், மண்ணாங்கட்டியும். நான் சொன்னதைச் செய்."

இரவுச் சாப்பாட்டின் பின் பார்வதி அம்மாள் மகனின் அறைக்குச் சென்றாள்.

படுக்கையில் கிடந்தபடி யோகராணி இன்பக் கனவுகளில் மூழ்கி இருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை மாலை ஊரை அடையும் ரவிகுமார், நாகராஜாவிடம் உண்மையைக் கூறுவான். நாளை மறுதினம் இருவரும் கொழும்பு வருவார்கள். அப்புறம் என்ன? பார்வதி அம்மாள் இருவருக்கும் கலியாணத்தை செய்து வைக்க முயற்சிப்பாள். ஆனால், உடனடியாகக் கலியாணம் செய்ய முடியாது. தகப்பனும், தாயும் அண்மையில் தான் காலமானார்கள். எப்படியும் ஆறு மாதங்களுக்காவது பொறுத்திருக்க வேண்டும். எது எப்படி இருந்தாலும் நாகராஜா யாவற்றையும் மறந்து அவளிடம் வருவான். அந்த மட்டில் அவளுக்குச் சந்தோஷம் தான்.

நாகராஜாவைக் கைப்பிடிக்க ஆறு மாதங்கள் என்ன ஆறு வருடங்கள் கூட காத்திருக்க அவள் தயாராக இருந்தாள்.

காலையில் அலுவலகத்திற்குப் புறப்படும் முன் ரவிகுமார் ஊருக்குப் போய் விட்டான் என்பதை ஊர்ஜிதப்படுத்தினாள்.

''யோகம், நீர் பயப்படாதையும். அவன் எப்படியும் நாகராஜாவைக் கூட்டிக் கொண்டு வருவான்'' என பார்வதி அம்மாள் உறுதி மொழி அளித்தாள்.

அலுவலகத்தில் எல்லோரும் யோகராணியிடம் தமது அனுதாபத்தைத் தெரிவித்தனர். வசந்தா இல்லாதபடியினால் மனம் விட்டுப் பேச யோகராணிக்கு எவருமே கிடைக்கவில்லை.

மதியம் சாப்பாட்டின் பின் அன்றைய தினசரியை வாசித்துக் கொண்டிருக்கும் போது மனோகரன் அவளைத் தேடி வந்தான். அலுவலகம் பூராவும் கண்களால் மேய்ந்தவன் ''நல்ல இடத்திலதான் வேலை செய்கிறீர்'' என்றான்.

''எப்படி இன்டர்வியூ?'' யோகராணி கேட்டாள்.

''பரவாயில்லை. இப்பத்தான் முடிந்தது. முடிஞ்ச கையோட இஞ்ச வாறன்.''

''சம்பளம் எல்லாம் எப்படி?''

''மிடில் ஈஸ்ட் வேலைதானே? நல்ல சம்பளம். எப்படியும் ஆறாயிரம் தேறும்.''

யோகராணியின் புருவங்கள் வில்லாக நெளிந்து வளைந்தன.

''என்ன வேலை?''

''டிரைவர் வேலை.''

''ஏ. எல் பாஸ் பண்ணிவிட்டு டிரைவர் வேலை செய்யுறதோ?''

''அதுவும் ஒரு தொழில்தானே?''

''உண்மைதான். உமக்கு வேலை கிடைக்குமோ?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கிடைக்கும். ஆனால் ஒரு சிக்கல் இருக்குது. ஏஜென்ஸிகாரங்க 'டிரைவர், ஹவுஸ் மெயிட்' என்டு ஜோடியாகத்தான் அனுப்புறாங்க. நீர் மனம் வைச்சால் நாங்க இரண்டு பேரும் டிரைவர், ஹவுஸ் மெயிட்டாக போகலாம். இரண்டு கிழமையில 'பிளைட்.'

யோகராணியின் முகம் சுருங்கியது.

''ஹவுஸ் மெயிட் வேலையா? அல்லது அரபுக்காரங்கள்ர அந்தரங்க நாயகி வேலையா?''

''எல்லா ஹவுஸ் மெயிட்டும் நீர் நினைக்கிற மாதிரி நடக்கிற தில்லை. ஒரு சிலதுதான் அப்படி.''

யோகராணி அவனை வேடிக்கை உணர்வுடன் கையெடுத்துக் கும்பிட்டாள்.

''மனோ, இதற்கு வேறை ஆரையும் பாருங்கோ. மிடில் ஈஸ்டில் கௌரவமான வேலையை செய்து விட்டு ஊருக்குப் போனால் கூட ஊர்ச் சனங்கள் கேவலமாகத்தான் பாக்குங்கள். அதோட உம்மோட சோடி சேர நான் தயாரில்லை'' என்றவள் பலமாகச் சிரித்தாள்.

மனோகரனுக்கு அவள் பதிலில் மறைந்திருந்த உண்மை கசந்தது. எனினும், அவள் மனதை மாற்ற முயன்றான்.

''ஹவுஸ் மெயிட்டுக்கு மாதம் ஐயாயிரம் ரூபா அளவில கிடைக்கும். அவ்வளவு காசையும் ஊருக்கு அனுப்பலாம். அங்கை ஒரு சத செலவும் இருக்காது.''

''மனோ, ஆசைகாட்டி என்ர மனதை மாற்றப் பார்க்கிறீங்களா? யோகம் சொன்னது சொன்னது தான்.''

''அப்படியெண்டால் யோகம் நான் ஊருக்கு போக வேணுமோ?''

''அது உங்கட இஷ்டம். வேறை வழி எனக்குத் தெரியல்லை.''

பதினைந்து நிமிடங்கள் வேறு விடயங்கள் குறித்து பேசிய மனோகரன் அவளிடம் விடை பெற்றான். அவன் சென்ற பின் ஐந்து நிமிடங்கள் வரை தன் உள்ளத்தை சபலம் எட்டிப் பார்ப்பதை யோகராணி உணர்ந்தாள்.

'மிடில் ஈஸ்ட்டுக்குப் போனால் என்ன?' அவள் யோசித்தாள்.

நாகராஜா விரும்புவானா? ஏற்கனவே அவள் மீது சந்தேகம் கொண்டிருக்கிறான். மனோகரனுடன் ஜோடியாக செல்வதை விரும்புவானா? நிச்சயமாக விரும்பமாட்டான்.

அத்துடன் 'மிடில் ஈஸ்ட்டுக்கு' சென்று கெட்டுப் போன இரு பெண்களை அவளுக்குத் தெரியும். ஒருத்தி வயிற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவொன்றைச் சுமந்து கொண்டு ஊருக்கு வந்தவள். மற்றவள் ஊருக்கு வர வெட்கப்பட்டு கொழும்பில் விபச்சாரம் புரிகிறாள்.

மனதினில் தோன்றிய எண்ணத்தை அழித்தொழித்தாள்.

மாலை வேலை முடிந்து வீட்டுக்குப் போனாள்.

பார்வதிஅம்மாள் சோகமே உருவெடுத்த நிலையில் அறைக் கதவு நிலையில் சாய்ந்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டாள்.

யோகராணியைக் கண்ட பார்வதிஅம்மாள் கண் கலங்கினாள்.

"அம்மா, என்ன ஆச்சு?"

"யோகம், ரவி போன பஸ் மதவாச்சியில ஆக்ஸிடென்ட் ஆகிவிட்டுதாம். அதில சென்ற நாலு பேர் செத்து விட்டினமாம்."

"அப்படியெண்டால் ரவிகுமார்?"

"தெரியவில்லை. செத்த ஆக்களின்ர பெயர்கள் இன்னும் கிடைக்கவில்லை என்று ரேடியோவில சொல்லுச்சினம்."

யோகராணிக்கு மூச்சு விடக் கஷ்டமாக இருந்தது.

## (35)

முதல் நாளிரவு படுக்கைக்கு போக முன் பார்வதிஅம்மாள் பாத்ரூமுக்குச் சென்றிருந்த சமயம் யோகராணி கட்டிலில் கிடந்தபடி இன்பக் கனவுகளில் மூழ்கியிருந்தாள்.

ஒரு நிழல் உருவம் தென்படவே கதவுப் பக்கம் திரும்பிப் பார்த்தவள் ரவிகுமார் நிற்பதைக் கண்டு துணுக்குற்றாள். சட்டென்று எழுந்தவள் சட்டையை சரி செய்தபடி எழுந்து அவனை விநோதமாகப் பார்த்தாள்.

ரவிகுமார் அவளை வைத்த விழி வாங்காமல் பார்த்தான். அவன் கண்களில் காதல் நிறைந்திருந்தது.

இது நாள் வரை ரவிகுமார் அவளின் அறைப் பக்கமே எட்டிப் பார்த்திருக்க மாட்டான். இன்று கதவைத் தட்டாமல் உள்ளே வரமுயற்சித்ததில் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"யோகம்" என்றவன் தொண்டையைச் செருமினான். அங்கும், இங்கும் திருட்டுப் பார்வையை வெளிவிட்டவன் "உம்மோட ஒரு நிமிஷம் பேசமுடியுமா" என பக்குவமாகக் கேட்டான்.

என்ன என்பது போல் யோகராணி அவனை நோக்கினாள்.

"நீர் . . . . நீர் . . . என்னை விரும்பாததற்கு என்ன காரணம்? சொல்ல முடியுமா?"

"உங்களைச் சந்திக்க முன்னரே நான் நாகராஜாவை விரும்பினன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாகராஜாவைச் சந்திக்க முந்தி என்னை சந்திச்சிருந் தால் . . . ?"

யோகராணி எச்சிலை விழுங்குவதில் கஷ்டப்பட்டாள்.

"சொல்லத் தெரியவில்லை."

"எனக்கு மறுமொழி தேவை."

"விரும்பி இருப்பன், ஆனால் . . . . "

ரவிகுமார் இடைமறித்தான் "நாகராஜா உம்மை மறந்து விட்டான். உம்மை விரும்பும் என்னை ஏன் உம்மால் ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது?"

"பூவுக்கு பூ தாவி தேன் குடிக்கும் தேனியல்ல நான்."

ரவிகுமார் தொடர்ந்து பேச முன் பார்வதி அம்மாள் பாத்ரூமில் இருந்து வெளியேறுவது தெரிந்தது. ரவிகுமார் மெல்ல அங்கிருந்து அகன்றான்.

இச் சந்திப்பின் பின் யோகராணிக்கு ரவிகுமாருடன் பேசும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இனியும் கிடைக்காது.

மதவாச்சியில் நடந்த பஸ் விபத்தில் இறந்த நால்வரில் ஒருவன் ரவிகுமார் என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டு விட்டது. மதவாச்சியில் இருந்து கிடைத்த பொலிஸ் செய்தியை அடுத்து தலையிலும், வயிற்றிலும் அடித்த வண்ணம் ..பார்வதிஅம்மாள் உறவுக்காரர் ஒருவனின் உதவியுடன் கார் ஒன்றில் மதவாச்சிக்குச் சென்று விட்டாள்.

ரவிகுமார் இறந்தது யோகராணியைப் பொறுத்தளவில் ஒரு பிரச்சினையைத் தீர்த்துவிட்டது. தன்னைத் திருமணம் செய்யும் படி கேட்டு அவளிடம் வரமாட்டான். ஆனால் அவனுக்கும், யோகராணிக்கும் இடையில் எந்தவொரு தொடர்பும் இல்லை என்பதை நாகராஜா அறிய வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. யோகராணியை குற்றவாளிக் கூண்டில் ஏற்றிய சாட்சியாக ரவிகுமார் இனி வரமாட்டான்.

கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டவில்லை என்ற நிலைக்கு யோகராணி தள்ளப்பட்டு விட்டாள். அவளது ஆசைகள், எதிர்பார்ப்புகள், கனவுகள், கற்பனைகள் யாவுமே நிர்மூலமாகி விட்டன.

ரவிகுமார் செய்த மாபெரும் துரோகத்தனத்தால் நாக ராஜாவை கைப்பிடிக்க முடியாத நிலைக்கு யோகராணியைத் தள்ளிவிட்டது. இனி நாகராஜாவை அணுகி சமாதானப்படுத்தி மனதை மாற்ற யாரால் முடியும்? ஒருவராலும் முடியாது. நாகராஜாவை நிரந்தரமாகவே மறந்துவிட வேண்டும்.

யோகராணியின் கண்களில் இருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. மனதைவிட்டு வேதனை அகலும் வரை அழுதாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் செல்லச் செல்ல அவளின் மனம் எதையும் தாங்கும் மனோதிடத்தைப் பெற்றது. எல்லாமே விதி என்று எண்ணி வாழுவோம் என மனதினில் திடசங்கற்பம் எடுத்தாள்.

ரவிகுமார் இறந்து விட்டான். பார்வதிஅம்மாள் மகனின் பூதவுடலைப் பொறுப்பேற்க மதவாச்சிக்குச் சென்று விட்டாள். அவள் அதை வரணிக்குக் கொண்டு போய் தகனம் செய்வாள். அதன் பின் இப்போதைக்கு கொழும்புக்கு வரமாட்டாள்.

எனவே, யோகராணி புதியதொரு பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியிருந்தது. பிரச்சினைகள் தான் அவள் வாழ்க்கையில் மலிந்து விட்டனவே.

அந்த வீட்டில் அவள் தனித்து வாழ முடியாது. வீடு இருந்த நிலையில் அவள் தனியாக வாழ்வது என்பது அர்த்தமற்றதாக விளங்குகிறது. ஆகவே, அவள் பாதுகாப்பான இடமொன்றுக்கு மாற வேண்டும்.

கொழும்பில் அவளுக்குத் தெரிந்த அளவில் சுபத்திரா மட்டும் தான் இருந்தாள். ஆனால் அந்த வீட்டுக்குச் செல்வதை சுபத்திரா விரும்பவில்லை. ராஜரட்ணம் இருக்கும் வரை யோகராணியினால் அங்கு அடியெடுத்து வைக்க முடியாது. அவளே விரும்பினாலும் சுபத்திரா விரும்பமாட்டாள்.

யோகராணி வீட்டை விட்டு வெளியேறிய பின் சுபத்திரா அவள் அலுவலகத்திற்கு 'போன்' செய்து மன்னிப்பு கேட்டு தனது நிலையை எடுத்துரைத்தாள். அதன் பின் இடைக்கிடை யோக ராணியுடன் 'டெலிபோனில்' சுகம் விசாரிப்பாள். ஆனால், ஒரு நாளுமே வீட்டுக்கு வரும்படி அழைப்பு விடுப்பதில்லை.

இந்நிலையில் என்ன செய்வது?

யோகராணி மூளையைப் போட்டுக் குழப்பினாள்.

வேலையை ராஜினாமா செய்து விட்டு ஊருக்குப் போவதைத் தவிர அவளுக்கு வேறுவழி தெரியவில்லை. ஊருக்குப் போகலாம். ஆனால், அவளை நம்பி ஊரில் இரு உயிர்கள் வாழ்கின்றன. மொத்தம் மூன்று உயிர்கள் அவள் சம்பளத்தில் தங்கியுள்ளன.

சே! துரதிர்ஷ்டசாலியாக பிறந்து விட்டேனே எனத் துயருற்றாள்.

கண்ணீர் கண்களில் புரள முற்படும் போது மனோகரன் எதிரே நிற்பதைக் கண்டு திடுக்குற்றாள். அவசரத்துடன் கண்களை கைகளால் தொடைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன பலத்த யோசனை? எந்தக் கோட்டையைப் பிடிக்க உத்தேசம்?'' எனக் கேட்டு மனோகரன் சிரித்தான்.

யோகராணி வலுக்கட்டாயமாக சிரிப்பை வரவழைத்து உதிர்த்தாள்.

மனோகரன் அவள் முன்பாக அமர்ந்தான்.

''ஊருக்கு போகவில்லையா மனோ?''

''இல்லை.''

''ஏன்?''

''மிடில் ஈஸ்ட்டுக்கு போகாமல் ஊருக்கு போறதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறன். மிடில் ஈஸ்ட் போகும் வரை கொழும்பில தான் இருப்பன்.''

''நல்ல முடிவு.''

''யோகம், நீர் உம்முடைய முடிவை மாற்றமாட்டீரா?''

''என்ர முடிவை எப்போதோ உம்மிடம் சொல்லிவிட்டன். அதை மாற்ற முடியாது.''

சிறிது நேர மௌனம் விழுந்தது. மௌனத்தை மனோகரன் குலைத்தான்.

''அக்கா உம்மோட நேத்தைக்கு டெலிபோனில கதைச் சவவோ?''

''இல்லை.''

''அத்தான் நேத்தைக்கு வேலை கிடைச்சு நைஜீரியாவுக்கு போய்விட்டார். உமக்கு விருப்பமெண்டால் அவர் வரும் வரை தன்னுடன் தங்கி இருக்கலாம் என்று சொன்னவ.''

யோகராணியின் இதயம் சந்தோஷத்தைத் தாங்க முடியாமல் தவித்தது. அவள் எதிர்பார்க்கும் முன் ஒரு பிரச்சினைக்கு பரிகாரம் காணப்பட்டு விட்டது. அந்தளவில் அவள் அதிர்ஷ்டசாலி தான்.

''மனோ, உங்களுக்கு உண்மையைச் சொன்னால் என்ன. எனக்கு இப்ப ஒரு பாதுகாப்பான இடம் தேவைப்படுது'' என்ற யோகராணி, ரவிகுமாரின் வீட்டில் இருந்து வெளியேற வேண்டிய நிலை பற்றி சுருக்கமாகக் குறிப்பிட்டாள்.

அன்று மாலையே மனோகரனின் உதவியுடன் ரவிகுமாரின் வீட்டில் இருந்த சாமான்களைத் தூக்கிக் கொண்டு சுபத்திராவின் வீட்டுக்குச் சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகராணியை சுபத்திரா வாயெல்லாம் பல்லாக வர வேற்றாள்.

மனோகரன் அங்கு இருந்தமையினால் யோகராணியும், சுபத்திராவும் ஒரே அறையை பங்கு போட்டனர்.

அன்றிரவு மூவரும் ஒன்றாக இருந்து சாப்பிட்டனர்.

அச்சமயத்தில் மனோகரன் ஒரு முறை யோகராணியைப் பார்த்துக் கண்சிமிட்டினான். இன்னொரு தடவை கால் பெரு விரலினால் அவள் காலில் சுரண்டினான். இரு தடவைகளும் அவள் அவனைச் சுட்டெரிப்பது போலப் பார்த்தபோது அவன் வெகுளித்தனமான சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு அசட்டுப் பார்வையைப் படரவிட்டான்.

மனோகரனுடன் பழகும் போது சற்று முன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என யோகராணி தீர்மானித்தாள்.

## (36)

அடுத்த ஒரு வாரமும் யோகராணியின் வாழ்க்கையில் குறிப் பிடும்படியான எந்த ஒரு நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. காலையில் வேலைக்கு போவதும், மாலையில் வீட்டுக்கு வருவதும், சமையலறையில் சுபத்திராவுடன் சமையலைக் கவனிப்பதுமாக ஒரு வாரத்தையும் கழித்தாள்.

முதல் நாளன்று கண் சிமிட்டி, கால் பெருவிரலால் சேஷ்டை கள் புரிந்த மனோகரன் அதன் பின் எவ்வித சேஷ்டைகளையும் புரியவில்லை. யோகராணி அவனைப் பார்த்து முறைத்ததினாலோ என்னவோ அவன் அவ்வாறு செய்யவில்லை போலும்.

ஒரு நாள் யோகராணி 'பாத்ரூமுக்குப்' போய் விட்டு வரும் போது எதிர்ப்புறமாக வந்த மனோகரனைக் காணவில்லை. இருவரும் மோதிவிட்டனர். யோகராணி 'சொரி' என்று சொல்லும் முன்னரே அவன் முந்திக் கொண்டு 'சொரி' சொல்லிவிட்டு சென்றான்.

மனோகரனின் மாற்றம் அவளுக்கு முதலில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. என்ன காரணத்தினால் இவனில் இப்படியொரு மாற்றம் ஏற்பட்டது என அவள் வியப்படைவதுண்டு. நாட்கள் செல்லச் செல்ல அவன் மீது ஒரு பற்று ஏற்படுவதை அவளால் உணரமுடிந்தது. அவனைக்காணும் போதெல்லாம் யோகராணியின் உள்ளம் தழும்பியது. அது என்?

மனோகரனுடன் நிறையப் பேசவேண்டும் என்றெல்லாம் யோகராணி விரும்பினாள். ஆனால், அவனோ அவளிடம் இருந்து விலகி இருக்கவே முற்படுவதை அவள் சில சந்தர்ப்பங்களில் அவதானித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
3635C

ஒரேயொரு தடவை மட்டுமே யோகராணியை அவன் அணுகி 'மிடில் ஈஸ்ட்டுக்கு' 'டிரைவர் - ஹவுஸ் மெயிட்' ஜோடியாக இருவரும் போவது குறித்து அவள் தனது முடிவை மாற்றி இருக்கிறாளா எனக் கேட்டான். அவன் அவ்வாறு கேட்டபோது அவள் அவனுக்காகப் பரிதாபப்பட்டாள். அதே வேளை அவனுக்கு உதவும் நிலையில் தான் இல்லையே என நினைத்துக் கவலைப் பட்டாள்.

சில வேளைகளில் யோகராணி, சுபத்திராவுடன் பக்கத்தில் உள்ள கடைக்குச் சாமான் வாங்கப் போவாள். 'ஷொப்பிங்' என்று கோட்டை, புறக்கோட்டை என்று போவாள்.

இவ்விதம் அவள் வீட்டில் முடங்கிக் கிடக்காமல், ஓய்வு நேரங்களில் அங்கும், இங்கும் சென்று வந்ததினாலும், அலுவலகத்தில் வேலையில் மும்முரமாக ஈடுபட்டமையினாலும் மன வேதனையின் வடு மெல்ல, மெல்ல காய்ந்தது. சுபத்திரா, வசந்தா ஆகியோரின் ஆறுதல் வார்த்தைகள் அவளின் மனதுக்கு இதமாக விளங்கின.

தனது வாழ்க்கை இப்போது தெளிந்த நீரோடை போல சென்றதனால் யோகராணி சற்று களிப்புடனேயே காணப்பட்டாள். இடையிடையே பெற்றோர், நாகராஜா மற்றும் சுசிலா, மோகனின் எண்ணம் மனதினுள் புகுந்து விடும்.

நாகராஜாவை எண்ணும்போதெல்லாம் அவன் மீது ஆத்திர உணர்வு ஏற்படுவதுண்டு. அபாண்டமாக பழி சுமத்தி தன்னை அவமானப்படுத்தியது மட்டுமன்றி, நிராகரித்து விட்டதை நினைக்கும் போது அவனைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று கூட எண்ணுவாள். ஆனால், இப்படியெல்லாம் நினைப்பது தவறு என்று ஈற்றில் தன் மனதுக்கு தானே சமாதானம் கூறி அந்த எண்ணத்தை மறந்து விடுவாள்.

ரவிகுமார் இறந்தபின் அவனது இடத்திற்கு சுந்தரலிங்கம் என்பவர் நியமிக்கப்பட்டார். சுந்தரலிங்கத்திற்கு நாற்பது வயது இருக்கும். வழுக்கை மண்டையர். வட்ட முகமும், தடித்த கன்னங்களும், அடர்த்தியான மீசையும், தொந்தி வயிறும் கொண்டவர். முன்னர் அரசாங்க திணைக்களம் ஒன்றில் பணிபுரிந்து 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டவர். ஒரு முன் கோபக்காரர். எல்லோர் மீதும் 'சள், சள்' என்று எரிந்து விழுவார். கொடுத்த வேலையை உடனடியாக செய்து முடிக்காவிட்டால் 'கன்னா பின்னா' என்று ஏசுவார்.

எல்லோரும் அவரது ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளான போதும் யோகராணி அதில் இருந்து தப்பித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு உம்மைப்போல ஒரு மகள் இருந்தாள். ஆனால், காதலில தோல்வியுற்று தற்கொலை செய்துவிட்டாள்" என்று ஒரு நாள் 'டிக்டேஷன்' கொடுக்கும் போது அவர் கூறியிருந்தார்.

சுந்தரலிங்கம் வந்து ஐந்து நாட்களுக்குள் அவரைப்பற்றி 'கசமுசா' என ஏதோ ஒரு கதை அடிபட்டது.

"யோகம், நீர் எக்கவுண்டனோட கவனமாக பழகும். அவர் ஒரு பொம்பளை கள்ளனாம். முந்தி வேலை செய்த ஒபிஸில் இருந்த ஒரு பொம்பிளையைக் கெடுத்தவராம். இதால அவள் பிள்ளைதாச்சி ஆகிவிட்டாளாம். இது சம்பந்தமாக நடந்த விசாரணையின் பிறகு தான் இவரை 'டிஸ்மிஸ்' செய்திச்சினமாம்" என வசந்தா, யோகராணியின் காதில் அந்த 'கசமுசா' வைப் போட்டாள்.

"ஷா! அப்படி இருக்காது. அவர் எவ்வளவு பாசத்தோட என்னோட பழகுகிறார்? தன்ர செத்தமகள் மாதிரி நான் இருக்கிறன் என்று அடிக்கடி சொல்லுவார்."

"அவர் அப்படித்தான் பொம்பளையின்ர அனுதாபத்தைப் பெற பொய் சொல்லுவார். அவர் இன்னமும் கலியாணம் செய்யவில்லையாம்."

"அப்ப எனக்குப் பொய் சொன்னவரோ?"

"ஓமோம். என்றபடியால் கவனமாக இரும்."

"கிழட்டுப் பிள்ளை என்னட்ட வாலை ஆட்ட முடியாது. ஒட்ட வெட்டி விடுவன்" என யோகராணி கூறினாள். எனினும், உள்ளூர பயமும், கவலையும் அவளை கெட்டியாக பிடித்தன.

ராஜரட்னம் தன்னிடம் தவறாக நடக்கப்போய் நடந்த விபரீதங்களை அவள் மறக்கவில்லை.

முள்ளில் சேலை பட்டாலும், சேலையில் முள் பட்டாலும் சேலைக்குத் தான் நஷ்டமும், கஷ்டமும் என்று அவளுக்குத் தெரியும். தன்னைச் சுற்றியுள்ள ஆண்களுடன் கவனமாக பழக வேண்டியுள்ளதே என்பதை நினைத்துப் பார்க்கும் போதெல்லாம் ஆண்வர்க்கம் மீது கசப்புணர்ச்சி தோன்றுவதை அவளால் உணர முடிந்தது.

இன்னொரு வாரம் கழிந்தது.

அந்த வியாழக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் விடுமுறை தினங்களாக விளங்கியமையினால் ஊருக்கு போய் வரவேண்டும் என்று விரும்பினாள். வேலையில் புதிதாக சேர்ந்தமையினால் தாய், தகப்பனின் முப்பத்தியோராம் நினைவு தினத்துக்குக் கூட அவளால் லீவு எடுத்துக் கொண்டு போக முடியவில்லை.

அவளது குடும்பத்திற்கு உறுதுணையாக விளங்கும் முருகேசு சித்தப்பாவிடமே இந்த இரு தினங்களையும் நடத்துமாறு யோக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி கூறியிருந்தாள். அவளது குடும்பத்துடன் முருகேசு குடும்பம் சற்று அந்நியோன்யமாகப் பழகியது. செல்லையா, மங்களத்தின் ஏனைய சகோதரர்கள் ஏதாவது தினம் என்றால் தான் இவர்களது வீட்டை எட்டிப் பார்ப்பார்கள். அவர்கள் எல்லோரும் வசதி படைத்தவர்கள். இவர்கள் வீட்டுக்கு வந்தால் கடன் கேட்டு விடுவார்களோ என்ற அச்சமே இவர்களது வீட்டுப் பக்கம் தலை காட்டவே அஞ்ச வைத்தது.

சில இரத்த உறவுக்காரர்கள் செல்லையாவுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றோ, அதில் மூத்தவள் யோகராணி என்றோ தெரியாத நிலையிலேயே விளங்கினார்கள். அவர்கள் இவர்களை ஒதுக்கி வாழவே, இவர்களும் ஒதுங்கியே வாழ்ந்தார்கள். இல்லாவிடில் செல்லையா இறந்த பின்னர் எவராகிலும் ஒருவர் இவர்களின் குடும்பப் பாரத்தின் பாதியையாவது சுமக்க முன் வந்திருப்பார்கள். இவர்களை ஒதுக்கியவர்கள் இந்த விஷயத்திலும் ஒதுங்கியே வாழ்ந்தனர்.

ஊருக்குச் செல்வதற்கு முடிவு எடுத்த யோகராணி அதனை சுபத்திராவிடம் வெளியிட்டாள்.

"யோகம், எனக்கும் ஒருக்கால் ஊருக்குப் போகவேணும் போலிருக்குது. நானும் வாறன்" என சுபத்திரா கூறிய போது யோகராணிக்கு ஆறுதலாக இருந்தது.

இந்த நாட்களில் ரயிலில் அல்லது பஸ்சில் தனித்துச் செல்லும் போது பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டிவரும் என்பதை யோகராணி புரிந்திருந்தாள்.

மூன்று நாட்கள் எடுத்தால் மொத்தம் ஒன்பது நாட்கள் ஊரில் நிற்கலாம் என்று எண்ணிய யோகராணி தனது லீவு விண்ணப் பத்தை பூர்த்தி செய்து சுந்தரலிங்கத்திடம் நீட்டினாள்.

"ஊருக்கு போகப் போறீரா?"

ஓமென்று தலையாட்டினாள்.

"தனியாகவா?"

"இல்லை துணையுடன்."

"அப்ப போயிட்டு வாரும். இந்த நாட்களில் தனிய போறது பயங்கரம்" என விழிகளை உருட்டியபடி அந்த மனுஷன் கூறியபோது யோகராணி உள்ளூரச் சிரித்தாள்.

வெள்ளிக்கிழமை இரவு தனியார் பஸ்சில் யோகராணியும், சுபத்திராவும் யாழ்ப்பாணம் நோக்கி பயணமானார்கள். மனோகரன் புறக்கோட்டை வரை வந்து இவர்களை வழி அனுப்பி வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிகாமத்தில் இறங்கி இருவரும் பருத்தித்துறை பஸ் எடுத்தனர். யோகராணி வீடு சென்றபோது எட்டு மணியாகிவிட்டது.

அவள் வீட்டுப் படலையை திறந்து கொண்டு உள்ளே போகவும், உள்ளே இருந்து நாகராஜா வெளியேறவும் சரியாக இருந்தது.

யோகராணியைக் கண்டு நாகராஜா அதிர்ந்து விட்டான். கண்களின் கீழே இருந்த நரம்புகள் துடிப்பதை அவள் கண்டு விட்டாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் சில வினாடிகள் பார்த்தனர். அவன் பார்வையில் கசப்புணர்ச்சியும், அவள் பார்வையில் ஏக்கமும் மறைந்திருந்தன.

யோகராணி புன்னகைக்க முயன்றபோது நாகராஜா தலைகுனிந்தான். அவன் செயலால் அவள் ஏமாற்றத்துக்குள்ளானாள்.

யோகராணி முன்னேறினாள். அவனை நோக்கி நடந்தாள். அருகில் சென்றபோது அவன் நெற்றியில் காயம் ஏற்பட்டதற்கான வடுவொன்று இருப்பதைக் கண்டாள். அந்தச் 'சம்பவம்' நினைவுக்கு வந்தது. மோகன் நையப்புடைத்த போது அலறிய வண்ணம் நாகராஜா கீழே விழுந்த காட்சி திரும்பத் திரும்ப அவள் கண்முன் நர்த்தனமாடியது.

''அத்தான்.''- யோகராணி உரிமையுடன் அழைத்தாள்.

தலை உயர்த்திய நாகராஜா அவளை வெறுப்புடன் பார்த்துவிட்டு ஒன்றுமே கூறாமல் நொண்டியபடி சென்றான்.

அவள் மீண்டும் ''அத்தான்'' என்றாள்.

அவள் குரலுக்கு படலை மூடித் திறக்கும் சத்தமே பதிலாகக் கிடைத்தது.

## (37)

பருத்தித்துறை சந்தையில் இருந்து சுமக்க முடியாத சாமான்களை சுமந்தவண்ணம் யோகராணி நடந்து வந்தாள். வெயிலின் அகோரத்தினால் அவள் மேல் சட்டை தெப்பமாக நனைந்து விட்டது. வீதியும் கொதித்ததினால் கால்களை எட்ட வைத்து நடந்தாள்.

அவள் அருகில் சந்திரா காணப்பட்டாள். யோகராணி வந்திருக்கிறாள் என்பதை தமக்கை மூலம் அறிந்த சந்திரா காலையில் பத்துமணி போல் தோழியைத் தேடி வீட்டுக்கு வந்து விட்டாள். கொழும்பில் இருந்து வந்த பயணக் களைப்பு மாறாதிருந்த போதும் வீட்டுக்கு அவசியமான சில சாமான்களை வாங்குவதற்காக யோகராணி பருத்தித்துறை டவுனுக்குச் சென்றாள். சந்திராவும் அவளுடன் பேச்சு துணைக்குச் சென்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் இரு நாட்களும் சந்தையும், டவுனைச் சுற்றியிருந்த கடைகளும் மூடப்பட்டிருந்ததைமயினால் எங்கும் ஒரே கூட்டம். மரக்கறி மற்றும் சாமான்களின் விலை அதிகளவு உயர்ந்திருந்தது. மரக்கறி விற்பவர்களும், மரக்கறியை நிறுக்காமலேயே அந்தந்தப் படியே வாய்க்கு வந்த விலையைக் கூறி விற்பனை செய்தார்கள்.

கொழும்பில் மரக்கறிக்கு செலவளிப்பதைவிட இரண்டு மடங்கு அதிகளவு செலவளித்து மரக்கறி வாங்க வேண்டியுள்ளது என்பதை நினைக்கும்போது யோகராணிக்கு எரிச்சலாக இருந்தது.

சந்திரா வந்ததில் இருந்து யோகராணி பல விஷயங்கள் குறித்து அளவளாவினாள். ரவிகுமார் தன்னை விரும்பியமை பற்றியும், அதனால் ஏற்பட்ட அனர்த்தங்கள் பற்றியும், கொழும்பு பஸ்ஸில் ரவிகுமாரின் தாயைச் சந்தித்தது பற்றியும் யோகராணி தோழியிடம் கூறினாள்.

''சந்திரா, அத்தானுக்கு இப்பவும் என்னோட கோபம் தான். காலமை என்னைக் கண்டவர் முறைத்துக் கொண்டு போனார். அத்தான் என்று சொல்லிக் கூப்பிட்டும் அவர் என்னைத் திரும்பிக்கூட பார்க்கவில்லை'' என யோகராணி அழாக் குறையாகக் கூறினாள்.

"யோகம், நீர் உம்மட அத்தானை மறந்து விடும்'' என்று சந்திரா எடுத்த எடுப்பிலேயே கூறினாள்.

யோகராணி அவளை வியப்புடன் நோக்கினாள்.

"என் இப்படி சொல்லுறீர்?''

''அப்படித்தான்.''

''சொல்லுமன்.''

"நாகராஜா உம்மை மறந்து விட்டார்."

"எனக்குத் தெரியும்."

''என்றபடியால் நீரும் அவரை மறந்து விடும்."

''அவரை மறக்க ஏலாமல் இருக்குது.''

''இல்லை, நீர் அவரை மறக்கத்தான் வேணும்.''

சந்திரா தன்னிடம் 'எதனையோ' மறைக்கிறாள் என்பது யோகராணிக்குப் புரிந்தது. நாகராஜாவை மறக்கும்படி என் கூறினாள்? ஒரு வேளை அவளது தூரத்து சொந்தக்காரப் பெண்ணுக்கும், நாகராஜாவுக்கும் கல்யாணம் நடக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதா? தனது சந்தேகத்தை சந்திராவிடம் கேள்வியாகத் தொடுத்தாள்.

"இல்லை யோகம், அது எப்பவோ குழம்பிப் போச்சுது."

சந்திரா கூறுவது உண்மையெனில் நாகராஜாவை மறக்கும்படி என் கூறுகிறாள்? விடை காண முடியாத புதிராகவே சந்திராவின் கூற்று விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு படுக்கும் வரை இதைப் பற்றியே அடிக்கடி யோசித்தாள். வழமையாக முன் அறையில் படுத்திருக்கும் சுசிலா அன்றைய தினம் யோகராணி படுத்திருந்த அறையிலேயே படுத்திருந்தாள்.

அடிக்கடி "அக்கா படுத்திட்டியா?" என சுசிலா கேட்டாள். "இல்லை" என்று கூறிய போதெல்லாம் அதன் பின் சுசிலா ஏதாவது பேசுவாள் என்று எதிர்பார்த்தாள். சுசிலா மௌனமாகி விடுவாள்.

"உனக்கென்ன பைத்தியமோ? நித்திரையைக் கொள்" என யோகராணி இறுதி முறையாக எரிந்து விழுந்த போதே சுசிலா தன்மனதில் அடக்கி வைத்திருந்த விஷயத்தை வெளியிடத் தயாரானாள்.

"அக்கா, உன்னோட ஒரு விஷயம் பேசணும்."

"சொல்லு."

"நீ நாகராஜா அத்தானை இன்னும் விரும்புறியோ?"

யோகராணிக்குத் 'திக்'கென்றிருந்தது. சுசிலா ஏன் இந்த வினாவைத் தொடுத்தாள்? இது பற்றி பேசவா இவ்வளவு நேரமும் 'பிகு' செய்தாள்? என்றுமே இது பற்றி பேசாதவளுக்கு இன்று ஏன் அவசரம் வந்தது?

தங்கைக்கு என்ன பதிலைக் கூறுவது? யோகராணி பதிலுக்கு தடுமாறினாள். தூங்குவது போல பாசாங்கு செய்து நிலைமையைச் சமாளிப்போமா என யோசித்தாள். எனவே, மௌனத்தைத் தொடர்ந்தாள்.

"அக்கா, சொல்லு."

"சுசி, எனக்கு நித்திரை வருது. நாளைக்கு காலமை கதைப்பம்."

சுசிலாவிடம் இருந்து பதில் வரவில்லை. அது யோகராணிக்கு சாதகமாக விளங்கியது.

சுசிலா ஏன் இப்படியொரு கேள்வியை யோகராணி முன் வைத்தாள்?

நாகராஜாவை மறந்து விடு என சந்திரா கூறியிருந்தாள். நாகராஜாவை விரும்புறியோ என சுசிலா கேட்கிறாள். இதில் ஏதோ விந்தையான உண்மையொன்று மறைந்துள்ளதை யோகராணியினால் அனுமானிக்கக் கூடியதாகவிருந்தது.

பலவிதமான எண்ணங்களை உருவாக்கியும், அழித்தும், தூக்கமின்றி புரண்டவள் நீண்ட நேரத்தின் பின் தன் நிலையை மறந்து தூங்கிவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நள்ளிரவில் தாகம் எடுத்தது. தண்ணீர் குடிக்கும் பொருட்டு கட்டிலில் இருந்து எழுந்தாள். தலையணையின் கீழிருந்த 'டோர்ச் லைட்டை' எடுத்து ஒளியைப் பாய்ச்சினாள். ஒளி சுசிலாவின் மீது பரவிய போது . . . யோகராணிக்குத் தூக்கி வாரிப்போட்டது. சுசிலாவைக் காணவில்லை. அவள் எங்கே?

யோகராணிக்கு பயமாக இருந்தது. சுசிலா எங்கே போய்விட்டாள்? 'வெளியில்' போய் விட்டாளா?

முன் கதவுப் பக்கம் ஒளியைப் பாய்ச்சினாள். கதவு திறந்திருந்தது. யோகராணி கதவைத் திறந்து வெளியில் பார்த்தாள்.

வெளியே ஒரே கும்மிருட்டு. ஒளியை விசிறினாள். முள் வேலிக்கு அருகில் சுசிலா நிற்பது ஒளிக்குள் சிக்கியது. அவள் என்ன செய்கிறாள்?

ஒளியைச் சற்று நகர்த்தினாள்.

சைக்கிள் ஒன்று நிற்பது தெரிந்தது.

யோகராணிக்கு நெஞ்சு இடித்தது.

சைக்கிளில் வந்த யாரோ ஒருவனுடன் சுசிலா பேசுவதை உணர யோகராணிக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

யார் அவன்? யோகராணி ஒளியை உயர்த்தினாள். அதற்கிடையில் சைக்கிள் நகர்ந்தது. கண் இமைக்கும் நேரத்திற்குள் சைக்கிள் மறைந்து விட்டது. சைக்கிள்காரன் யார் என்பது தெரியவில்லை.

ஒளியை சுசிலா மீது பாய்ச்சினாள். அவள் திருட்டு முழியுடன் தமக்கையை நோக்கி வந்தாள்.

யோகராணியின் உடலும், உள்ளமும் கொதித்தன. தங்கையை வாய்க்கு வந்தபடி ஏச வேண்டுமென்ற உத்வேகம் ஏற்பட்டது. ஆனால், நட்ட நடுநிசியில் கத்தி ஊர் முழுவதற்கும் உள்வீட்டுச் சமாச்சாரத்தை வெளியில் விட விரும்பவில்லை.

தங்கையின் கையைப் பிடித்து உள்ளே கூட்டிச் சென்றாள். கதவை மூடினாள். பின் அரிக்கன் விளக்கை ஏற்றினாள். போதிய மண்ணெண்ணெய் இன்றி விளக்கு பொசுக் பொசுக்கென்று எரிந்தது.

"சைக்கிள்ல வந்தவன் ஆர்?"

யோகராணி பவ்வியமாகக் கேட்டாள்.

சுசிலா பதில் சொல்லவில்லை. மௌனமாக நின்றாள்.

"ஊம், சொல்லு. யாரவன்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகராணி அதற்றினாள்.

"நாளைக்கு காலமை சொல்லுறன்."

"இப்ப சொல்லு."

"வேண்டாம் அக்கா. காலமை சொல்லுறன். என்னை வற்புறுத்தாதே."

"பல்லைக் கொட்டி கையில தருவன். இப்ப சொல்லு. யாரவன்?"

"நாகராஜா அத்தான்."

பிரகாசமாக சுடர் விட்டு எரிந்த விளக்கு அடுத்த கணம் அணைந்தது.

யோகராணி நெஞ்சைப் பிடித்தபடி கீழே அமர்ந்துவிட்டாள்.

## (38)

எதிர்பார்ப்பது நடப்பதுண்டு. எதிர்பார்க்காததும் நடப்பதுண்டு. இது வாழ்க்கையின் நியதி. இதனை யாராலும் மாற்ற முடியாது. மாற்ற முனைந்து அது மாறினாலும் அதுவும் நியதியே. இதற்கு மனிதர்கள் தலைவிதி, ஆண்டவன் விட்ட வழி என்ற நாமத்தை சூட்டுகிறார்கள்.

கடந்த சில வாரங்களாக தன் வாழ்க்கையில் நடக்கும் சில விஷயங்களை ஆராயும் பொழுது யோகராணிக்கு தன் தலைவிதியை நினைத்து அழுகைதான் வந்தது. அவள் பெண்தானே? வேதனையைத் தாங்க முடியாத நிலையில் அவளால் அழத்தான் முடிந்தது.

கொழும்புக்கு முதல் தடவையாக செல்வதற்கு ஆயத்தப்படுத்தும் போது தகப்பன் இறந்தார். அது முதல் நடந்த சம்பவங்கள் யாவுமே அவள் மனதை அரித்தெடுத்து விட்டன. ஒவ்வொரு சம்பவமும் அழியாத வடுவினை இதயத்தில் ஏற்படுத்தி விட்டது.

தகப்பன், தாய் ஆகியோரை அடுத்தடுத்து இழந்தாள். ராஜரட்னத்தின் காமவெறிக்கு ஆளாகி தப்பியவள் வீட்டிலிருந்து துரத்தப்பட்டாள். அவளைக் காதலித்த ரவிகுமார் கூறிய பொய்யினால் நாகராஜா அவளை மறந்தான். அவளுக்கும், நாகராஜாவுக்கும் இடைவில் நட்புறவை ஏற்படுத்தும் முகமாக புறப்பட்ட ரவிகுமார் இடைவழியில் இறந்தான். தான் காதலித்த நாகராஜா தங்கை சுசிலாவைக் காதலிக்கிறான்.

யோகராணிக்கு வாழ்க்கை மீது வெறுப்பேற்பட்டது. இனியும் வாழவேண்டுமா என்ற கேள்வியே அவளுள் தோன்றி விசுவரூப மெடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகராஜா அவள் மீது குற்றஞ்சாட்டிய போது அவள் தன்னுயிரை மாய்த்துக் கொள்ள முயன்று சுசிலாவின் குறுக்கீட்டினால் தன் முடிவினை மாற்றினாள். ஆனால், இப்பொழுது உயிரைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு தலைநீட்டியது.

இந்த உணர்வினை மனதில் இருந்து அகற்ற அவள் பிர யத்தனம் எடுத்தாள். தற்கொலை செய்வது கோழைத்தனமென உள்மனம் கூறியது. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற எண்ணமும் அவளிடம் ஏற்பட்டது. என்னதான் துன்பங்கள், துயரங்கள், ஏமாற்றங்கள், தோல்விகள் ஏற்பட்டாலும் வாழ்ந்தே தீருவதென இறுதியாக முடிவு எடுத்தாள். வாழ்க்கையில் எதிர்நீச்சல் அடிப்பது என்று கங்கணம் கட்டினாள். கொஞ்சம், கொஞ்சமாக மனதைத் திடப்படுத்தினாள்.

சுசிலாவைக் கூப்பிட்டாள். அவள் தயங்கித் தயங்கி வந்தாள். முதல் நாளிரவு நடந்த சம்பவத்தின் பின் தமக்கையை நேருக்கு நேர் பார்க்க சுசிலா அஞ்சினாள். தலை குனிந்தபடி நின்றாள்.

"சுசி, நாகராஜாவை இப்படி இரவில சந்திச்சு கதைக்காதை. அது பார்க்கிறதுக்கு வடிவில்லை. ஊரில இருக்கிற ஆட்கள் சிரிப்பினம். அவரை வீட்டுக்குள்ளை கூட்டிக் கொண்டு வந்து கதைச்சு விட்டு அனுப்பு." யோகராணி புத்திமதி கூறினாள்.

சுசிலா உடனடியாக ஒன்றும் கூறவில்லை. தமக்கையின் முகத்தை ஆராய்ந்தாள். அதில் தெளிவு நிரம்பி இருக்கவே "அக்கா" என மெல்ல அழைத்தாள்.

"என்ன?"

"உனக்கு நான் துரோகம் இழைச்சு விட்டன் என்று நீ நினைக்கிறியா?"

யோகராணி வரட்டுப் புன்னகையொன்றை உதிர்த்தாள்.

"சினிமா வசனம் பேசாதை. அத்தான் போல நானும் அவரை மறந்து விட்டன். அவர் இப்ப வெறும் அத்தான் மட்டும்தான். அவரில எனக்கு எந்தவித கோவமும் இல்லை. உன்னிலையும் ஒரு கோவமும் இல்லை" என்று கூறும்போதே யோகராணியின் நாத்தழுதத்தது.

## (39)

மாலையில் நாகராஜா வந்தான்.

படலை திறந்து மூடும் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த யோக ராணி, நாகராஜா வருவதைக் கண்டு "வாங்க அத்தான்" என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்முகத்துடன் வரவேற்றவள் "சுசி, அத்தான் வந்திருக்கிறார்" என உள்ளே பார்த்து குரல் கொடுத்தவள் அங்கிருந்து அகன்று குசினிக்குள் முடங்கினாள்.

அவள் இவ்விதம் நடந்தது நாகராஜாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. சுசிலா பேந்தப் பேந்த விழித்தபடி வந்தாள்.

அதன் பின் நாகராஜாவும், சுசிலாவும் சிரித்துப் பேசுவதைக் கண்ட போது யோகராணிக்கு மனதினுள் லேசான வேதனை கிளம்பிய போதும் அவள் ஒருவாறு அதனை அடக்கினாள். அவனை ஒரு விருந்தாளி என்ற நிலையில் நிறுத்தி அவள் அவனுக்குத் தேநீர் பரிமாறினாள்.

"அக்கா, அத்தானோட கதைச்சுக் கொண்டிரு. நான் ஒருக்கால் வெளியில போயிட்டு வாறன்" என்ற சுசிலா அங்கிருந்து அகன்றாள்.

சில வினாடிகள் யோகராணியும், நாகராஜாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். யார் முதலில் பேசுவது என்று தெரியாமல் தடுமாறினர். நாகராஜாவின் முகத்தில் குற்ற உணர்வு மெலியதாக படிந்திருந்தது.

"அத்தான்."யோகராணி மௌனத்தைக் குலைத்தாள்."உங்களிடம் ஒரு உண்மையை அறியலாமா?"

"உண்மை தானே? சொல்லுறன்."

"ரவிகுமார் உங்களிட்ட என்னைப் பற்றி என்ன சொன்னார்? நீங்க என்னை ஏன் மறந்நிங்க?"

"யோகம், ரவிகுமார் உம்மை உயிருக்கு உயிராக 'லவ்' பண்ணி இருக்கிறார். ஆனால், நீர் அவரைக் காதலிக்கவில்லை என்று அறிந்து வேதனைப்பட்டிருக்கிறார். நீர் என்னை விரும்புறீர் என்பதை எப்படியோ அறிந்து விட்டார். இதனால் மாமியின்ர செத்த வீட்டுக்கு வந்த போது என்னைச் சந்தித்து தனக்காக உம்மை விட்டுத் தரும்படி கெஞ்சினார்."

"உடன என்னை மறந்திடுறதாகச் சொன்னீங்களா?"

"இல்லை. நான் உம்மை விட்டுத் தரமுடியாது என்று சொன்னன். இல்லை தனக்காக விட்டுத்தர வேணும்; இல்லாவிட்டால் நஞ்சு குடிச்சிடப் போவதாகக் கூறினார். அப்போதும் நான் மசியவில்லை. சும்மா என்னை வெருட்டுகிறார் என்று தான் நினைச்சன். ஆனால் உண்மையாகவே நித்திரை குளிசைகளைக் கொண்டு வந்து என்ர முடிவைக் கேட்டார். இனியும் நான் முரண்டு பண்ணினால் தேவையில்லாமல் அவர்ட்ட உயிர் போய்விடும் என்று பயந்தன். அதனால அவர்ட்ட சொல்லுக்கு கட்டுப் பட்டன். இதனால என்ர காதலை அவருக்காக தியாகம் செய்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
PUBLIC LIBRARY
JAFFNA

அவர்தான் உம்மிலை எந்தெந்த குற்றச்சாட்டுக்களை சுமத்தலாம் என்றும் சொல்லித் தந்தார். அதனால் தான் உம்மை கண்டபடி ஏசினன்.''

''நீங்க ஒன்று நினைச்சீங்க. ரவிகுமார் ஒன்று நினைச்சார். ஆனால் வேறு ஏதோ ஒன்று நடந்திருக்குது.''

''உண்மைதான். ரவிகுமாருக்காக உம்மை தாரைவார்த்துக் கொடுத்தும் அதால ஒரு பிரயோசனமும் இல்லாமல் போயிட்டுது. அவர் அநியாயமாக செத்திட்டார்.''

''என்னை அப்படி தாரைவார்த்து உங்களால கொடுக்க ஏலாது. நான் என்ன பண்டமாற்று சாமானா? நீங்க இரண்டு பேரும் சேர்ந்து காதலின்ர புனிதத்தன்மையைக் கெடுத்திட்டீங்க.''

நாகராஜா பதில் அளிக்காமல் மௌனமாக நின்றான்.

''அத்தான், இனியும் நான் இதைப்பற்றிக் கதைக்க விரும்ப வில்லை. முடிஞ்சது முடிஞ்சு போய்ச்சுது. இனி கதைச்சுப் பிரயோசனமில்லை. நான் இன்னும் இரண்டு, மூன்று நாளல கொழும்புக்கு போய் விடுவன். நீங்களும், சுசிலாவும் கவனமாக நடந்து கொள்ளுவீங்க என்று நினைக்கிறன்.''

''எனக்கு என்னிலை நம்பிக்கை இருக்குது.'' நாகராஜா உறைப்பாகக் கூறினான்.

''பருவக் கோளாறு நம்பிக்கையை வீணடித்து விடும். என்றபடியால் கவனமாக இருங்கோ.''

யோகராணி வாய்மூடும் போது சுசிலா அங்கு வந்தாள்.

## (40)

சந்திராவினால் முதலில் நம்ப முடியவில்லை.

''உண்மையைத் தானே சொல்லுறீர்'' எனத் தோழியிடம் கேட்டாள்.

''ஓம் சந்திரா. என்ன காரணத்தினாலோ அத்தான் சுசிலாவை விரும்புகிறார். அவளும், அவரை விரும்புகிறாள். நான் ஏன் குறுக்க நிற்பான்?''

''யோகம், நீர் உண்மையிலேயே ஒரு தியாகி தான்.''

''பெரிய சொல்லுகளைச் சொல்லி என்னை பெருமைப்படுத்த வேண்டாம்.''

''யோகம், இனி என்ன செய்யுறதென்று இருக்கிறீர்?''

''வாழ்க்கை வாழ்வதற்கே என்று இருக்கப் போறன்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கலியாணம் முடிக்கிறதைப் பற்றி என்ன நினைக்கிறீர்?''

''கலியாணம்? முடிக்கிறதைப் பற்றி நினைப்பதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறன்.''

''எவ்வளவு காலத்திற்கு?''

''சாகும் வரைக்கும்.''

''உமது மன உறுதியைப் பார்ப்போமே.''

யோகராணி கொழும்புக்குப் பயணமானாள்.

கொழும்பு சென்ற பின்னரே, சுபத்திரா கொழும்பு திரும்ப வில்லை என்பதை மனோகரன் மூலம் யோகராணி அறிந்தாள்.

''எனக்கு முந்தி கொழும்புக்குத் திரும்புவதாக சுபத்திரா சொல்லி இருந்தாவே.''

''வரத்தான் இருந்தாவாம். ஆனால், இப்போதைக்கு வரமுடியாதாம்.''

''என்? எதும் பிரச்சினையோ?''

மனோகரன் நமுட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தான். ''அக்கா, சத்தி எடுக்கிறாவாம்.''

''ஓ!'' என்ற யோகராணி வாயைப் பிளந்தாள்.

எப்படியும் சுபத்திரா கொஞ்ச நாட்களுக்கு கொழும்புக்கு வரமாட்டாள். எனவே, யோகராணியும், மனோகரனும் தனியாக அந்த வீட்டில் இருக்க வேண்டும். அதனை அவள் விரும்பவில்லை.

ஏற்கனவே ரவிகுமாருடன் தனியாக இருக்கப் போய் விளைந்த அனர்த்தங்களை அவள் இன்னும் மறக்கவில்லை. ஒரு முறை சூடு பட்டவள் இனியும் சூடுபட தயாரில்லை.

இதனைத் தவிர்த்துக் கொள்ள எதாவது வழியைக் காண வேண்டும்.

## (41)

சமையல் அறையில் இடியப்பம் அவிப்பதில் யோகராணி மும்முரமாக ஈடுபட்டிருந்தாள்.

சுபத்திரா இல்லாதபடியினால் அவள்தான் சமையலைக் கவனிக்க வேண்டியிருந்தது. சமையலுக்குத் தேவையான சாமான்களையும், மரக்கறிகளையும் மனோகரன் வாங்கிக்கொண்டு வந்து கொடுப்பான்.

மனோகரன் மிகவும் மரியாதையுடனும், பண்புடனும் யோகராணியுடன் பழகினான். அவன் சில வேளைகளில் பழகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதத்தை எண்ணும் போது அவளுக்கு மனதினுள் சிரிப்பு முகிழ்ந்து விடும். சில வேளைகளில் அவளது சொல்லுக்கு நூற்றுக்கு நூறுவீதம் கட்டுப்பட்டு நடந்தான்.

அவனுடன் ஒரே வீட்டில் இருப்பதற்கு முதலில் அஞ்சிய யோகராணி ஓரிரு நாட்கள் நிலைமைகளை அனுசரித்த பின் வீட்டில் இருந்து வெளியேறுவது பற்றி முடிவு எடுப்போம் என எண்ணினாள். ஆனால், தனக்கு சாதகமாகவே காரியங்கள் இடம் பெறுகின்றன என்பதை கண்முன்னே கண்டபின் அவள் தன் எண்ணத்தை அமுக்கினாள்.

எனினும், இரவு வேளைகளில், படுக்கும் முன் அறைக்கதவு நன்கு மூடப்பட்டுள்ளதா என்பதை ஒன்றுக்கு இரண்டு தடவைகள் ஆராய்ந்த பின்னரே படுக்கைக்குப் போவாள். ஏற்கனவே கதவைத் தாழ்ப்பாள் போடாமல் ராஜரட்ணம் அங்கு வந்து அதனால் ஏற்பட்ட விபரீதங்களை அவள் இன்னும் மறக்கவில்லை. அந்த விபரீத சம்பவம் இந்த அறையிலேயே நடந்தது என்பதும் அவளுக்கு மறந்து போய்விடவில்லை.

இரு வாரங்கள் விரைந்தன.

குறிப்பிடும்படியாக எந்தவொரு சம்பவமும் அவள் வாழ்வில் நடைபெறவில்லை. அந்த மட்டில் அவளுக்கு திருப்தி.

மனோகரனும் அவளுடன் பழகும் விதத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அவன் ஒவ்வொரு செய்கையிலும் 'மனோ ஒரு ஜென்டில்மன்' என்பதை நிரூபித்தான்.

ஒரு நாள் மனோகரன் வீட்டில் இருக்கவில்லை. 'எங்கேயோ' போய் விட்டான். எக்கவுன்டன் சுந்தரலிங்கம் அவளைத் தேடி வீட்டுக்கு வந்திருந்தார்.

அவரது வரவை யோகராணி விரும்பாத போதும் முகத்தைச் சுளிக்காமல் வரவேற்றாள்.

வீடு முழுவதையும் பார்வையினால் அலசிய சுந்தரலிங்கம் ''ஷா! நல்ல வசதியான வீட்டிலைதான் இருக்கிறீர்'' என்றவர் நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

யோகராணி மௌனம் சாதித்தாள்.

''யோகம், நானும் வசதியான வீட்டிலைதான் இருக்கிறன். ஆனால், மனச்சந்தோஷம் இல்லை. நான் சொன்னால் நீர் நம்பமாட்டீர். 'ஒபிஸ்' விட்டபின் நேராக வீட்டை போகமாட்டன். ஏன் தெரியுமா? வீட்டை போக எனக்கு விருப்பமில்லை. என்ர மனுசிக்கு விசர். அது ஒரு அங்கொடை 'கேஸ்'. ஒரு விசரியோட இருபத்திரண்டு வருஷங்காளக வாழுறன்'' என்றவரின் கண்கள் கலங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

111416

சுந்தரலிங்கம் மீது யோகராணி கொண்டிருந்த தப்பபிப் பிராயம் அவளின் மனதில் இருந்து அகன்றது. அவர் மீது பச்சாதாபம் ஏற்பட்டது. அவளுக்கும் கண் கலங்கியது.

''இருபத்திரண்டு வருஷ மண வாழ்க்கையில் என்ன மிஞ்சியது. ஒன்றுமில்லை. ஒரேயொரு மகள். அவள் செத்து விட்டாள். எனக்கென்று என்ன இருக்குது? ஒன்றுமே இல்லை. சட்டம் இடம் கொடுத்திருந்தால் மனுசியை 'டைவோஸ்' செய்துவிட்டு வேறு ஒருத்தியைக் கலியாணம் செய்திருப்பன்.''

சுந்தரலிங்கம் நிறுத்தினார். கலங்கிய கண்களைத் துடைத்தார்.

இவற்றையெல்லாம் திடீரென அவர் ஏன் தன்னிடம் கூறுகிறார் என்ற சந்தேகம் யோகராணிக்கு ஏற்பட்டது. அவள் தொடர்ந்தும் மௌனத்தையே சாதித்தாள். அதன் மூலம் அவரது உள்நோக்கம் என்ன என்பதை அனுமானிக்க முயன்றாள்.

''யோகம், இப்ப என்ர மனுசிக்கு விசர் மெத்திப் போச்சுது. நேத்தைக்கு கத்தி எடுத்துக் கொண்டு என்னைக் குத்தவும் வந்து விட்டாள். ஒரு மாதிரி தப்பி விட்டன். இல்லாவிட்டால் நான் செத்திருப்பன்.''

மீண்டும் யோகராணி மௌனத்தைக் கடைப்பிடித்தாள்.

''யோகம், நானும் எத்தனை நாளைக்குத்தான் என்ர உணர்ச்சிகளை அடக்கி வைக்கிறது? உணர்ச்சிகளை அடக்கி அடக்கியே நானும் விசராகி விடுவனோ என்று பயப்படுறன். என்ற படியால் நான் ஒரு கல்யாணம் முடிக்கலாம் என்று நினைக்கிறன்.''

சுந்தரலிங்கம் சுற்றி வளைத்து எந்த விஷயத்திற்கு வருகிறார் என்பதை யோகராணி புரிந்தாள்.

அவரது எண்ணத்தை முளையிலேயே கிள்ளி விட வேண்டுமென எண்ணினாள்.

''யோகம், எதோ தெரியலை. எனக்கு உம்மிலை ஒரு பிடிப்பு. உம்மை நான் விரும்புறன். நீர் ஓம் என்று சொன்னால் என்னோட சந்தோஷமாக வாழலாம்.''

யோகராணிக்கு உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை கொதித்தது. சுந்தரலிங்கத்தின் ஒவ்வொரு சொல்லும் ஆத்திரத்தை ஊட்டியது. 'டேய மொட்டையா, நீ கெட்ட கேட்டுக்கு இன்னொரு பொம்பளை உனக்குத் தேவையோ?' எனக் கேட்டு காறித் துப்ப வேண்டும் என்ற குரோத எண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டது. எனினும், தனது ஆத்திரத்தை வெகு சிரமத்துடன் கட்டுப்படுத்தி பேசாமல் இருந்தாள்.

''யோகம், என்ன சொல்லுறீர்?''

''உங்களை கையெடுத்துக் கும்புடுறன். தயவு செய்து இஞ்ச இருந்து போங்கோ'' என கெஞ்சும் குரலில் கூறினாள்.

''யோகம்'' என கொஞ்சும் பாவனையில் சுந்தரலிங்கம் அவளைப் பார்த்தார்.

''பிளீஸ் இஞ்ச இருந்து போங்கோ. என்னை அப்படிப் பார்க்காதீங்க. என்ர மனம் மாறாது. நான் ஒரு நிரந்தரமான முடிவு எடுத்திருக்கிறன்.''

''என்ன?''

''கலியாணமே முடிக்கிறதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறன். என்னைக் குழப்பாதீங்க. எனக்கு நிறைய வேலை இருக்குது. போயிட்டு வாங்க'' என அவள் தன்னுள் ஏற்பட்டிருந்த ஆத்திரத்தை அடக்கிய வண்ணம் பணிவாகக் கூறினாள்.

''ஏன் இப்படி ஒரு முடிவு எடுத்திருக்கிறீர்.''

''அது என்ர சொந்த விஷயம். உங்களுக்கு சொல்லத் தேவையில்லை.''

''யோகம், நீர் உம்முடைய முடிவை எனக்காக மாத்த வேணும்.''

''நீங்கள் எனக்கு யார்?''

''நான் உம்மட எக்கவுன்டன். உம்மை விரும்புறன். உமக்கு வாழ்வு கொடுக்க விருக்கிறன்.''

''எனக்கு ஒருவரும் வாழ்வு கொடுக்கத் தேவையில்லை. உங்களுக்கு ஒரு பொம்பளை தேவையென்றால் பேப்பரில விளம்பரம் போடுங்க. நிறைய 'அப்ளிக்கேஷன்' வரும். நல்லதொன்றை 'செலக்ட்' பண்ணுங்க. கலியாணம் கட்ட ஏலுமென்றால் கட்டுங்க. இல்லாவிட்டால் வைப்பாட்டி மாதிரி வைத்திருங்க.''

''யோகம், எனக்கு நீர் தான் வேண்டும். உம்மோட தான் என்ர வாழ்க்கையை பிணைக்க விரும்புறன். உமக்குத் தான் வாழ்வு கொடுக்க விரும்புறன். நீர் உம்மட முடிவை மாத்த வேணும்''

''முடியாது, முடியாது.'' யோகராணி உச்சஸ்தொனியில் கத்தினாள்,

''உமக்கு ஒரு கிழமை அவகாசம் தாறன். அதற்கிடையில யோசிச்சு ஒரு முடிவுசொல்லும். அவசரமில்லை.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரலிங்கம் அதன் மேல் அங்கு நிற்கவில்லை. வீட்டை விட்டு வெளியேறினார்.

அவர் போன கையோட யோகராணிமுன் கதவை தாழ்ப்பாள் போட்டு மூடினாள். அவளால் மேலும் அங்கு நிற்க முடியவில்லை. விரைந்து அறைக்குச் சென்று கட்டிலில் 'தொப்' பென விழுந்தாள்.

சுந்தரலிங்கத்தின் வேண்டுகோளை நினைக்க நினைக்க அவள் வயிறு பற்றி எரிந்தது. என்ன துணிச்சலாக வீட்டுக்கு நேரில் வந்து இப்படிக் கேட்கிறார்? ஒரு பெண் தனியாக ஒருவர் துணையுமின்றி இருப்பதனால் தான் அவருக்கு இந்த துணிச்சல் வந்ததா என எண்ணினாள்.

எவ்வளவோ பெண்கள் இருக்கும் போது எல்லோருமே தன்னை நாடுவது எதற்காக என்ற கேள்வி அவளுள் உருவெடுத்தது. அவள் அழகி அல்ல. கவர்ச்சியானவளும் அல்ல. சுமாரான தோற்றமுடையவள். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். நாகரீகத்தின் சாயல் படியாதவள். இருந்தும் அவளை நாடுகிறார்கள். ஏன்? அவளில் அப்படி என்ன இருக்கிறது?

"யோகம், நீர் அப்படியொன்றும் வடிவு இல்லை. ஆனால், உம்மிலை ஏதோ ஒரு கவர்ச்சி மறைந்திருக்கிற மாதிரி எனக்கு தோன்றுகிறது" என்று ஒரு முறை நாகராஜா கூறியது யோகராணியின் ஞாபகத்திற்கு வந்தது.

யோகராணி எழுந்தாள். சுபத்திராவின் அறைக்குச் சென்றாள். அங்கு ஆள் உயரமான ஒரு நிலைக்கண்ணாடி இருந்தது. அதில் தனது தோற்றத்தை நோக்கினாள். அப்படியும், இப்படியும் திரும்பி பார்த்தாள். புன்னகைத்துப் பார்த்தாள். சிரித்துப் பார்த்தாள். உடம்பைக் குலுக்கிக் குலுக்கி பார்த்தாள். ஊகும்! அவளுக்கு தன்னில் ஏதாவது கவர்ச்சி மறைந்திருக்கிறதா என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

'நான் கவர்ச்சியானவளும் இல்லை! அப்படியென்றால் .....?'

யோகராணியின் சிந்தனை தடைப்பட்டது. கதவு தட்டப்படும் சத்தம் அவள் சிந்தனையைக் குழப்பியது.

யார் கதவைத் தட்டுகிறார்கள்?

சுந்தரலிங்கம் திரும்பி வந்து விட்டாரா?

இதயம் படபடத்த நிலையில் கதவை நோக்கி நடந்தாள். கதவை அடைந்தாள்.

"யாரது?"

"நான் தான்." மனோகரன் குரல் கொடுத்தான்.

நிம்மதி பெருமூச்சை விட்டபடி கதவைத் திறந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோகரன் தலையைத் தொங்கப் போட்டபடி நின்றான். அவன் உள்ளே வரவில்லை. அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏன் உள்ளே வரத் தயங்குகிறான்?

''வாங்க உள்ளே.'' யோகராணி அழைத்தாள்.

தயங்கித் தயங்கி உள்ளே வந்தான்.

''ஏன் என்னவோ போல இருக்கிறீங்க?''

''ஏஜன்ட் ஒருவரை இப்ப சந்திச்சு விட்டு வாறன். சவுதியில டிரைவர் வேலை இருக்குது. அமெரிக்கன் கம்பெனி. நல்ல சம்பளம். ஆனால் ஒரு ஹவுஸ் மெயிட்டையும் கூட்டிக் கொண்டு வா என்று சொல்லுகிறான். கொமிஷன் கூட ஐயாயிரம் ரூபா தான். நீர் உதவி செய்தால்...........''

யோகராணி அவனை அனுதாபத்துடன் நோக்கினாள். ''சொரி மனோ, என்னால உங்களுக்கு உதவ முடியாது.''

மனோகரனின் முகம் திடீரென மாறியது. யோகராணி அதை அவதானித்தாள். அந்த மாற்றம் அவள் வயிற்றைக் கலக்கியது.

மனோகரன் அவளை நோக்கி முன்னேறினான்.

யோகராணியின் இதயம் ஸ்தம்பித்தது.

## (42)

சிந்திக்காதது, எதிர்பார்க்காதது, எண்ணி இருக்காதது யோகராணியின் வாழ்க்கையில் சமீபகாலமாக நடந்து வருகின்றன. அப்படியொரு சம்பவம் நடந்து விட்டது. ஆனால், அந்தச் சம்பவம் மிகவும் பயங்கரமானது. அவளைப் படுகுழிக்குள் தள்ளுமளவுக்கு நிகழ்ந்து விட்டது.

மனோகரன் மிருகம் போல நடந்து விட்டான்.

அவனின் பிடியிலிருந்து தப்புவதற்காக அவள் வீட்டின் பல இடங்களுக்கும் ஓடிய போதும் அவன் அவளை விடவில்லை. அவளைத் துரத்தியபடியே இருந்தான். இறுதியில் அவனிடமிருந்து அவளால் தப்ப முடியவில்லை. அவன் இரும்புக் கரங்களுக்குள் அவள் சிக்கினாள்.

யோகராணி என்ற மலர் கசங்கியது.

மனோகரன் தன் வெறியை அடக்கினான்.

தன் கற்பை பாதுகாக்க அவள் எவ்வளவோ பாடுபட்டும் அவளால் முடியவில்லை.

அவன் தனது ஆண்மையினை நிரூபித்து விட்டான். ராஜரட்னத்தால் அடைய முடியாததை அவன் அடைந்து விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் பெண்மை அழிந்து விட்டது. அவளது கத்தல், கதறல், கெஞ்சல் யாவற்றையும் உதாசீனம் செய்து விட்டு, அவன் தன் இச்சையை தணித்து விட்டான்.

யோகராணி உயிரிலும் மேலாக காப்பாற்றி வந்த கற்பு, அரை மணி நேரத்தில் களங்கப்படுத்தப்பட்டது.

அவள் நிலத்தில் கிடந்தபடியே கண்ணீர் விட்டு அழுதாள். எவ்வளவு தான் அழுதாலும் இதயத்தை விட்டு வேதனை அகலவில்லை. அழுதுகொண்டே இருந்தாள்.

யோகராணி துளியளவும் எதிர்பார்க்கவில்லை. மனோகரன் இப்படி மிருகமாக மாறுவான் என நினைத்திருக்கவில்லை.

அவனுக்கு இப்படி ஒரு வெறி ஏற்பட்டதற்கு காரணம் என்ன?

அவள் மீது ஏற்பட்ட கோபம், ஆத்திரம் இப்படியான ஒரு வெறியைத் தோற்றுவித்ததா? அல்லது பல நாளாக காத்திருந்து இன்று தனது வெறியைத் தீர்த்துக் கொண்டானா? அல்லது, அவளை வழிக்குக் கொண்டு வருவதற்கு அவளுக்கு களங்கத்தை ஏற்படுத்தினானா?

ஒவ்வொரு கேள்வியையும் எழுப்பி பதில் அறிய முயன்ற போது அவளுக்கு தன் மீதே அளவுகடந்த ஆத்திரம் கிளம்பியது. அதிர்ஷ்டம் கெட்டவளாகப் பிறந்து விட்டேனே என எண்ணும் போது மீண்டும் அழுகை வந்தது.

இந்த இழி நிலையில் இனியும் வாழத்தான் வேண்டுமா?

கற்பை இழந்த பின் வாழ்வதே அர்த்தமற்றது என்று எண்ணினாள்.

எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்த போது முழு உலகமும் இருண்டு வருவது போன்ற உணர்வே ஏற்பட்டது.

வாழ வேண்டுமா?...... வாழ வேண்டுமா?

யோகராணி ஒரு முடிவுக்கு வந்தாள்.

உயிரைப் போக்குவது என்ற முடிவை அவள் எடுத்தாள்.

எழுந்தாள். உடல் எல்லாம் பயங்கரமாக வலித்தது.

நின்றாள். நிற்க முடியவில்லை. வலியைப் பொருட்படுத்தியபடி நின்றாள். கண்களைச் சுழற்றினாள்.

மனோகரன் வாசல் கதவுக்கு அருகில் நின்றான்.

மெல்ல அடியெடுத்து முன்னேறினாள்.

அவன் எவ்வித உணர்ச்சியும் இன்றி அவளைப் பார்த்தபடி நின்றான்.

யோகராணி அவனை நெருங்கினாள். அவனைப் பார்க்கப் பார்க்க... ஆத்திரம் நரம்புகளை முறுக்கேற்றின. பற்களை கடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம், "மனோ, நீ ஒரு மிருகம்" என்று கர்ஜித்தாள். அவன் மீது காறித்துப்பினாள். துப்பல் அவன் மேனியில் படிந்தது.

மனோகரனின் முகத்தில் ஒரு மாற்றமும் இல்லை. அவளை வெறித்துப் பார்த்தான்.

"விடுறா நாயே வழியை."

அவன் முகத்தில் இன்னும் மாற்றமில்லை.

"விடுறா."

மனோகரனின் இதழ்கள் துடித்தன. "யோகம், இப்ப எங்க போகப்போறீர்?" சாந்தமான குரலில் அவன் கேட்டான்.

"அது உனக்கு வேண்டாம். என்னை வெளியில போக விடு."

"கற்பு போய்விட்டதே. இனி இந்த உலகில வாழுறது அர்த்தமற்றது. சாகிறது தான் மேல் என்று நினைத்து ஒரு முடிவை எடுக்கத்தானே வெளியில போறீர்?"

"அந்தக் கதை உனக்கு வேண்டாம். என்னைப் போக விடு.

"சொன்னால் தான் போக விடுவன்."

அவள் பதில் கூறவில்லை. ஆத்திரத்தில் அவள் பற்கள் தாள மிட்டன.

"உம், சொல்லும். சொல்லி விட்டு போம்."

தன் உள்ளத்தில் மறைந்திருப்பதை வெளியிட அவள் தயாராக இருக்கவில்லை. மௌனத்தைத் தொடர்ந்தாள்.

"யோகம், இப்ப நீர் ஆத்திரத்தில இருக்கிறீர். நீர் ஏதாவது முடிவை எடுத்திருந்தால் அது ஆத்திரத்தில எடுத்த ஒரு முடிவாகத்தான் இருக்கும். என்றபடியால் சற்று யோசிச்சு ஒரு முடிவை எடும்."

அவள் கோபம் மீண்டும் கட்டை மீறியது.

"அதற்காக நீ செய்ததை மறந்து விட வேண்டும் என்று நினைக்கிறியா?"

"இல்லை, இது ஏன் நடந்தது என்று யோசியும்."

மனோகரன் கூறியவை அவள் இதயத்தை தைத்தது. நிதானமாக யோசித்தாள். என்ன சொல்கிறான்? எதை அடிப்படையாக வைத்து இதைக் கூறினான்?

ஆத்திர உணர்வை மழுங்கச் செய்யும் விதத்தில் அவன் கருத்து அமைந்து விட்டது.

"இது ஏன் நடந்தது என்று யோசியும்."

மனோகரன் கூறிய வார்த்தைகள் மீண்டும், மீண்டும் யோகராணியின் காதுகளில் எதிரொலித்தன.

இது ஏன் நடந்தது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியவில்லை.

''மனோ . . . மனோ . . . .'' அவளால் பேச முடியவில்லை. வார்த்தைகள் வரத்தயங்கின.

''கேளும் யோகம்.''

''மனோ . . . . என்ன சொல்லுறீங்க?''

''உம்மட மனதை மாத்துறதுக்காகத்தான் இப்படி நடந்தன்.''

''விளங்கவில்லை.''

''சந்திரா எல்லா விஷயமும் எழுதி இருந்தா. நாகராஜா சுசிலாவைக் கலியாணம் முடிக்க போறாராம். உம்மை காதலித்தவர் சுகபோகம் அனுபவிக்க முற்படும்போது நீர் வெறுமையான வாழ்க்கையை நடத்துறதா?''

''மனோ, அது என்ர விருப்பம். எனக்கென்று ஒரு கொள்கை இருக்குது. அது சரியோ பிழையோ நான் அதைக் கடைப்பிடிக்கிறன். நாகராஜாவை நான் விரும்பினன். ஆனால் என்னவோ காரணத்தினால அவர் என்னை மறந்து சுசிலாவை விரும்புகிறார். அவையல் இரண்டு பேரும் கலியாணம் முடிக்க பெர்மிஷன் கொடுத்து விட்டன். நான் இப்படி வாழ்ந்திட்டுப் போறன். அதில ஆருக்கு என்ன கஷ்டம்?''

''எனக்கு இருக்குது. நான் இருக்கக்கிலை நீர் என் பட்டமரமாக வேணும்.''

''மனோ, நீங்க என்னை விளங்கிக் கொள்ளாமல் கதைக்கு நீங்க. என்ர வாழ்க்கையில ஒருவர் தான் என்ர மனதில இருக்கலாம்.''

''நீர் இன்னும் பழைய சம்பிரதாயத்தில மூழ்கியிருக்கிறீர். ஒருத்திக்கு ஒருவன், தியாகம் அது இது என்று சொல்லி உம்மட வாழ்க்கையை குழப்பிப் போடாதையும்.''

''மனோ, மோகன் படிச்சு முடிக்கும் வரை நான் என்ர வாழ்க்கையை தியாகம் செய்யத்தான் வேணும்.''

''யோகம், மோகன் ஒரு இயக்கத்தில சேர்ந்து அக்கரைக்கு போய்ட்டானாம்.''

''என்ன?''

''உண்மையைத்தான் சொல்லுறன். நீர் உம்மட வாழ்க்கையைத் தியாகம் செய்து தங்கச்சியையும், தம்பியையும் வாழ வைக்க திட்டம் போட்டீர். ஆனா, அவையல் உமக்குச் சொல்லாமலேயே தங்கட வாழ்க்கையை நிர்ணயித்து விட்டினம்.''

''அது பரவாயில்லை. அது அவையின்ர இஷ்டம். என்ர இஷ்டம் இப்படியே தனித்து வாழுறது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்மால தனிய வாழ முடியுமா? இந்த ஆம்பிளைச் சமூகம் வாழ விடுமா? சுந்தரலிங்கம் உம்மோட கதைச்சதை நான் இந்தக் காதால கேட்டனான் . . . யோகம், ஒரு பொம்பளை இந்த உலகத்தில 'தனியா வாழுறது கஷ்டம்."

"அது அவரவர் மனப்பக்குவத்தைப் பொறுத்தது."

"இல்லை வாழ முடியாது."

"வாழலாம்."

"அப்படி நீர் நினைக்கிறதென்டால் உம்மட கற்பை என் காப்பாற்ற உம்மால முடியவில்லை?"

"அது . . ."யோகராணி மேலும் பேச முடியாமல் தவித்தாள்.

"யோகம், 'பிரக்டிக்கலா' எல்லாத்தையும் நினைச்சுப் பாரும். சும்மா அந்தக் காலத்தில ஒருத்திக்கு ஒருவன் என்டதை இந்த நாளில நடைமுறைப்படுத்த நினைக்கிறீரே. அப்படி எல்லா பொம்பளைகளும் நினைச்சால் ஆம்பிளைகளுக்கு கலியாணம் கட்ட பொம்பளைகளே கிடையாமல் போய்விடும். இப்ப கலியாணம் கட்டுற பெரும்பாலான பொம்பளைகளுக்கு எல்லாம் புருஷன் தான் முதலாவது காதலனா?"

யோகராணி பதில் கூற வாயெடுக்க முயன்ற போதும், அவளால் பதில் அளிக்க முடியவில்லை.

"எனக்கொரு கொள்கை இருக்கும்போது. . . ." அவள் இழுத்தாள்.

"கொள்கையும், மண்ணாங்கட்டியும். அதை மறந்து விடும். இப்ப நீர் எனக்குரியவள் என்றதை நினைத்து இனி என்ன செய்யலாம் என்று சொல்லும்."

அவள் பதில் கூறாமல் தலைகுனிந்தாள்.

மனோகரன் அவளை நெருங்கி அவள் கைகளைப் பற்றினான். கைவிரல்களில் நடுக்கம் தெரிந்தது.

வெப்பமான இரு கண்ணீர்த் துளிகள் அவன் கைகளை நனைத்தன.

(முற்றும்)

36350.c

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர்பற்றி......



பருத்தித்துறை, ஆத்தியடியை சொந்த ஊராகக் கொண்ட சோ. ராமேஸ்வரன் கடந்த 23 வருடங்களாக எழுத்துத்துறையில் ஈடுபட்டு வருகின்றார். இவர் எழுதிய சிறுகதைகள், நாவல்கள், குறு நாவல்கள், கட்டுரைகள், நகைச்சுவைக் கட்டுரைகள், விமர்சனங்கள் மற்றும் பேட்டிக் கட்டுரைகள் ஆகியன இலங்கையில் வெளிவரும் சகல தமிழ்ப் பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளன. எஸ். ராமேஷ், ஆத்தியடியூரான், புஷ்பா தங்கராஜா, ஆர். பிரசன்னா ஆகிய பெயர்களிலும் இவர் தனது படைப்புக்களை வெளியிட்டுள்ளார். யதார்த்தமான, மண் வாசனையுள்ள கதைகளை எழுதும் இவர் ஜனரஞ்சக மற்றும் மர்மக் கதைகளையும் எழுதியுள்ளார்.

இதுவரை பத்துக்கு மேற்பட்ட சிறுகதைகளையும், இருபதுக்கு மேற்பட்ட நாவல்களையும், எண்ணற்ற கட்டுரைகள், நகைச்சுவைக் கட்டுரைகள் மற்றும் பேட்டிக் கட்டுரைகள் ஆகியவற்றையும் எழுதியுள்ளார். இவர் 'வீரகேசரி' வார வெளியீட்டில் எழுதிவந்த ''வாடா மச்சான் ஊருக்கு'', ''கொழும்பில் ஒரு ததிங்கிணதோம்'' ஆகிய அரசியல் சாயம் பூசப்பட்ட இரு நகைச்சுவைத் தொடர் கட்டுரைகள் பல மாதங்களாக வெளியிடப்பட்டன. தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் இவர் சிறு கதைகள் எழுதியுள்ளார். இவர் எழுதிய ஐந்து ஆங்கிலச் சிறுகதைகள் 'த ஐலண்ட்', 'சன்' ஆகிய பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன.

''யோகராணி கொழும்புக்குப் போகிறாள்'' என்ற இந்த நாவல் 'மித்திரன்' தினசரியில் 1985 ஆம் ஆண்டில் தொடராகப் பிரசுரிக்கப்பட்டபோது, பலரினதும் பாராட்டைப் பெற்றது.

'வீரகேசரி' நிறுவனத்தில் உதவி ஆசிரியர், விவரண ஆசிரியர் ஆகிய பதவிகளை வகித்த இவர் 1980 முதல் கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தில் தகவல் வெளியீட்டு உத்தியோகத்தராகக் கடமையாற்றுவதுடன், இந் நிறுவனம் வெளியிடும் ''கமநலம்'' என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் விளங்குகிறார்.

விலை: 85/-

ISBN - 955 - 610 - 097 - 0

வெளியீடு:
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
கொழும்பு 2 - பானலுவ; பாதுக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org